கனகசபாபதி சரவணபவன்







# வரலாற்றுத் திருகோணமலை





திருகோணமலை வெளியீட்டாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றுத் திருகோணமலை

கனகசபாபதி சரவணபவன்

TRINCO PUBLISHERS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Copyright © 2003
All Rights Reserved by Kanagasabapathy Saravanapavan
Postfach 1623, 47515 Kleve, Germany

SALES IN INDIA : KUMARAN PUBLISHERS
3, Ma galvinayagar Street,
Vadapalani, Chennai - 26.

Title: Varalaatruth Thirukonamalai ( Historic Trincomalee )
Author: Kanagasabapathy Saravanapavan
Edition: 1st Edition, May 2003
Publisher: Trinco Publishers,
346 Anpuvalipuram , Trincomalee, Sri Lanka.
Book Layout: : N. Selvarajah. Luton, UK
Cover Design: Selvaratnam Sehajeevan. London, UK
Page: 272

Printed in India

நண்பர் Dr.S. ஞானி நினைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் இருந்து நாம் கற்கும் பாடம்
என்னவெனில், வரலாற்றிலிருந்து, ஒருவரேனும்,
ஒரு பாடம் கூடக் கற்கவில்லை
என்பது தான்.

ஜேர்மன் தத்துவஞானி Hegel ( 1770—1831 )



# என்னுரை

தேசியம், சுயநிர்ணயம் குறித்து இருபத்தோராம் நூற்றாண்டின் பார்வை விரிவாக்கம் பெற்று வருகின்ற வேளையில், வரலாற்றுத்துறை ஆர்வம் பொது மக்களிடையே அதிகரித்து வருவதைக் காணமுடிகின்றது. நாளாந்த அரசியல் நெருக்கடிகள் ஒரு சாதாரண குடிமகனை அரசியலுக்குள் இழுத்து விடுகின்ற போது அவன் வரலாறு குறித்து பேச முற்படுவதைப் பார்க்கின்றோம். கல்வி நிறுவனங்களில் வரலாற்றுக் கல்வி குறித்த ஆர்வம் குறைவடையும் போது பொது மக்களிடையே வரலாற்று ஆர்வம் அதிகரித்து வருகின்றது. நமது கல்வி நிறுவனங்கள் கால ஒழுங்கு நிரலில் கடந்த கால நிகழ்வுகளைத் தொகுத்துக் கூறும் துறையாகவே வரலாற்றுக் கல்வியை மதிப்பிடுகின்றன. மரபுசார் வரலாற்றுக் கல்வியில் சமுதாய மாற்றத்தைத் தோற்றுவிக்கும் பொருளாதார மாற்றங்கள் குறித்து அதிகம் பேசப்படுவதில்லை. ஒரு சமூகத்தின் பொருளாதார அமைப்பில் ஏற்படும் மாற்றமே வரலாற்றைத் தீர்மானிக்கின்றது. விமர்சனமற்ற வரலாற்றுக் கல்வி "ஒரு ஊரில் ஒரு இராசா இருந்தார்... .." என்ற கதை போன்றது.

பௌத்த பாளி நூல்களான தீபவம்சம், மகாவம்சம் போன்று தமிழ்ப் பிரதேசங்களின் ஆட்சியாளர்கள் குறித்து தமிழில் நூல்கள் இல்லை. எனவே திருகோணமலை வரலாற்றைக் கால ஒழுங்கு நிரலில் வரிசைப்படுத்தி எழுத முடியாமற் போகின்றது. இலங்கையின் வரலாற்றைக் கூறும் பௌத்த பாளி நூல்கள் சிங்கள, பௌத்த அரசின் நலனுக்காக எழுதப்பட்டவையாகும். பௌத்த நலனிலே தமிழர்களின் தலையீடு ஏற்பட்ட கால கட்டங்களில் மட்டுமே தமிழர்கள் பற்றிய குறிப்புக்களைக் காணக்கூடியதாக உள்ளது. வரலாற்றாய்வாளர் ஜி.சி.மென்டிஸ் இலங்கையின் வரலாற்றுக் காலத்தை இந்திய வரலாற்றுக்காலம். ஐரோப்பிய காலனித்துவக் காலம் எனப் பிரித்திருப்பது போன்றே திருகோணமலை வரலாற்றையும் பார்ப்பது பொருத்தமானதாகும். இந்நூலிலே திருகோணமலை வரலாறு போர்த்துக்கேசர் வருகை வரை பார்க்கப்பட்டுள்ளது. திருக்கோணேஸ்வரம் போன்றே திருகோணமலைத் தமிழ் மக்களின் வரலாறும் கிறிஸ்த்து காலத்திற்கு முன்பிருந்தே ஆரம்பிக்கின்றது என்பதை இந்நூல் ஆதாரங்களுடன் ஆராய்கின்றது.

இந்நூலிலே திருகோணமலை வரலாற்றுடன் தொடர்பான தமிழக வரலாற்றுப் பின்னணிகள் விரிவாக ஆராயப்பட்டுள்ளன. திருகோணமலை வரலாற்றைப் புரிந்து கொள்வதற்குக் தமிழக வரலாற்று அறிவு மிக அவசியமாகின்றது. தென்னிந்திய அரசுகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுச்சி திருகோணமலை வரலாற்றை மாத்திரமல்ல. இலங்கை வரலாற்றின் போக்குகளையும் நேரடியாகத் தீர்மானித்திருக்கின்றது. இலங்கையில் தமிழர்களின் பண்பாடும், இந்து மதமும் நிலைத்திருப்பதற்குத் தமிழக அரசுகளே காரணமாகும். இலங்கை வரலாற்றில் எதிரிகளாகவோ அல்லது நண்பர்களாகவோ தலையிட்ட தமிழக ஆட்சியாளர்கள் அனைவரும் தமிழர்கள், இந்துக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் இராசராச சோழனின் அரசியற் பிரவேசம் முக்கியமானதாகும். திருகோணமலையிற் குளக்கோட்டன் பணி தொடர்வதற்கும் சோழர்கள் உருவாக்கிய தளமே அடிப்படையாக அமைந்தது.

இலங்கையின் வரலாற்று ஆய்வுகள் பரந்தளவிற் செய்யப்படவில்லை. பொது மக்கள் மத்தியில் உருவாகிவரும் தேசியம், சுயநிர்ணயம் தொடர்பான ஆர்வம் வரலாற்றை நாடு, பிராந்தியம், நகர் என்ற பல பரிமாணக் கூறுகளாக அறியத் தூண்டுகின்றது. பொது மக்களுக்கு வரலாற்றுச் சான்றாதாரங்களைப் பெற்றுக் கொள்வதிற் பல இடர்கள் உள்ளன. பல ஆய்வு நூல்கள் சாதாரண பொது மக்களின் கைகளுக்கு வெகு தொலைவில் உள்ளன. பல பயனுள்ள நூல்களை இலங்கையின் ஒரு சில நூலகங்களில் மாத்திரம் பெற முடிகின்றது. பல்கலைக்கழக நூலகங்களில் பல்கலைக் கழகத்திற் கல்வி கற்று முடித்தோர் மாணவர்களுக்குக் கூட அனுமதி மறுக்கப்படுகின்றது. பல்கலைக்கழக ஆய்வுகளுக்காகச் சமர்ப்பிக்கப்படும் ஆய்வுக் கட்டுரைகள் அச்சிற் பரவலாகக் கிடைக்கப் பெறாத நிலையில் நூலகங்களின் கட்டுப்பாடு ஆய்வாளர்களுக்கு பெரும் தடையாகிவிடுகிறது. நமது நகரங்களில் உள்ள நூலகங்களும் தமது பிராந்தியம் தொடர்பாக வெளிவந்த ஆய்வுகளைச் சேகரித்து வைப்பதில் அதிக அக்கறை கொள்வதில்லை. வரலாற்று ஆவணங்களை எதிர்காலச் சந்ததியினரின் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டிய பாரிய பணி அனைவருக்கும் உண்டு. நமது வரலாறு உரத்துப் பேசப்பட வேண்டுமென்ற பாரதி சொன்னது போல "மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை" என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

திருகோணமலை தொடர்பாக இதுவரை வெளியான ஆய்வுகளிற் கலாநிதி செ. குணசிங்கம் எழுதிய *கோணேஸ்வரம்* மிக முக்கியமானதாகும். இவரே திருகோணமலை மாவட்டத்தில் உள்ள பல கல்வெட்டுக்களைத் தேடிக் கண்டறிந்து பிரதிசெய்து வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தவர். *திருகோணமலைத் தொடர்* என்ற பெயரில் அவர் வெளியிட்ட ஆங்கில மொழியில் எழுதப்பெற்ற சிறு நூல்கள் பல காத்திரமான தகவல்களை வெளிக் கொண்டுவந்துள்ளன. அவருடன் சாம்பல்தீவுக் கிராமசபை உறுப்பினராக இருந்த நா.தம்பிராசா திருகோணமலை மாவட்ட



சாசனங்களைக் கண்டறிவதிற் பெரும் ஆர்வம் காட்டியவர். திருகோணமலை மக்களினாற் கலாநிதி. செ.குணசிங்கத்தின் திருகோணமலைப் பிரவேசம் என்றும் நினைவு கூரப்படும். பல வரலாற்றுச் சான்றுகள் மறைந்து போகும் ஆபத்தான நிலையில் இந்து சமயக் கலாசார அமைச்சு திருகோணமலை தொடர்பான சில தொல் நூல்களை மீளப் பதிப்பித்து உதவியிருக்கின்றது. அவற்றுள் கோணேசர் கல்வெட்டு, தட்சண கைலாய புராணம், திருகோணமலையின் திருத்தலங்கள் என்பன குறிப்பிடத்தக்கன. பண்டிதர் இ.வடிவேல் அவர்கள் மறைந்து போகும் நிலையில் இருந்த பல ஏடுகளைப் பாதுகாத்து வெளியிட உதவியவர். பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் திருகோணமலை குறித்து எழுதியுள்ள பல கட்டுரைகள் அவருடைய ஆழமான வரலாற்றுப் புலமையை எடுத்துக்காட்டுகின்றன. இவர்கள் அனைவரும் திருகோணமலைச் சமூகத்தின் நன்றிக்கு உரியவர்கள்.

இந்நூலுக்காக பல சாசனங்களிலிருந்தும், வரலாற்று நூல்களிலிருந்தும் ஆதாரங்கள் காட்டப்பட்டுள்ளன. மூல நூல்களில் உள்ளவாறே அவற்றின் மொழி நடை அமைந்துள்ளது என்பது கவனத்திற்குரியது.

திருகோணமலை வரலாறு தொடர்பான தேடலிலே பிரித்தானியப் பாதுகாப்பு அமைச்சின் நூலகம் பயன்பாட்டிற்கு எட்டியது நன்றியுடன் நினைவு கூரக்கூடியது. பல ஆவணங்களையும், கிடைத்தற்கரிய பல புகைப்படங்களையும் பிரதி எடுக்க அனுமதித்த பிரித்தானியப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி திரு C.A Rowsell அவர்கள் என்றும் என் மதிப்பிற்கு உரியவர். மேலும் இந்நூல் ஆக்கலிற்கு நெதர்லாந்துத் தேசிய நூலகம் பயன்பட்டிருக்கின்றது.

இந்த நூலை உருவாக்க முனைந்த போது ஆதரவுக் கரங்கள் தந்த அன்பு உள்ளங்கள் பல. இந்த நூலின் மூலப் பிரதிகளைக் கணிப்பொறியில் நூல் வடிவப்படுத்த உதவிய இனிய நண்பர் நூலகர் என். செல்வராஜா, அட்டைப்படத்தை வடிவமைத்த நண்பர் திரு செபரத்தினம் செபஜீவன், எனது வரலாற்று ஆய்வுகள் குறித்த தேடுதல்களிற் பங்கெடுத்த திருமதி சாந்தினி சரவணபவன், இந் நூலை அச்சிட்டு உதவிய அன்பு நண்பர் செ.கணேசலிங்கன் ஆகியோருக்கு எனது இதயம் நிறைந்த நன்றிகள்.

கனகசபாபதி சரவணபவன் திருகோணமலை 14.02.2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


வரலாறும் சான்றாதாரங்களும் 9

திருகோணமலைத் தமிழ் வரலாற்று இலக்கியங்கள் 37

பெருங் கற்காலம் ஆதிக் குடிகள் 57

திருக்கோணேஸ்வரமும் தோற்றக காலமும் 79

தென்னிந்திய அரசுகளின் எழுச்சிக் காலம் 93

கஜபாகு 149

குளக்கோட்டன் 153

பொலநறுவை அரசின் வீழ்ச்சியும் திருகோணமலைச் சிற்றரசுகளின் எழுச்சியும் 179

இந்துமதமும் பௌத்தமும் 183

திருகோணமலையில் வன்னியர்கள் 193

திருகோணமலைச் சமூகங்கள் 209

திருகோணமலைத் தொல் மரபுகளும் வழமைகளும் 253

உசாத்துணை நூல்கள் 267




# வரலாறும் சான்றாதாரங்களும்

மனிதன் அரசு என்ற ஒரு சமூக நிறுவனத்தைத் தோற்றுவிப்பதற்கு முற்பட்ட கால வரலாற்று ஆய்வுகள் மனித சமூகத்தின் கூர்ப்புத் தொடர்பான தேடலாகவே உள்ளன. அரசு என்ற நிறுவனத்திற்கான தேவை உருவாகுவதற்கு முன்பாகவே நாடோடிகளாக வாழ்ந்த மக்கள் ஓரிடத்தில் நிலை கொள்ள வேண்டிய தேவை உருவாகிவிட்டது. அரசு என்ற ஒரு அமைப்பு உருவாகிய பின்னரும் மனித நகர்வுகள் தவிர்க்க முடியாத ஒரு தேவையாக இருந்திருக்கின்றது. சமூகவியலாளரின் அரசுக்கான வரைவிலக்கணத்தில் முக்கியம் பெறும் எல்லைகள் மனித நகர்வுகளைப் போலவே மாற்றம் பெறுகின்றன. உலக வரலாறு பதிவு செய்யப்பட்ட தொடக்கக் காலகட்டத்திலிருந்து நாடுகளின் எல்லைகள் சுருங்கியும், விரிந்தும் பல்வேறு மாற்றங்கள் பெறுவதை அவதானிக்க முடிகின்றது. வரலாறு பதிவு செய்து கொண்ட பல நாடுகள் தற்கால உலகப் படத்திலிருந்து மறைந்துவிட்டன. குறிப்பாக முதலாவது உலகப் போருக்குப் பிந்திய பூகோள வரைபடத்தில் பல புதிய சுதந்திர தேசங்கள் இடம் பிடித்து வருகின்றன. சமூகவியலாளரின் பார்வையில் எதிர்கால நிகழ்வுகள் பூமிப் பந்தில் இன்னும் பல புதிய நாடுகளுக்கான எல்லைகளை வரையப் போகின்றன. மனிதனின் ஆரம்ப கால நகர்வுகளினால் தேசங்களின் எல்லைகள் மாற்றமடைந்தது போலன்றி, மனிதனுடைய தேசியம் தொடர்பான தேடல்களே புதிய நாடுகளை உருவாக்கப் போகின்றன என்பது அவர்களின் வாதம். தேசிய இனங்களுக்கான நிகழ்கால நெருக்கடிகளை உன்னிப்பாக அவதானிக்கும் ஒருவர் முன் கூறப்பட்ட சமூகவியலாளர்களின் கருத்துடன் முரண்பட முடியாது. அரசுகளின் தோற்றமும், வளர்ச்சியும் பற்றி ஆராய்கின்ற போது தேசியம் தொடர்பாக எழுகின்ற நெருக்கடிகளை இலகுவில் அறிந்து கொள்ள முடியும்.

இலங்கையில் தேசிய இனங்கள் நிர்வகித்து வந்த பல தன்னாட்சி அரசுகள் காலனித்துவ ஆட்சியாளர்களின் நிர்வாகத் தேவைக்காக ஒன்றிணைக்கப்பட்டன. பிரித்தானியக் காலனித்துவ அரசினால் இலங்கைத் தீவானது முழுமையாக 1815இல் ஒரு தனி நிர்வாக அலகாகப் பிரகடனம் செய்யப்பட்டதை இலங்கையின் வரலாறு கூறுகின்றது. இலங்கையில் அரசுகளின் தோற்றமும், வளர்ச்சியும் பற்றி ஆராய முற்படும் போது இலங்கை சிங்கள- தமிழ் இராச்சியங்கள் தெரிந்து அறிய முடிகின்றது. இன்று வரலாற்றுத்துறை ஆர்வம் பொது மக்களிடம் பரவலாக ஏற்படுவதற்குத் தேசிய அடையாளம் குறித்த தேடுதலே காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு என்ற ஒரு அமைப்பு அடையாளங் காணப்படுவதற்கு முன்பிருந்த சமூக அமைப்புக் குறித்து தேடுதல் ஆர்வம் பரவலாக ஏற்பட்டிருப்பதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இலங்கையின் ஆதிக் குடிகள் பற்றிய ஆய்வு இலங்கை மக்களின் பூர்வீகம் தொடர்பான உண்மைகளை வெளிச்சத்திற்கு கொண்டு வர உதவும் என்பது ஆழமான நம்பிக்கை. மனிதக் கூர்ப்புக் கோட்பாடு போன்றே ஆதிக் குடிகள் பற்றிய ஆய்வுகளும், கோட்பாடுகளும் முரண்பாடான கருத்துக்களுடன் வளர்ச்சியடைந்து வருகின்றன. இதற்கு ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்ட தளங்களே காரணமாகின்றன. ஆதிக் குடிகள் தொடர்பான கல்விசார் ஆய்வுகளும், மறு முனையில் நிகழ்கால அரசியல் காரணங்களுக்காக ஒரு குறிப்பிட்ட இனம் சார்ந்த தொல் பொருள் அகழ்வுகளுமே முன் கூறப்பட்ட இரு தளங்களாகும். இந்த இரு தளங்களில் இருந்து வெளிக் கொண்டு வரப்படும் கருத்துக்களும், கோட்பாடுகளும் வரலாற்று ஆய்வாளர்களிடையே ஒரு கருத்துக் குழப்பத்தை உருவாக்குகின்றன. ஏனைய துறைகளைப் போலவே தொல் பொருள் அகழ்வியலிலும் கல்விசார் ஒழுக்கத்தின் அவசியம் தேவை என்பதையே மேற்படிக் கருத்துக் குழப்பம் சுட்டி நிற்கின்றது. இலங்கைத் தொல்பொருள் அகழ்வுப் பணி 1875 இல் ஆரம்பித்து வைக்கப்பட்ட போதிலும் கூட குறிப்பாகச் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால ஆய்வுகளில் கல்விசார் ஒழுக்கம் பேணப்படவில்லை என்பது பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும்.

இருபதாம் நூற்றாண்டில் வரலாறு தொடர்பான தேடுதல்களும், நோக்கங்களும் பல்வேறு கால கட்டங்களில் மாற்றம் பெறுவதை வெளிப்படையாக அவதானிக்க முடிகின்றது. இருபதாம் நூற்றாண்டின் வரலாற்று எழுத்தியலானது தேசியம், விடுதலை, இன ஒடுக்கல், பிரதேசவாதம் தொடர்பாக அதிகளவில் பயன்படுத்தப் படுகின்றது. இத்தகைய வரலாற்று எழுத்தியலின் போக்குகளை நடப்பு அரசியலே ஊக்குவிக்கின்றன. தேசிய விடுதலையில் வரலாறு வகிக்கும் பங்கு பெரியளவில் மதிக்கப்படுவதால், வரலாற்றுப் பதிவுகள் குறித்த விமர்சனங்கள் அரசியல் நோக்கிலிருந்து தோற்றம் பெறுவது தவிர்க்க முடியாமல் போகின்றது. தேசியம், சுயநிர்ணயம் தொடர்பான இருபத்தோராம் நூற்றாண்டின் பார்வை விரிவாக்கம் பெற்று வருவதனால் வரலாற்றுத் தளமும் பிராந்தியம், நாடு, பிரதேசம், நகர் எனப் பல புவியியற் கூறுகளாக ஆராயப்பட வேண்டிய தேவையை உருவாக்குகின்றது. திருகோணமலை பற்றியும் சிறப்பாகக் கோணேசர் ஆலயம் பற்றியும் எழுதியவர்களில் பலர் வரலாற்றுத்துறைக்குரிய பயிற்சியும் மனப்பாங்கும் வாய்க்கப் பெறாதவராக இருந்துள்ளனர். இதன் விளைவாய் வரலாற்றுக்குப் பதிலாகப் பௌராணிகச் செய்திகளும் கட்டுக்கதைகளுமே கற்றோரிடையே கூடப் பரவலாக நிலவியும் நிலை பெற்றும் இருந்தன.(1)



இலங்கையின் பண்டைய வரலாற்றிலிருந்து இன்றைய அரசியற் களம் வரையிலான பல அரசியற் போக்குகளின் திருப்பு முனைகளைத் திருகோணமலை நிகழ்வுகள் தீர்மானித்திருக்கின்றன. திருகோணமலைச் சமூகத்தின் வரலாற்றுத் தடத்தில் துறைமுகமும், கோணேசர் ஆலயமும் அதிக செல்வாக்குச் செலுத்தியிருக்கின்றன. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கொட்டியாரக் குடாவிற்குத் தென்கிழக்காக அமைந்துள்ள இலங்கைத்துறை என அழைக்கப்படும் துறைமுகமே அதிகளவில் தமிழகத்துடன் தொடர்பைக் கொண்டிருந்தது. திரியாய்ப் பாறைக் கல்வெட்டின் மூலம் வெளிநாட்டு வணிகர்கள் திரியாய்ப் பகுதியிற் தொடர்பு கொண்டிருந்ததை அறிய முடிகின்றது. வடக்கே திரியாயிலிருந்து தெற்கே இலங்கைத் துறைமுகம் வரையிலான திருகோணமலை மாவட்டக் கடலோரக் குடாக்கள் வெளிநாட்டுத் தொடர்பு மையங்களாக இருந்திருக்கின்றன.

இலங்கையில் அரசுகளின் தோற்றத்திற்கு முன்பிருந்த சமூகத்தினர் எல்லைகளற்ற வாழிடத்தைக் கொண்டிருந்தார்கள். இலங்கைக்குப் புத்தர் வருகை தந்த காலகட்டத்தில் வாழ்ந்த இயக்கர், நாகர் குறித்த செய்திகள் பௌத்த பாளி நூலான மகாவம்சத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன. குறிப்பாக நாக மன்னர்களுக்கிடையே ஏற்பட்ட அரசுரிமை முரண்பாட்டைப் புத்தர் தீர்த்து வைத்தார் என மகாவம்சம் கூறுகின்றது. புத்தரது விஜயத்திற் கூறப்படும் நாக அரசர்கள், நாக இளவரசியான பிலியவளை ஆகியோர் பற்றி வரும் குறிப்புக்கள் ஐதீகங்களாக இருந்தாலும் இப்பகுதியில் நிலவிய அரசமைப்புச் செய்தியையே குறிக்கின்றது என்பதை ஆரம்பப் பிராமிக் கல்வெட்டுக்கள் எடுத்தியம்புகின்றன.(2) என்னும், இலங்கை வரலாற்றாசிரியர்களில் பலர் விஜயனின் வருகைக்கு முந்திய இலங்கை வாழ் ஆதிக் குடிகளை நாகரீகமான மனித சமூகத்தினராக ஏற்க மறுப்பதுவே இலங்கையின் ஆதிக் குடிகள் குறித்த ஆய்வின் முதற் தடையாகின்றது.

திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டியாரம், குச்சவெளி ஆகிய பகுதிகளில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற் காலத்துக்குரிய கறுப்பு, சிவப்பு மட்பாண்டத் தொல்பொருள் சிதைவு கள் ஒரு நாகரீகமான ஆதித் திராவிட மக்கள் வாழ்ந்திருக் கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்துகின்றன. மேற்படி அகழ்வாய்வுச் சிதைவுகளும், தமிழ் நாடு அரிக்கமேட்டில் கிடைக்கப் பெற்ற பெருங் கற்காலச் சிதைவுகளும் ஒத்த தன்மை உடையனவாகக் காணப் படுகின்றன. இரு அகழ்வுச் சிதைவுகளும் ஒரே பண்பாடுடைய மக்கள் கூட்டத்தினரே இரு நாடுகளிலும் வாழ்ந்தார்கள் என்பதைக் காட்டுகின்றன. குச்சவெளி, கொட்டியாரம் ஆகியவற்றில் கண்டறியப் பட்ட பெருங் கற்காலத்திற்குரிய சிதைவுகளே புத்தளம் மாவட்டத்தில் உள்ள பொம்பரிப்பில் (பொன்பரிப்பு) உள்ள தாழிக் காட்டிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டன. இந்தச் சிதைவுகள் கி.மு 1000க்கும் கி.மு 250க்கும் இடைப்பட்டதாகக் கருதப்படும் பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரியதாகக் கணிக்கப்படுவதால், திருகோணமலை மாவட்டத்திலும் இக்காலகட்டத்தில் நாகரீகமான மக்கள் வாழ்ந்ததை உறுதி செய்ய முடிகின்றது.

பூமிப் பந்தின் பல்வேறு மையங்களில் வாழ்ந்த மனிதக் குழுக்களின் வளர்ச்சி மாற்றங்கள் ஒரே கால கட்டங்களில் நிகழவில்லை. குறிப்பாக இந்திய உப கண்ட நிலமானிய முறையை ஆராய்ந்த வரலாற்று அறிஞர்கள் கோசாம்பி, ரோமிலா தாப்பர் என்பவர்கள் நிலமானிய முறை வட இந்தியாவில் உருவாகி பல நூற்றாண்டு காலத்திற்குப் பின்னரேயே தென்னிந்தியாவில் தோற்றம் பெற்றதாகக் கருதுகின்றனர். இவ்வாறே உலகில் தோன்றிய அரசுகளும் வெவ்வேறு கால கட்டங்களிலேயே உருவாகின. இலங்கையைப் பொறுத்தவரை கரையோரங்களின் வளர்ச்சியும், உள்நாட்டுப் பகுதியின் வளர்ச்சியும் ஒரே கால கட்டத்தில் ஏற்பட்டதாகக் கொள்ள முடியாது. இலங்கையின் கரையோரப் பகுதிகளே முதலில் வெளிநாட்டு வணிகத் தொடர்பை பெற்றுக் கொண்டன. குறிப்பாகத் திருகோணமலை, மாந்தோட்டம் ஆகியன வெளிநாட்டு வணிகர்களின் வணிகத் துறைமுகங்களாகவே இருந்தன. தென்மேற்கு ஆசியாவையும், தென்கிழக்காசியாவையும் இணைக்கும் வணிக மையங்களாகப் பண்டைய இலங்கைத் துறைமுகங்கள் காணப்பட்டன. வணிக உறவாக உருவாகிய வெளிநாட்டுத் தொடர்பே பண்பாட்டுத் தொடர்புக்குக் காரணமாகியது. இலங்கையில் ஏற்பட்ட வெளிநாட்டுக் குடியிருப்புகள் ஆரம்பத்தில் வணிகக் குடியிருப்பாகவே உருவாகின. மேற்காசிய வணிகர்களும், தென் கிழக்காசிய வணிகர்களும் சந்திக்கும் இலங்கையின் வணிக மையங்களில் திருகோணமலை மாவட்டம் முக்கியம் பெற்றிருந்திருக்க வேண்டும். வெளிநாட்டு வணிகர்கள் குறித்த செய்திகளைத் திரியாய்ப் பாறைக் கல்வெட்டு உறுதி செய்கின்றது.

திருகோணமலை வரலாற்றில் தமிழகத் தொடர்புகளே வரலாற்றின் மீள் மாற்றமடையாப் பாதிப்புகளை உருவாக்கின. இலங்கையின் கேந்திர அமைவானது தமிழகத் தொடர்புக்கு அடிப்படைக் காரணமாக அமைந்தது. இலங்கை-இந்திய நாடுகளுக்கிடையிலான மிகக் குறைந்த நீர்ப்பரப்பு இரு நாடுகளுக்கிடையிலான வணிகப் பண்பாட்டுத் தொடர்புகளுக்குத் தடையாக அமையவில்லை. தமிழக அரசியலில் உருவான எழுச்சி இலங்கைத் தீவின் அரசியலிலும் மாற்றங்களை உருவாக்கின. தமிழகத்தில் சிம்மவிஸ்ணுவின் வழி வந்த பல்லவ அரசர்கள் உருவாக்கிய பேரரசு பிற நாடுகளுடன் வணிக, அரசியல் தொடர்புகளை உருவாக்க வழிகோலியது.



பல்லவர் காலத்தில் எழுச்சி பெற்ற மணிக்கிராமம், நகரத்தார் போன்ற வணிக அமைப்புகள் திருகோணமலை நகரில் வணிக ஆதிக்கத்தை உருவாக்கிய போதிலும், வரலாற்றின் ஆரம்ப காலங்களில் இருந்து வணிக நகராக இருந்த திருகோணமலையைச் சோழர்களே முதலில் படைத்துறை நகராக மாற்றி அமைத்தார்கள். இராஜராஜ சோழனும், இராசேந்திர சோழனும் நடத்திய தென் கிழக்காசியக் கடற்போரில் திருகோணமலைத் துறைமுகம் முக்கிய பங்கை வகித்துக் கொண்டது. சோழரின் அகன்ற தமிழகக் கொள்கையில் திருகோணமலை முக்கிய தளமாக இருந்திருக்கின்றது. மாந்தையான இராஜராஜபுரமும், திருகோணமலையும் சோழரது இராணுவ மையங்களாகத் தெரிவு செய்யப்பட்டு இராணுவக் கடற்படை நடவடிக்கைகளின் ஒருங்கமைக்கப்பட்ட மையங்களாக்கப்பட்டிருந்தன என்பதை சோழர் காலக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியின் கீழ் திருகோணமலை கொண்டுவரப்பட முன்னர் தமிழகத்தின் அரசியல், பண்பாட்டுத் தாக்கம் அதிகளவு திருகோணமலையில் ஏற்பட்டது. திருகோணமலை மாவட்டத்தில் தமிழர் பண்பாட்டை வலிமை பெறச் செய்தவர்கள் இராஜராஜ சோழனும், அவர் மகன் இராசேந்திர சோழனும் ஆவர்.

"சோழராட்சியின் தவிர்க்க முடியாத விளைவு என்னவெனில் இலங்கையின் மதத்துறையிலும், பண்பாட்டுத்துறையிலும் இந்து, பிராமண சைவ நடைமுறைகளும், திராவிடக் கட்டடக்கலையும், தமிழ்மொழியும் ஊடுருவி மிகப் பலமடைந்து மேலோங்கியமையே" என இலங்கையில் சோழராட்சி குறித்த கிங்ஸ்லி டி.சில்வாவின் விமர்சனம் மிக முக்கியமானதாகும்.(3) ஏனெனில் சோழராட்சி இலங்கையில் விலக்கப்பட்ட பின்னரும் கூட திருகோணமலையின் நிர்வாகிகளாகத் தமிழர்களே தொடர்ந்தும் நியமிக்கப்பட்டதோடு, தந்தையாயிருந்த பிராமணக் குடியிருப்புக்களும் ஆதரிக்கப்பட்டன. சோழர்படை பணியில் இருந்த வேளைக்காரப் படைப்பிரிவு தொடர்ந்தும் திருகோணமலையில் இருந்த காரணத்தால் சிங்கள பௌத்த மேலாதிக்கம் ஏற்படத் தடையாக இருந்தது.(4) சோழர்கள் இலங்கையில் தமிழ் பண்பாட்டுக்கான அடிப்படைக் கட்டுமானத்தை வலிமையாக நிறுவியதன் காரணமாகத்தான் ஐரோப்பிய காலனித்துவ ஆட்சிக் காலப் பகுதியிலும் தமிழருடைய செல்வாக்கு மேலோங்கக் காரணமாகியது. சோழர் கால நிர்வாக ஒழுங்கு நிரலில் தமிழர்கள் பெற்றுக் கொண்ட முதன்மை நிலை ஐரோப்பியர் காலத்திலும் தொடர்ந்ததை இலங்கை நிர்வாக சேவை வரலாறு உணர்த்துகின்றது. சோழர் காலத்திற்கு பின்னரும் தமிழகத் தொடர்பு வலிமை பெற்றிருந்ததை வன்னியர் ஆட்சிக் காலப் பதிவுகள் உணர்த்துகின்றன. திருகோணமலை குறித்த ஆய்வில் தமிழக அரசுகளின் வரலாற்றுப் பின்னணி தவிர்க்க முடியாத

தேவையாகின்றது. எனவேதான் திருகோணமலையின் வரலாற்று ஆய்வில் தமிழகத்தின் பங்களிப்பைத் தவிர்க் கூறாக எடுத்து பார்க்க வேண்டிய தேவை உருவாகுகின்றது. ஐரோப்பியக் காலனித்துவ நிர்வாகம் திருகோணமலையில் ஏற்படுவதற்கு முந்திய கால கட்டங்களை ஆராய முற்படும் போது திருகோணமலையில் நிலவிய மன்னராட்சி மற்றும் கீழைத் தேச சர்வாதிகார நிலமானிய ஆட்சி முறையின் வரலாற்றுப் பின்னணிகளையும் தெரிந்து கொள்ள முடியும்.

தமிழக அரசுகளின் எழுச்சியும், வீழ்ச்சியும் எவ்வாறு திருகோணமலை வரலாற்றுப் போக்கினைத் தீர்மானித்தனவோ, அதே போன்று காலனித்துவ ஆட்சியும் பல நிரந்தரப் பாதிப்புக்களை உருவாக்கியது. பல கீழைத்தேச நாடுகள் மேற்குலகின் பிடியில் சிக்கிய போது உருவாகிய காலனித்துவ ஆட்சி முறை ஒரு புதிய வரலாற்றுப் பார்வையை உருவாக்கியது. இது உலகை இரு கூறுகளாக ஆரம்பித்தது. மேற்குலகின் கடலாதிக்க எழுச்சியும், தெற்கே உள்ள நாடுகள் அடிமை கொள்ளப்பட்டதும் காலனித்துவ வரலாறாகியது. இலங்கை அரசியல் வரலாற்றில் மீள் மாற்றம் செய்ய முடியாத அரசியல், சமூகப், பொருளாதார மாற்றங்களை காலனித்துவ ஆட்சி விட்டுச் சென்றிருக்கின்றன. இலங்கை வரலாற்றில் இலங்கைத் தீவானது ஒரு நிர்வாக அலகாக பிரித்தானிய காலனித்துவ நிர்வாகத்திலேயே உருவாகியது. திருகோணமலை போர்த்துக்கீசரது நிர்வாகத்தில் வீழ்ந்ததன் மூலம் வரலாற்றில் முதற் தடவையாகத் தமிழருடைய ஆட்சி கைமாறியது. காலனித்துவ வரலாற்றிலும் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர், பிரஞ்சுக்காரர், ஆங்கிலேயர் என நான்கு மேற்குலகக் காலனித்துவ சக்திகளின் ஆதிக்கக் களமாக திருகோணமலை மாறியது. குறிப்பாக 2வது உலகப் போரில் யப்பானிய குண்டு வீச்சு விமானங்கள் திருகோணமலையைக் குறிபார்த்து தாக்கியதிலிருந்து இந்து சமுத்திர படைத்துறை ஆதிக்கத்தில் திருகோணமலை கொண்டிருந்த கேந்திர முக்கியத்துவம் மறுபடியும் உணரப்பட்டது. எனவே தான் இலங்கை வரலாற்றைப் போலவே திருகோணமலையின் வரலாறும் தொன்மை வரலாறு, காலனித்துவ வரலாறு என இரு பகுதிகளாக ஆராயப்பட வேண்டும். இலங்கை அரசியலை மட்டுமல்ல, திருகோணமலைப் பிராந்திய அரசியல் வரலாற்றையும் இரு பகுதிகளாக ஆராய வேண்டிய தேவையைக் காலனித்துவ ஆட்சியாளரின் வருகை உருவாக்கியது. இலங்கை வரலாற்றுப் போக்குகளை இந்திய ஆட்சியாளரும், ஐரோப்பிய காலனித்துவ அரசுகளும் அளவுக்கு அதிகமாகப் பாதித்த காரணத்தினால் தான் இலங்கையின் பிரபல வரலாற்றாசிரியர் மெண்டிஸ் இலங்கை வரலாற்றை இந்திய வரலாற்றுப் பகுதி, காலனித்துவ வரலாற்றுப்பகுதி என இரு பாகங்களாகப் பிரிப்பது பொருத்தமானது எனக் குறிப்பிட்டார்.



மாக்சிசம் வரலாற்றை ஒரு புதிய தளத்தில் இருந்து தேட ஆரம்பித்தது. அது மன்னர்களின் வரலாறே ஒரு நாட்டின் வரலாறு என கற்பிக்கும் முறையுடன் முரண்பட்டது. மாக்சிசம் வரலாற்றை அறிவியல் நோக்கில் பார்க்கின்றது. மாக்சிசம் சமூகங்களுக்கிடையிலான உற்பத்தி உறவுகள் குறித்து ஆராய்கின்றது. இலங்கை வரலாற்றை ஆராய முற்பட்டவர்களில் பலர் இலங்கைச் சமூகத்தின் உற்பத்தி உறவுகள் குறித்து ஆராய முனையவில்லை. கல்லூரிகளில் மன்னர்களின் கால நிரலில் வரலாற்றைக் கற்பிக்கும் முறை காணப்பட்டதால் வரலாற்றுத் திறனாய்வு பின் தள்ளப்பட்டுவிட்டது. விமர்சனமற்ற வரலாற்றுக் கல்வி வெறும் இராச இராணிக் கதைகளாகவே மாறிவிட்டன.

## பிராமிக் கல்வெட்டுக்கள்

மனித இனத்தின் வரலாற்றுப் பதிவானது எழுத்து வழக்கு தோற்றம் பெறுவதற்கு முன்பாக சித்திரங்களாகவும், சித்திர எழுத்துக்களாகவும் உருவாகிவிட்டன. மனிதன் ஆரம்ப காலங்களில் தனது வாழ்வியல் தொடர்பான எண்ணங்களையும், உணர்வுகளையும் குகைகளில் சித்திரமாக வரைந்து கொண்டான். மனிதன் கடந்து வந்த மிக நீண்ட பரிணாம வளர்ச்சிக் கால கட்டத்தில் தனது உணர்வுகளையும், எண்ணங்களையும் வெளிப்படுத்தும் உத்திகளில் மாற்றங்கள் ஏற்படுத்திக் கொண்டதை வரலாற்றுச் சான்றாதாரங்களின் வெளிப்பாடுகள் உணர்த்துகின்றன. மொழிக்கு வரிவடிவங்கள் கண்டறியப்படாத கால கட்டங்களில் தோற்றம் பெற்ற சித்திர எழுத்துக்கள் வரிவடிவங்கள் கண்டறியப்பட்ட பின்னர் கல்வெட்டுக்களாக மாற்றம் பெற்றன. இது இலங்கையில் கல் பொத்த என அழைக்கப்பட்டது. மனிதனுடைய பரிணாம வளர்ச்சியானது உடல் அமைப்பில் மட்டுமல்லாது, சிந்தனையிலும் ஏற்பட்ட காரணத்தால் சிந்தனை வெளிப்பாட்டிற்கான ஒலிகளும், ஒலிக் குறியீடுகளும் வளர்ச்சியடைந்தன.

மனிதன் பூமிப் பகுதியின் பெரு நிலப் பரப்பிலே நாடோடியாக வாழ்ந்த நிலைமாறி அரசை உருவாக்கிய பின்னரேயே ஒரு வரையறைக்கு உட்பட்ட ஒரு நாடு குறித்த நிகழ்வுகள் பதிவு செய்யப்பட்டன. மனித சமூகத்தின் ஆரம்ப காலப் பகுதி பழங் கற்காலம், புதிய கற்காலம், நுண்ணிக் கற்காலம், பெருங்கற்காலம் என்ற ஒழுங்கு நிரலில் கால வரையறை செய்யப்பட்டது. எனினும் சமூக வரலாற்றியலாளர்கள் மனிதனுடைய வாழ்க்கை முறையை ஒரு சமூக அலகாக எடுத்துக் கொண்டதன் மூலம் பண்டைய சமூக வளர்ச்சிப் போக்குகளை விலங்கு நிலை சமூகம், தாய்வழிச் சமூகம், தந்தை வழிச் சமூகம், முதலாளித்துவ சமூகம், சோசலிச சமூகம் என அடையாளம் காண்கின்றனர். மேற்கூறப்பட்ட சமூக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றியலாளர்களின் காலப் பிரிவுகளுக்குள் பல உப பிரிவுகளும் உள்ளன. காலங்களை வகுக்க மனிதனின் கூர்ப்பு நிகழ்ந்தேறிய பெரும் காலகட்டங்களில் மனிதனின் வளர்ச்சியைப் பிரதிபலித்த கருவிப் பயன்பாட்டு மாற்றங்கள், வாழ்க்கை முறை மாற்றங்கள் என்பனவும் கவனத்தில் கொள்ளப்பட்டன. மனித சமூகத்தின் ஆரம்ப நிலை வளர்ச்சி குறித்த ஆய்வில் கருவிகளின் அமைப்பும், தோற்றமும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

கல்வெட்டுக்கள் சமகால நிகழ்வுகளைக் கூறுவதால் தொல் இலக்கியங்களை விட முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. தொல் இலக்கியங்கள் கடந்த காலச் செய்திகளையும், ஐதீகக் கதைகளையும் உள்ளடக்கியிருப்பதோடு, காலத்துக்குக் காலம் பின் வந்தோரால் உட்செருகலுக்கும் உட்படுவதால் கல்வெட்டுக்களின் முக்கியத்துவத்தை தொல்லிலக்கியங்களால் பெற முடியாமல் போய்விட்டது. பெரும்பாலான கல்வெட்டுக்கள் சமகால கால நிகழ்வுகள், தானங்கள், மதம் தொடர்பான செய்திகளையே பொருளாகக் கொண்டிருக்கின்றன. வரலாற்றாய்வாளர்களிடையே தென்னாசிய மொழி வரி வடிவங்களின் தோற்றம் குறித்து கருத்து முரண்பாடு இருப்பினும் கூட, கி.மு 3ம் நூற்றாண்டளவில் வரி வடிவம் தோற்றம் பெற்றதாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. குறிப்பாக அசோகன் ஆட்சிக் காலத்தில் பிராமி என அழைக்கப்படும் வரி வடிவம் தோற்றம் பெற்றது. இதனால் அசோகன் காலத்து பிராமியை அசோக பிராமி எனவும், வட பிராமி எனவும் அழைக்கப்படுகின்றது. சற்றேறப்பட கி.மு 4ம் 3ம் நூற்றாண்டு காலத்திற்குரிய சாசனங்களை ஆதிப் பிராமிச் சாசனங்கள் என அழைக்கப்படுகின்றன. இக்காலப் காலகட்டத்திற்குரிய பல சாசனங்கள் இலங்கையில் பரவலாகக் காணப்படுகின்றன.

நாகர்கள் தொடர்பான ஆதி பிராமிச் சாசனங்கள் திருகோணமலை மாவட்டத்தில் இரு கல்வெட்டுக்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் மூன்று கல்வெட்டுக்கள், அம்பாறை மாவட்டத்தில் ஐந்து கல்வெட்டுக்கள், பொலநறுவை மாவட்டத்தில் மூன்று கல்வெட்டுக்கள், அம்பாந்தோட்டை மாவட்டத்தில் ஆறு கல்வெட்டுக்கள், மொனராகலை மாவட்டத்தில் நான்கு கல்வெட்டுக்கள், கண்டி மாவட்டத்தில் இரு கல்வெட்டுக்கள், குருநாகல் மாவட்டத்தில் பதினொன்று கல்வெட்டுக்கள், புத்தளம் மாவட்டத்தில் இரு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.(5) இந்தச் சாசனங்களில் அரசியல் தகவல் காணப்படவில்லை. இச்சாசனங்கள் ஆதிகாலச் சமூகம் தொடர்பான சில தகவல்களைத் தருவதால் வரலாற்றாய்வில் முக்கியம் பெறுகின்றன. பல பிராமிச் சாசனங்கள் பிராமணர்கள் அளித்த குகைத்தானங்கள் குறித்து தகவல்கள் தருகின்றன.(6) குகைத் தானங்கள் மட்டுமல்ல, குளம், நிலம், வயல் போன்றன வற்றை பௌத்த சங்கத்திற்குத் தானமாக வழங்கும் மரபும்



காணப்பட்டுள்ளது. கி.பி 1ம் நூற்றாண்டிற்கும் கி.பி 3ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலப் பகுதிக்குரிய வட மொழிக் கல்வெட்டுக்கள் திருகோணமலை மாவட்டத்தில் கண்டறியப்பட்டுள்ளன. திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளிக் கல்வெட்டானது வட மொழியில் பொறிக்கப்பட்டதாகும். அது குறிப்பிடுகின்ற செய்தியானது ஒருவன் பல சைத்தியங்களை அமைப்பதன் மூலம் சுவர்க்கத்தினை அடையலாம் என்ற கோட்பாட்டினைக் கொண்டுள்ளது. வடமொழியில் அமைந்த திரியாய்க் கல்வெட்டு ஒன்று அவலோகிதேஸ்வரர் பற்றிய வர்ணனைகளைக் குறிப்பிடுகின்றது.(7) இது போன்று பல மகாயான பௌத்த நெறிகளைக் கூறும் சாசனங்கள் இலங்கையின் பல பாகங்களில் கண்டறியப்பட்டன.

பிராமி வரிவடிவங்கள் மூலம் பிராந்திய மொழித் தகவல்களை ஒலிபெயர்ப்புச் செய்து சாசனங்களில் பொறிக்கப்படும் பண்பு பரவலாகக் காணப்பட்டிருக்கின்றது. வட இந்தியாவில் வழக்கிலிருந்த பிராகிருத மொழித் தகவல்கள் பிராமிய வரி வடிவங்களில் சாசனத்தில் பொறிக்கப்பட்டுள்ளன. தக்கணத்தில் வாழ்ந்த சாதவாகனர்கள் பயன்படுத்திய உலோக நாணயங்களில் தமிழ் மற்றும் பிராகிருத மொழிகளில் உருவாக்கப்பட்ட பிராமி வரி வடிவங்கள் காணப்பட்டன. இதே போன்று தமிழகத்தில் தமிழ் மொழித் தகவல்கள் பிராமி வரிவடிவங்களில் ஒலிபெயர்ப்புச் செய்யப்பட்டு சாசனப் பதிவாகின. இலங்கையில் காணப்படும் ஆதிப் பிராமிச் சாசனங்களில் எலு, தமிழ், பாளி என்பன ஒலி பெயர்ப்புச் செய்யப்பட்டு பொறிக்கப்பட்டுள்ளன.(8) இலங்கையில் இதுவரை 1500க்கு மேற்பட்ட பிராமிச் சாசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. இதில் ஆதிச் சிங்கள பிராமிச் சாசனம் அதிகளவு காணப்படுகின்றது. இலங்கையின் பௌத்தம் தொடர்பான தேடல்கள் காரணமாக பூர்வீகமாக தமிழர்கள் நெருங்கி வாழும் வட கிழக்குப் பகுதியிற் தொல்பொருள் தேடலில் அதிகம் அக்கறை செலுத்தப்படவில்லை. இதனால் தமிழ் பிராமிச் சாசனங்கள் கண்டறியும் வாய்ப்பு குறைந்துள்ளது.

கி.மு 3ம் நூற்றாண்டிலிருந்து இலங்கையிற் பயன் படுத்தப்பட்டு வந்த பிராமிச் சாசனங்களிலிருந்து தமிழகத்தைப் போன்று ஒரு சமூக வழக்கு இலங்கையிலும் காணப்பட்டதாகக் கருத முடிகின்றது. சிற்றரசர்கள் கூடிய பட்டங்களைக் குறிக்கும் ஆய் (ஆயு), வேள் (வேளு) போன்ற தமிழ்ச் சொற்கள் உள்ளடங்கிய தமிழ் பிராமிச் சாசனங்கள் திருகோணமலை, மட்டக்களப்பு, பூநகரி, அநுராதபுரம், கந்தளாய், வவுனியா, பெரிய புளியங்குளம் ஆகிய இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன.(9)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வரலாற்றாய்வாளர்களான ஆரிய அபயசிங்கா, சந்த மங்கல கருணாரத்தினா ஆகியோர் பௌத்த மதத்துடன் அறிமுகமான வட பிராமி வரி வடிவங்கள் இலங்கைக்கு அறிமுகப்படுத்த முன்பாகவே, தமிழ்நாட்டில் காணப்பட்ட தமிழ் பிராமி வரி வடிவங்கள் இலங்கையில் அறிமுகமாகிவிட்டது என்கின்றனர். இதுவரை இந்தியாவில் கிடைக்கப்பெற்ற 75000 பிராமிக் கல்வெட்டுக்களில் சுமார் 50000 கல்வெட்டுக்கள் ஆதித் தமிழ் பிராமிக் கல்வெட்டுக்களாகும். வட பிராமி தோற்றம் பெறுவதற்கு முன்பாகத் தமிழ் பிராமிச் சாசனங்கள் தோன்றிவிட்டன. கி.பி 4ம், 5ம் நூற்றாண்டுக்குரிய சாசனங்களில் தமிழ்நாட்டுச் செல்வாக்கை வெளிப்படையாகக் காண முடிகின்றது. தமிழ் பிராமிச்சாசன அமைப்பானது ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களின் அமைப்பைப் போன்று இல்லாமல் தமிழக சாசன வடிவில் காணப்படுகின்றது. இந்தியாவில் உள்ள தமிழ்ச் சாசனங்களில் பிராமி, கிரந்தம், தமிழ், வட்டம் என நான்கு வரி வடிவங்கள் கையாளப்பட்டுள்ளன. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் தமிழ் வரி வடிவத்திலும், கிரந்த வரிவடிவத்திலும் எழுதப்பட்டுள்ளன.(10)

திருகோணமலைக் கோட்டையில் குளக்கோட்டன் குறித்த செய்தி பொறிக்கப்பட்ட சாசனம் கிரந்த எழுத்துக்களிலும், சமஸ்கிருத மொழியிலும் அமைந்துள்ளன. சமஸ்கிருத மொழியினை எழுதுவதற்கு தமிழர் உருவாக்கிய வரி வடிவங்களே கிரந்தம் எனப்படும். இது இலங்கையிலும், சொர்ண பூமி எனப்படும் பர்மா, தாய்லாந்து, சாவகம் முதலானவற்றிலும் பெரும் செல்வாக்குப் பெற்றிருந்தது.(11) தனித் தமிழ் வரி வடிவங்களில் கிடைத்த சாசனங்கள் மிகக் குறைவானவையே. அச்சு இயந்திரத்தின் வருகை வரை எழுத்து வரி வடிவம் காலத்திற்குக் காலம் மாற்றமடைந்து வந்திருக்கின்றது. இலங்கையில் கிடைக்கப்பெற்ற தமிழ்ச் சாசனங்களின் காலத்தை நிர்ணயம் செய்து கொள்ள வரி வடிவங்கள் குறித்த ஆய்வு பயன்படுகின்றது. தமிழ்ச் சாசன அமைப்பானது மங்கலம், தகவல், சாசனப் பாதுகாப்பு (ஓம்படைக் கிளவி) என மூன்று வடிவங்களாக அமைந்துள்ளன. சாசன விளிப்புரையாக அமையும் மங்கல விளிப்பில் வட மொழிச் சுலோகங்கள் கலந்து காணப்படுகின்றன. இது தென்னிந்தியச் சாசன மரபை ஒத்ததாகும்.

திருகோணமலையில் கண்டெடுக்கப்பட்ட சாசனங்களில் சோழர்காலச் சாசனங்களே அதிகமாகும். திருகோணமலை மாவட்டத்தில் கண்டறியப்பட்ட சாசனங்களில் கந்தளாய்க் கல்வெட்டு, பாலமோட்டைக் கல்வெட்டு, பிரடறிக் கோட்டை சாசனம், நிலாவெளிப் பிள்ளையார் கோயில் கல்வெட்டு, மானாங்கேணிக் கல்வெட்டு, காளி கோயிற் கல்வெட்டு என்பன பண்டைய திருகோணமலைச் சமூகம் தொடர்பான தகவல்களைத் தரும் கல்வெட்டுக்களில் சிலவாகும்.



இவை அனைத்தும் சோழர்களினால் பொறிக்கப்பட்டிருப்பதனால் பத்தாம், பதினோராம் நூற்றாண்டுகளைச் சேர்ந்தவை எனக் கொள்வது பொருத்தமானதாகும். சோழர்காலக் கல்வெட்டுக்கள் அதிகளவில் திருகோணமலையில் காணப்படுவதோடு, இலங்கையில் சோழர்களின் நிர்வாகச் செயற்பாடுகள் குறித்து தெரிந்து கொள்வதற்கும் பயன்படுகின்றன. கலாநிதி.ஆ.வேலுப்பிள்ளை, இலங்கைத் தமிழ்ச் சாசன வழக்காறுகள் பற்றிக் குறிப்பிடுவது அவதானிக்கத்தக்கது.

"தென்னிந்தியத் தமிழ்ச் சாசனங்களுடன் இலங்கைத் தமிழ்ச் சாசனங்களை ஒப்பிடும் போது, தென்னிந்தியாவிற் பௌத்த மதத் தொடர்பான சாசனங்கள் மிகச் சிலவே கிடைத்துள்ளன. இலங்கைத் தமிழ்ச் சாசனங்களிற் குறிப்பிடத்தக்க ஒரு சில பகுதிகள் பௌத்த மதத் தொடர்புடையனவாகும். பௌத்த மதத் தொடர்பான தமிழ்ச் சாசனங்கள் பல எழுந்தமைக்கு இரண்டு காரணங்கள் கூறலாம். இலங்கைத் தமிழ் மக்களில் ஒரு பகுதியினராவது பௌத்தராகவோ அல்லது பௌத்தத்தை ஆதரிப்பவராகவோ இருந்திருக்க வேண்டும். பௌத்த மதச் சின்னங்கள் விளங்கிய இடங்களில் தமிழர் செல்வாக்குக் குறிப்பிடக்கூடிய அளவினதாக இருந்திருக்க வேண்டும். சோழப் பெருமன்னர் காலத்தில் திருகோணமலை கட்டுக்குளப்பற்றிலிருந்த நாதனார் கோயில் பெற்ற ஆதரவு இங்கு சிறப்பாக குறிப்பிடத்தக்கது. நாதனார் கோயில் என்பது இக்காலத்து தமிழ் மக்கள் வைத்த பெயராகும். இராசராசப் பெரும்பள்ளி என்பதே சோழப் பெருமன்னர் காலத்தில் அக்கோயிலுக்கு வழங்கிய பெயர். அதற்கு முன்பு அக்கோயில் வெல்கம் விகாரை என வழங்கப்பட்டது. வெல்கம் விகாரமான இராசராசப் பெரும்பள்ளி என்ற பெயர் சில சாசனங்களில் இடம் பெறுகின்றன. இப் பள்ளியில் மட்டும் பதினைந்து தமிழ்ச் சாசனங்கள் வரையிற் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இச் சாசனங்கள் இப் பள்ளிக்கு நந்தா விளக்குகள் வழங்கியது, மற்றும் எருமை, பசு முதலியன நெய்க்காகத் தானம் கொடுத்தது போன்ற விடயங்களை எடுத்துக் கூறுகின்றன. இலங்கையின் தலைநகரங்களாக விளங்கிய பொலநறுவை, கம்பளை ஆகிய இடங்களிலும் பௌத்த சமயம் தொடர்பான தமிழ்ச் சாசனங்கள் கிடைத்துள்ளன. இலங்கைத் தமிழ்ச் சாசனங்களுள் மிக நீண்டதான இலங்காதிலக விகாரைச் சாசனம் பௌத்த மதம் தொடர்பானது."(12)

பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை குறிப்பிடுவது போல நாதனார் கோயில் என்ற பெயர் இக்காலத்து தமிழ் மக்கள் வைத்த பெயரல்ல. முற்காலத்து மக்கள் அழைத்த பெயராகும். வெல்கம் விகாரை குறித்த ஆய்வுகள் முழுமையாக ஆராயப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மாவட்டத்தில் வெல்கம் விகாரைப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பௌத்த தமிழ்ச் சாசனங்கள் இப் பிரதேசத்தில் பௌத்த தமிழர்கள் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதைக் காட்டுகின்றன. பல்லவர் கால நாயன்மார்களின் தோற்றம் தமிழகத்தில் எவ்வாறு பௌத்த மதத்தின் செல்வாக்கைப் பாதித்தனவோ அவ்வாறே ஈழத்தில் பௌத்த தமிழர்களிடமும் மாற்றத்தை உருவாக்கியது எனக் கொள்வதே பொருத்தமானதாகும். தமிழகத்திலுள்ள பாடலிபுரம் என்னும் நகரத்தில் அசோக மன்னனின் ஆதரவில் மொக்கல புத்த திஸ்ஸ என்னும் பௌத்தரின் தலைமையில் மூன்றாவது மகாநாடு கூடியதென்றும், ஒன்பது திங்கள் நடைபெற்றது என்றும், மகாநாடு முடிந்த பின்னர் பௌத்த மதத்தைப் பரப்புவதற்காகப் பல பிக்குகள் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பப்பட்டனர் என்றும் மகாவம்சம், தீபவம்சம் ஆகிய நூல்கள் கூறுகின்றன.(13)

சங்க இலக்கிய நூலான மதுரைக் காஞ்சியில் பௌத்த பள்ளி பற்றிய செய்தி காணப்படுகின்றது. சிலப்பதிகாரம், மணிமேகலை என்பனவற்றில் பௌத்தம் பற்றிய செய்தி காணப்படுகிறது. மணிமேகலை ஒரு பௌத்த நூல் ஆகும். மணிமேகலை இயற்றிய கூலவாணிகன் சாத்தனார் ஒரு பௌத்த தமிழராவார். காஞ்சிபுரம், காவிரிப்பட்டினம், பாடலிபுரம் போன்றன பௌத்த தமிழர்கள் வாழ்ந்த நகர்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. எனவே திருகோணமலையில் வாழ்ந்த தமிழர்களில் ஒரு பகுதியினர் பௌத்தர்களாக வாழ்ந்திருக்கலாம் என்பது ஏற்கக்கூடியதே. பல்லவர் காலச் சைவ மத எழுச்சி காரணமாக பௌத்த தமிழர்களில் ஒரு பகுதியினர் மீண்டும் சைவத்தைத் தழுவ ஏனைய பௌத்த தமிழர்கள் வில்கம் விகாரையைக் கொண்டு நடத்தியிருப்பார்கள் எனக் கொள்வது தவறாகாது. சுமார் பதினைந்து தமிழ்ச் சாசனங்கள் வில்கம் விகாரையில் கண்டறியப்பட்டதற்குத் தமிழ் பௌத்தர்கள் காரணமாக இருந்திருப்பார்கள் என்பது ஏற்கக் கூடியதே. எனவே திருகோணமலையில் கண்டறியப்பட்ட பௌத்த சாசனங்கள் அல்லது தொல் பொருட் சின்னங்கள் மட்டும் ஆதியில் திருகோணமலையில் சிங்களக் குடியிருப்புக்கள் காணப்பட்டன என்ற கருத்தை உறுதி செய்யப் போதுமானதல்ல.

தமிழ்ச் சாசனங்கள் குறித்த ஆய்வில் ஒரு தேக்க நிலை நீண்ட காலமாக அவதானிக்கப்பட்டது. இலங்கைக்கான சாசனவியல் ஆய்வு 1875 இல் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், கண்டறியப்பட்ட சாசனங்களை வாசிப்பதற்கு இலங்கையில் தமிழ் வரலாற்றாய்வாளர்கள் காணப்படவில்லை. இலங்கைத் தொல் பொருட்துறை ஆணையாளராக பணியாற்றிய எச்.சி.பி பெல் அவர்களின் பின்வரும் கூற்று முன் கூறப்பட்ட நிலையைத் தெளிவு படுத்துகின்றது.



"பழைய சாசனக் குறிப்புகளுடன் தொடர்புபடத்தக்க ஆற்றல் வாய்ந்த தமிழ் அறிஞர் இலங்கையில் வருத்தப்படத் தக்களவிற்கு இல்லாதிருப்பதனால், இலங்கைத் தொல் பொருளியற்துறை ஆணையாளர், இந்தியத் தொல் பொருளியற்துறையைச் சேர்ந்த சாசனவியலாளர்களின் தயவில் தங்கியிருக்க வேண்டியுள்ளது. அத்தகைய இந்திய சாசனவியல் துறையைச் சேர்ந்தோர் - கலாநிதி ஹல்ற்ஸ் (இளைப்பாறியவர்), காலஞ்சென்ற எஸ்.ஆர் ராய் பகதூர், ராய் பகதூரின் பின் வந்தவரான வி.வேங்கையா அவர்கள், பின்னர் தற்போதைய தென்னிந்தியச் சாசனவியல் மேற்பார்வையாளர் எச்.ஆர்.எச் கிருஸ்ண சாஸ்திரி அவர்கள். இவர்களின் தயவான உதவி இல்லாமல் இருந்திருந்தால் இப்பழைய சாசனங்கள் எல்லாம் மறைந்த நிலையில் இருந்திருக்கும்.(14) திரு பெல் அவர்களே இலங்கைத் தமிழ்ச் சாசனங்களின் பக்கம் பிரபல இந்திய வரலாற்றாய்வாளர் கிருஷ்ண சாஸ்திரியின் கவனத்தைத் திருப்பியவராவர்.

சிங்கள வரலாற்றாய்வாளரான சேனக பரணவிதானவின் பிரவேசம் இலங்கைத் தொல் பொருளியற்துறை ஆய்வில் ஒரு முக்கிய திருப்பமாகக் கருதப்படுகின்றது. இவரே சிங்கள, பௌத்த மதம் தொடர்பான பல சாசனங்களை வெளிக் கொண்டு வந்தவர். பரணவிதானவின் ஆய்வில் சில தமிழ், கிரந்த சாசனங்களும் வாசித்து அறியப்பட்டன. இவருடைய பல கருத்துக்கள் சர்ச்சைகளை உருவாக்கக் காரணமாகின. பரணவிதானவின் காலத்தைத் தொடர்ந்து வந்த கலாநிதி. செ.குணசிங்கம், கலாநிதி.கா. இந்திரபாலா ஆகியோர் திருகோணமலை குறித்த பல சாசனங்களைப் பதிப்பித்தனர். திருகோணமலைச் சாசன ஆய்வியலில் கலாநிதி செ.குணசிங்கம் வகித்த பங்கு முதன்மையானது. திருகோணமலைத் தொன்மை வரலாற்றை வரலாற்றுப் பின்னணியுடன் அறிவியல் அடிப்படையில் கட்டியெழுப்பியவர். கோணேஸ்வரம் குறித்த ஆய்வுகளில் கலாநிதி செ.குணசிங்கம் முன்வைத்த சாசன ஆதாரங்கள் பல சுய தேடலில் கண்டறியப்பட்டவை. அத்துடன் பேராசிரியர். சி.பத்மநாதனின் திருகோணமலை குறித்த ஆய்வு விளக்கங்கள் முக்கியமான பல விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளன. பரணவிதான 1945இல் திருகோணமலைக் கோட்டையில் கிடைத்த வட மொழிச் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு குளக்கோட்டன் குறித்து தெரிவித்த பல கருத்துக்கள் சர்ச்சைகளை உருவாக்கின. பேராசிரியர் சேனக பரணவிதான திருகோணமலைக் கோட்டையில் கிடைத்த வட மொழிச் சாசனத்தில் உள்ள சம்பு புஸ்ப க்ரிய... என்ற வடமொழித் தொடரை சம்பு புஷ்ப வருடம் என மொழி பெயர்த்திருந்தார். பேராசிரியர் சி. பத்மநாதன் அறுபது ஆண்டுகளைக் கொண்டுள்ள இந்து ஆண்டுகள் வட்டத்தில் சம்பு புஸ்ப என்ற ஒரு ஆண்டு இல்லை என்ற உண்மையை வெளிக் கொண்டு வந்ததோடு சம்பு புஸ்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்ரிய... என்பது சிவனுக்கு பலர் கொண்டு செய்யப்படும் பூசை எனக் கொள்வதே பொருத்தமானது என கருத்தை முன்வைத்தார். எனினும் சேனக பரணவிதானவைக்குப் பின் வந்த பல ஆய்வாளர்களும் சேனக பரணவிதானவின் கருத்துப் பொறியில் விழுந்துள்ளனர். சமஸ்கிருத மொழி அறிவும், சாசனப் பயிற்சியும் இல்லாத காரணத்தாலும், பரணவிதானவின் வித்துவப் புலமையில் கொண்டிருந்த நம்பிக்கையாலும் பலரும் அப்பொறியில் அகப்பட்டுச் சிக்கிக் கொண்டனர்.(15) திருகோணமலைக் கோட்டையில் கிடைத்த வடமொழிச் சாசனம் குறித்த மேலதிக விபரங்கள் இந்நூலில் குளக்கோட்டன் பற்றிய அத்தியாயத்தில் மிக விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை வரலாற்றைத் தொகுத்துக் கூறும் தொல் இலக்கியங்களில் திருகோணமலை குறித்த தகவல்களைத் திரட்ட வேண்டிய தேவை இருப்பதனால், மேற்படி வரலாற்று நூல்கள் குறித்த மதிப்பீடு மிக அவசியமாகின்றது. திருகோணமலை வரலாற்றைக் கூறும் தொல் இலக்கியங்களான பெரிய வளமைப்பத்தி, குளக்கோட்டன், கட்பசாத்திரம் போன்றன இல்லாதொழிந்தாலும் கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு, திருக்கோணாசல புராணம் என்பன திருகோணமலை தொடர்பான சில ஆரம்ப காலத் தகவல்களைத் தருகின்றது. தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் என்பன எவ்வாறு பௌத்த மத நலனை மையப்படுத்தி தொகுக்கப்பட்டதோ அதே போன்றே திருகோணமலைத் தொல் இலக்கியங்களும் இந்து மத வரலாற்றுப் பின்னணியைக் கொண்டுள்ளன. மேற்படி நூல்கள் மூலம் கோணேசர் ஆலயத்துடன் தொடர்பாகத் திருகோணமலைச் சமூகங்களிடையே காணப்பட்ட சமூக அமைப்புக்கள் பற்றிய தகவல்களைப் பெறக் கூடியதாக உள்ளது. எனினும், திருகோணமலைச் சமூகம் தொடர்பாகக் கிடைக்கக் கூடிய சான்றாதாரங்கள் போதியளவு இல்லாத நிலையில் வரலாற்றை பௌத்த சிங்கள பாளி நூல்களிலும், தமிழக வரலாற்றுப் பின்னணியிலும் இருந்தே கட்டியெழுப்ப வேண்டிய நிர்ப்பந்தம் இயல்பாகவே உருவாகின்றது. திருகோணமலை வரலாற்றுப் பின்னணிக்கு மட்டுமல்ல, இலங்கையின் வரலாற்றிற்கும் தமிழக வரலாற்றுப் போக்குகள் மிக முக்கியமானதாக இருந்திருக்கின்றன. தமிழக ஆட்சியாளர்களின் இலங்கைப் படையெடுப்பில் திருகோணமலைப் பிரதேசம் அதிகளவு தாக்கத்தினைக் கொண்டுள்ளது. கோணேஸ்வரம் குறித்து ஆராய்ந்த வரலாற்றாசிரியர் கலாநிதி செ.குணசிங்கம் சோழராட்சியின் பாதிப்பானது இலங்கையின் வேறெந்த மாவட்டத்தையும் விட திருகோணமலையிலேயே அதிகளவு ஏற்பட்டதாக கருதுகின்றார். சோழராட்சிக் காலத்திற்குப் பின்னர் குறிப்பாகக் குளக்கோட்டன் கால வன்னிமைகளும் தமிழகத் தொடர்பிலிருந்தே தோற்றம் பெற்றன. இலங்கையின் ஆரம்ப காலம் தொடக்கம் ஐரோப்பிய காலனித்துவ ஆட்சியாளர்களின் வருகை வரை இலங்கை வரலாற்றுப்



போக்குகளைத் தமிழக அரசுகளே அதிகளவு தீர்மானித்துக் கொண்டன. தமிழக அரசுகளின் எழுச்சியும் வீழ்ச்சியும் நேரடியாகத் திருகோணமலை வரலாற்றின் போக்குகளை மாற்றிக் கொண்டதால் தமிழக அரசுகளின் தோற்றம், எழுச்சி, வீழ்ச்சி என்பனவற்றிற்கான வரலாற்றுப் பின்புலம் குறித்து தெரிந்து கொள்ளாமல் திருகோணமலை வரலாற்றைப் புரிந்துகொள்வது மிகக் கடினமானதொன்றாகும்.

தமிழக வரலாற்றுப் பின்னணி இலங்கை வரலாற்றின் திசைகளை எவ்வாறு மாற்றி அமைத்ததோ அவ்வாறே வட இந்தியத் தொடர்புகள் இலங்கை வரலாற்றில் மீள மாற்றியமைக்க முடியாத மாற்றங்களை உருவாக்கின. இம் மாற்றங்கள் சர்ச்சைக்குரிய விஜயனின் வருகை, பௌத்த மத அறிமுகம் என்பனவற்றினூடாக ஏற்பட்டன. வட இந்தியாவிலிருந்து பௌத்தம் இலங்கைக்கு கொண்டு வரப்பட்ட போது அறிந்து வரப்பட்ட மரபுகளில் வரலாற்றுச் செய்திகளுக்கு எழுத்துருவம் கொடுத்தலும் அடங்கியிருந்தது. எனவே இலங்கையின் பௌத்த சிங்கள இலக்கிய மரபானது வட இந்திய பௌத்த பாணியில் தோற்றம் பெற்றது எனக் குறிப்பிடுவது மிகப் பொருத்தமானதாகும். இராமாயணம், மகாபாரதம், மற்றும் குப்தர் காலத்தில் வட இந்தியாவில் உருவாகிய புராணங்கள் போல இலங்கையிலும் மத நலன்களைச் சுற்றி இலங்கை வரலாறு, அரசவம்ச வரலாற்றை எழுத வேண்டும் என்ற உணர்வு தோன்றியதாகக் கருத முடிகின்றது. கி.பி 5ம் நூற்றாண்டில் வட இந்தியாவில் உருவாகிய வாயு புராணத்தில் கோகர்ணம் என அழைக்கப்பட்ட கோணேஸ்வரத்தின் தோற்றம் குறித்துப் பாடப்பட்டது. இலங்கையில் பௌத்தம் அறிமுகப்படுத்துவதற்கு முன்பாக இலங்கையில் வரலாற்றைத் தொகுக்கும் எண்ணம் இருந்ததற்கு எதுவித சான்றாதாரங்களும் இல்லை.

பாளி மொழியில் இலங்கை வரலாற்றினைத் தொகுத்த வரலாற்றாசிரியர்கள் பௌத்த சிங்கள ஆதிக்கத்திற்கே முக்கியத்துவம் அளித்திருப்பதனால், தமிழரின் வரலாறு உரிய முறையில் தொகுக்கப்படவில்லை. மகாவம்சம் உள்ளிட்ட அனைத்து பௌத்த பாளி வரலாற்று இலக்கியங்களும் பௌத்த சங்கத்தின் நலனைப் பேணவே தொகுக்கப்பட்டது. பௌத்த-சிங்கள நலனில் தமிழரின் தலையீடு, குறிப்பாக தமிழகத்தின் தலையீடு ஏற்பட்ட வேளையில் மட்டுமே மகாவம்சம், சூளவம்சம் போன்ற பாளி நூல்களில் தமிழர் குறித்த தகவல் சேர்க்கப்பட்டுள்ளன. எனவே தமிழரின் பொது வரலாற்றைக் கட்டியெழுப்பக் கூடிய வரலாற்றுச் சான்றுகள் மேற் குறிப்பிட்ட நூல்களில் போதியளவு காணப்படவில்லை. திருகோணமலை வரலாற்று நிகழ்வுகள் குறித்த ஆய்வுகள் கல்வெட்டுகளிலும், தொல் இலக்கியங்களிலும் இருந்தே எழுதப்பட வேண்டிய தேவை உருவாகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஒரு பௌத்த சிங்கள ஒற்றையாட்சி நாடென்ற கருத்துருவாக்க முயற்சியை கி.பி 6ம் நூற்றாண்டில் மகாநாம தேரர் தொடங்கி வைத்தார். அவர் எழுதிய மகாவம்சமானது மகாசங்கம் சார்ந்த தேரவாத பௌத்த நலனைக் கருதித் தொகுக்கப்பட்டது. தற்காலச் சிங்கள வரலாற்றாசிரியர்களும் பௌத்த சிங்கள நலன்களையே முதன்மைப்படுத்தும் வரலாற்று ஆய்வுகளில் ஈடுபட்டதால் தமிழர்கள் வாழும் பல பகுதிகளின் வரலாற்று ஆய்வுகள் முன்னெடுக்கப்படவில்லை. திருகோணமலையின் வரலாற்றினை ஆராய்ந்து சிங்களச் சார்பாக திசை திருப்ப வேண்டிய தேவை நாளாந்த அரசியல் தளத்தில் இருந்து உருவாகுவதால் தமிழரின் ஆதிக் குடியிருப்புக்களுக்கான சான்றாதாரங்களைத் தேடுவது புறக்கணிக்கப்பட்டன. எனினும், இலங்கையின் மத்திய காலத்துக்குரிய பல சோழர் காலக் கல்வெட்டுகள் கண்டெடுக்கப்பட்டு வாசிக்கப்பட்டுள்ளன. குச்சவெளியில் நடந்த அகழ்வாய்வு பெருங் கற்காலத்திற்குரிய பல சான்றுகளை வெளிக் கொண்டு வந்திருக்கின்றது. மேற்படி ஆய்வில் கிடைத்த வரலாற்றுத் தடயங்கள் தென்னிந்தியாவில் கிடைத்த பெருங்கற்காலத்துக்குரிய வரலாற்றுத் தடயங்களை ஒத்துக் காணப்படுவது மிக முக்கியமானதாகும்.

பௌத்த மகாசங்கத்தின் தோற்றத்துடன் பௌத்த மகாசங்கத்தை மையப்படுத்திய வரலாற்றுத் தொகுப்பு உருவாகத் தொடங்கியது. இதனால் இலங்கைக்கான தொடர்ச்சியான வரலாறு கிடைத்துள்ளது. உலகில் மிகக் குறைந்த நாடுகளே இலங்கை போன்று ஒரு தொடர்ச்சியான வரலாற்று இலக்கியங்களைக் கொண்டிருக்கின்றது. இலங்கைக்கான தொல் வரலாற்று இலக்கிய வரிசையில் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம், மகாவங்சம், ஸீகள அட்டகதா, மகாவங்ஸ தீகா என தொன் இலக்கியப் பட்டியல் தொடர்கின்றது. இவை அனைத்துமே பாளி மொழியில் எழுதப்பட்டது என்பது முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது.

இலங்கையில் கிடைக்கப் பெறும் தொல் வரலாற்று இலக்கியங்களில் தீபவம்சமே காலத்தால் முந்தியதாகக் கருதப்படுகின்றது. பாளி மொழித் தொகுப்பான தீபவம்சம் கி.பி 4ம் நூற்றாண்டின் இறுதிக் காலப் பகுதியில் தொகுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகின்றது. தீபவம்சத்தின் ஆசிரியர் யார் என்பது தெரியவில்லை. தீபவம்சத்தில் இலங்கையின் ஆரம்ப கால வரலாறுகள் குறித்த தகவல்களையும், குறிப்பாகப் புத்தருடைய இலங்கை வருகை குறித்த செய்திகளையும், கிறிஸ்த்துவுக்கு முற்பட்ட கால வரலாற்றுத் தகவல்களையும் பெற முடிகின்றது. துட்டகாமினி, எல்லாளன் போர் தொடர்பான தகவல்கள் தீபவம்சத்தில் 13 பாடல்களில் கூறப்படுகின்றன. இலங்கைக்கு பௌத்தம் கொண்டுவரப்படுவதற்கு முந்திய கால வரலாற்றுச் செய்திகளும் இதில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், பல



தகவல்கள் நாட்டார் வழக்கில் காணப்பட்ட நினைவுச் செய்யுள்களில் இருந்து பல்வேறு கால கட்டங்களில் தொகுக்கப் பட்டதாகும். எனவே தான் தீபவம்சப் பாடலில் கையாளப்படும் சொற் பிரயோகம், மொழி ஆளுமை என்பன ஒருவருக்குரியதாக இல்லாமல் முரண்பட்டு ஒழுங்கின்றிக் காணப்படுகின்றது. தீபவம்சத்தின் மொழி நடையில் இலக்கிய நயமற்ற கரடு முரடான தன்மையை வெளிப்படையாகக் காணமுடிகின்றது. பௌத்த மகா சங்கம் தோற்றம் பெறுவதற்கு முன்பாக தீபவம்சம் தொகுக்கப்பட்ட காரணத்தால் மொழி ஆளுமை குறித்து அதிக கவனம் செலுத்தப்படவில்லை என சில வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். மேலும் கிறிஸ்த்துவின் தோற்றக் காலத்தை அடுத்த ஆரம்ப நூற்றாண்டுக் காலப் பகுதியில் இலங்கையில் செய்யுள் இலக்கணங்களோ அல்லது இலக்கிய நயங்களோ கருத்தில் கொள்ளப்படாத வழக்கு காணப்பட்டிருக்க வேண்டும். எனினும் இலங்கையின் ஆரம்ப கால குடிமக்கள் குறித்த செய்திகள், புத்தர் (ததாகதர்) இலங்கைக்கு மூன்று தடவை வந்த செய்திகள், துட்டகைமுனு - எல்லாளன் போர்ச் செய்திகள் போன்றவற்றைத் தருகின்ற காரணத்தால் தீபவம்சம் மிக முக்கியமாக கருதப்படுகின்றது. அத்துடன் தீபவம்சம் இலங்கைத் தீவின் வம்சாவளிப் பட்டியலையும் உள்ளடக்கியிருப்பதால் இலங்கை வரலாறு குறித்த தேடலில் அதிக கவனத்தை ஈர்த்துள்ளது. மேலும் தீபவம்சமே இதுவரை இலங்கை வரலாற்றைக் கூறும் இலக்கியங்களில் காலத்தால் முந்தியதாக கணிக்கப்படுவதால் இதன் பின்னர் உருவாக்கப்பட்ட மகாவம்சம் உள்ளிட்ட ஏனைய இலங்கை வரலாற்று இலக்கியங்களை ஒப்பிட்டு நோக்குவதற்கும் உதவுகின்றது. சோழ நாட்டில் உயர் குல மரபில் தோன்றிய தமிழனான எல்லாளன் என்பவன் இலங்கையைக் கைப்பற்றி 40 ஆண்டுகள் ஆட்சி செய்ததாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது (16). ஆனால் தீபவம்சம் தமிழகத்திலிருந்து படையெடுத்த சுத்திகன், சேனன் ஆகியோரைத் தமிழன் எனக் குறிப்பிட்டுவிட்டு எல்லாளனைச் சத்திரிய அரசன் எனக் குறிப்பிடுகின்றது. தீபவம்சம் 4ம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்டதாகக் கருதப்பட்டாலும், தீபவம்சத்தில் கூறப்படும் கிறிஸ்த்துவின் தோற்றக் காலத்திற்கு முந்திய காலத்துச் செய்திகளின் நம்பகத் தன்மை குறித்து பல வினாக்கள் எழுகின்றது.

இலங்கை வரலாற்று இலக்கியங்களின் ஒழுங்கு நிரலில் மகாவம்சமே அதிக முக்கியம் பெறுகின்றது. தீபவம்சம் என்ற பௌத்த பாளி நூல் எவ்வாறு தீவின் வம்சக் கதைகளைக் கூற முற்பட்டதோ அதே போன்றே மகாவம்சமும் சிங்கள இனத்தை இலங்கையின் ஒரு மகா வம்சமாக (பெரும் பரம்பரையாக) காட்டும் நோக்கில் தொகுக்கப்பட்டதாகும். எனவே சிங்கள, தேரவாத பௌத்த சமூகத்தை இலங்கையின் மூத்த குடிகளாகக் காட்டிக் கொள்ள மகாவம்சத்தில் ஜாதகக் கதைகள் அதிகளவு சேர்க்கப்பட்டிருக்கிறது. பௌத்த பாளி மொழி வரலாற்று இலக்கியமான மகாவம்சத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோணேசர் ஆலயம் குறித்த முதல் தகவல்களைக் காண முடிவதால் திருகோணமலை வரலாற்றுச் சான்றாதாரங்களில் மகாவம்சம் அதிக கவனத்தைப் பெறுகின்றது. பௌத்த பிக்குவான மகாநாம தேரர் என்பவர் கி.பி 6ம் நூற்றாண்டில் எழுதியதாக கருதப்படும் மகாவம்சம் 37 அத்தியாயங்களைக் கொண்டுள்ளது. மகாவம்சத்தின் மூலம் மகாநாம தேரரே பௌத்த, சிங்கள தேசியத்திற்கு ஆரம்ப வித்திட்டவராவர். சிங்கள, பௌத்தர்களை இலங்கைத் தீவுக்கான மகா வம்சத்தினராக காட்ட வேண்டிய தேவை காரணமாகவே மகாவம்சத்தின் காவிய நாயகனாக துட்டகாமினி உயர்த்தப்பட்டான். இதன் மூலம் மகாவம்சம் சிங்கள, பௌத்த தேசிய எழுச்சிக்கான நூலாகியது. மகாவம்சம் பௌத்த, சிங்கள எழுச்சியைத் தூண்டுவதற்கு இலங்கையில் காணப்பட்ட தமிழ் அரசுகளும், தமிழக அரசுகளின் எழுச்சியும் ஒரு காரணமாக அமைந்தது

மகாவம்சம் அநுராதபுர காலத்திலிருந்து மகாசேன மன்னன் (கி.பி 303) ஆண்டு காலவரைப் பகுதிக்குமான இலங்கை வரலாற்றிற்குச் சான்றாதாரமாகக் கருதப்படுகின்றது. மகாவம்சத்தின் ஆரம்ப பகுதி பௌத்தம் இலங்கைக்கு அறிமுகப்படுத்த முன்னர் இருந்த காலகட்டச் சமூகம் குறித்தும் சில தகவல்களைக் கூறுகின்றது. மகாவம்சத்தின் உள்ளடக்கத்தை.

1. சமூக அரசியல் வரலாறு.
2. மத வரலாறு

என இரு பெரும் துறைகளாகப் பார்க்க முடிகின்றது. எனினும் விரிவாக ஆராய முற்படுகின்ற போது நான்கு பிரிவுகளாகப் பார்க்க முடிகின்றது.

1.விஜயனின் இலங்கை வருகைக் காலச் சமூக அமைப்பு
2.வரலாற்று ஆரம்ப காலம் தொட்டு பௌத்தம் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்ட கால வரையுள்ள மத வரலாறு.
3.அநுராதபுர கால அரச வம்ச வரலாற்றுப் பகுதி.
4.துட்டகைமுனு வாழ்க்கை வரலாறு.

மேற்கூறப்பட்ட மகாவம்சத்தின் பிரிவுகள் குறித்து ஆராய முன்னர் 6ம் நூற்றாண்டில் வாழ்ந்ததாகக் கருதப்படும் மகாவம்ச ஆசிரியர் மகாநாம தேரர் தனது வாழ்க்கைக் காலத்திற்கு முந்திய வரலாற்றுச் செய்திகளை எங்கிருந்து எவ்வாறு பெற்றுக் கொண்டார் என்ற வினாவிற்கு விடை தேட வேண்டும். ஏனெனில் இலங்கை வரலாறு குறித்துப் பேசப்படுகின்ற போது மகாவம்சமே மிக முக்கிய சான்றாதாரமாகக் கருதப்படுவதால் மகாவம்சத்தின் நம்பகத்தன்மை குறித்து தெளிவு அவசியமாகின்றது. குறிப்பாக இயற்கை வழிபாடு,



இயக்கர், நாகர், புத்தரின் இலங்கை வருகை என்பனவும் உள்ளடக்கப்பட்டிருக்கின்றன. இயக்கர், நாகர், இராட்சதர்கள் என்பவர்கள் கொடுமையான செயல்களைச் செய்து முறையற்ற வாழ்க்கை முறையைக் கொண்டிருந்தனர் என மகாவம்சம் கூறுகின்றது. மேலும் இத்தகைய அநாகரீக கூட்டத்தையே விஜயனும், கௌதம புத்தரும் சந்தித்தார்கள் என மகாவம்சம் கூறுகின்றது.

மகாநாம தேரர் அடிப்படையில் தேரவாத பௌத்த சங்கத்தைச் சேர்ந்தவராதலால் மகா விகாரையின் நலனைக் கருத்திற் கொண்டே மகாவம்சத்தைத் தொகுத்திருந்தார். மகாவம்சத்தின் உள்ளடக்கத்தில் பௌத்த வரலாற்றுச் செய்திகளும் அரசியல் வரலாற்றுச் செய்திகளும் கலந்து காணப்படுகின்றது. சுமார் கி.பி 6ம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாநாம தேரர் கிறிஸ்து காலத்துக்கு முற்பட்ட இலங்கை வரலாறு குறித்து தெரிவித்த விடயங்களின் நம்பகத் தன்மை குறித்த சந்தேகம் எழுவது நியாயமானதே. அவர் செவி வழியாகக் கேட்டறிந்த செய்திகளை நாம் ஆதாரமாகப் பயன்படுத்தும் போது உருவாகின்ற எச்சரிக்கை உணர்வு அலட்சியப் படுத்தக்கூடிய ஒன்றல்ல. மகாவம்ச ஆசிரியர் தான் வாழ்ந்த நூற்றாண்டுக்கு சற்றேறப்ப ஆறு, ஏழு நூற்றாண்டுகளுக்கு முற்பட்ட தகவல்களைத் தொகுத்துள்ளார். இலங்கையின் ஆதி வரலாற்றை ஆராய்ந்தவர்கள் நீண்ட காலமாக மகாவம்சம் என்ற பௌத்த பாளி மொழி நூலை ஆதாரமாக வைத்தே ஆராய்ந்து வந்துள்ளனர். தொல் பொருளாராய்ச்சியினாலே பெறப்பட்ட பிற சான்றுகள் போன்று அதிக முக்கியத்துவத்தை இத்தகைய ஆராய்ச்சிகள் பெறவில்லை. எனினும், மகாவம்சத்திற் கூறப்பட்டுள்ள செயற்கைத் தன்மை பொருந்திய ஒரு வரலாறு பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ளது.(17)

இலங்கை வரலாற்று நிகழ்வுகள் தேரவாத பௌத்த மதப் பண்பாட்டுப் பின்னணியுடன் கூடிய மரபுடன் பதிவு செய்யப்படும் காலகட்டத்தில் மகாவம்சம் தோற்றம் பெற்றது. தீபவம்சம் என்ற பாளி மொழியிலான திருத்தமற்ற செய்யுள்களின் மொழி வடிவத்திற்குக் கொடுக்கப்பட்ட புதிய காவிய வடிவமாக மகாவம்சத்தைக் கொள்ளலாம். மகாவம்சத்தில் பௌத்த திருமுறையினர் சார்ந்த வரலாற்றுக்கு முக்கியம் கொடுக்கப்பட்டு தொகுக்கப்பட்டுள்ளது. கி.மு.160 ஆண்டுக்கு முந்திய காலப்பகுதிகளுக்கென மகாவம்சத்திலே குறிப்பிடப்பட்டிருக்கிற வரலாறுகள் சந்தேகத்துக் கிடமான ஆதாரங்களைக் கொண்டிருப்பதாலும். அதனால் முன் வைக்கப்படும் கருத்துக்கள் பொய்யானவையாக இருப்பதாலும் அவை முற்றாக நிராகரிக்கப்பட்டுள்ளன என்று கூறும் சிமித் என்ற வரலாற்றாய்வாளரின் மதிப்பீடு கவனத்திற்குரியது. அநேகமான ஆய்வாளர்கள் இவற்றில் உள்ள அதீத கற்பனைகளை நீக்கி

எஞ்சியவற்றை உண்மையான வரலாறாக ஏற்றுள்ளார்கள். கட்டுக்கதைகளை ஆதாரமாகக் கொள்வது எமது உண்மையான வரலாற்றினை கட்டியெழுப்பப் பொருத்தமானதல்ல. இலங்கையின் மூத்த குடிமகனாகக் கூறப்படும் விஜயனின் இலங்கை வருகையை வரலாற்றாசிரியர் மெண்டிஸ் மறுப்பதும் குறிப்பிடத்தக்கதாகும். இப்பொழுது தொல்பொருள் ஆய்வுகள் மூலம் கிட்டும் வரலாற்றுச் சான்றுகள் மகாவம்சம் குறித்த பல சந்தேகங்களை எழுப்புகின்றன. மகாவம்சத்தின் அக முரண்பாடுகளுக்கு அதில் பொதியப்பட்டுள்ள கற்பனைகளும், உள்நோக்கங்களுமே காரணமாகின்றன. ஒட்டு மொத்த நோக்கில் மகாவம்சத்திற்கான பல தகவல்களுக்கு ஆதார நூல்கள் இல்லை எனவே மகாவம்சத்தை ஒரு முழுமையான வரலாற்று நூலாகக் கொள்ள முடியாமல் போகின்றது. தேரவாத, பௌத்த வரலாற்றினை விளக்கும் பாளி நூல்கள் இலங்கையை ஏக சிங்கள பௌத்த ஒற்றையாட்சி நாடு எனக் காட்ட முனைவதால் தமிழ் மக்களின் வரலாறு குறித்து விரிவாகக் கூறவில்லை. சிங்கள-தமிழ் உறவுகள் முரண்படுகின்ற வரலாற்றுக் கட்டங்களை மட்டுமே மேற்குறிப்பிட்ட பாளி நூல்கள் குறிப்பிடுகின்றன. குறிப்பாக மகாவம்சத்தை உட்கூறுகளாக ஆராய முற்படும் ஒருவர் வட இந்தியப் புராண மரபுகளைப் பின் பற்றி இருப்பதை அவதானிக்க முடியும்.

மகாவம்சத்தின் பிரதான நோக்கம் பௌத்த மகாசங்கத்தை கருவாகக் கொண்ட செய்திகளைத் தொகுப்பதென்றாலும், பௌத்த நலனோடு தொடர்புள்ள அரசியற் செய்திகளையும் இணைத்துக் கொண்டது. மேலும் தேரவாத பௌத்த கோட்பாடுகளுடன் முரண்பட்ட மகாயான பௌத்த வரலாறுகளும் மறைக்கப்பட்டும் திரித்தும் கூறப்பட்டிருக்கின்றன. துட்டகைமுனுவை சிங்கள பௌத்த காவிய நாயகனாக உருவாக்கும் பணியில் மகாநாம தேரர் வெற்றி பெற்றுள்ளார். மகாவம்சத்தை காலத்தால் முந்தியதாகக் கருதப்படும் தீபவம்சத்தில் 13 நினைவுச் செய்யுள்களில் கூறப்படும் துட்டகைமுனு குறித்த விடயங்கள் மகாவம்சத்தில் 11 அத்தியாயங்களில் விபரித்துக் கூறப்பட்டுள்ளன. மகாவம்ச ஆசிரியருக்கு துட்டகைமுனுவை எல்லாளன் என்ற தமிழனைத் தோற்கடித்து சிங்கள வீரனாகக் காட்ட வேண்டிய தேவை இருந்திருக்கின்றது. இலங்கைத் தீவின் மகா வம்சத்தினராக சிங்களவர்களை நிலை நிறுத்தும் எண்ணத்திலேயே மகாநாம தேரர் துட்டகைமுனுவைக் காவிய நாயகனாக்கினார். துட்டகைமுனுக்கு பின் பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் வாழ்ந்த மகாவம்ச ஆசிரியர் துட்டகைமுனு குறித்து எழுதிய மகாவம்ச வாசகம் கவனத்திற்குரியது.



புராதன இலங்கையின் தமிழ் சிங்கள உறவுகள் என்ற நூலில் சிங்கள வரலாற்றாய்வாளர் லயனல் சரத் அவர்கள் எழுதிய ஒரு பகுதியை இங்கு சுட்டிக் காட்டுவது பொருத்தமானதாகும். (18)

"துட்டகைமுனு மன்னரைப்பற்றி மகாவம்சத்தில் ஆசிரியர் எவ்வாறு அறிமுகம் செய்துள்ளார் என்பதை ஆராய்ந்து பார்த்தல் அவசியம். துட்டகைமுனு தாயின் கருவில் உருவாகியிருக்கும் வேளையில், விகாரமாதேவிக்கு ஏற்பட்ட மசக்கை அபூர்வமானது. எல்லாள மன்னரது இராடசத போர் வீரனின் கழுத்தை வாளினால் துண்டித்து அவ்வாளில் தோய்ந்திருக்கும் இரத்தத்தை தண்ணீரால் கழுவி, அந்த நீரைத் துண்டாடிய அந்தத் தலையின் மீது அமர்ந்து அருந்த வேண்டும் என்ற தனது ஆதங்கத்தை விகாரமகா தேவி தீர்த்துக் கொண்டதாகக் கூறப்படுகின்றது. துட்டகைமுனு போன்ற போரில் நாட்டம் கொண்ட போராளி ஒருவனுக்கு இச்செயல் பெரிய இழுக்காகிராது. எனினும் நாட்டின் உயர் மதிப்பிற்குரிய பௌத்த மங்கையொருத்திக்கு இவ்வளவு கீழ்த்தரமான சிந்தனை எவ்வாறு உருவாகியது என்பது வியப்புக்குரியது. நேரிய அறவழிகளில் செயல்படுவது முட்டாள்தனமான பயந்த செயலாகவும், கொடுமையை வீரமாகவும் கருதிக் கொள்ளும் அநாகரிகமான கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதும் மகாவம்ச ஆசிரியரது நோக்கமாக இருந்திருக்கலாம் என்பது புலனாகின்றது."

சிங்கள வரலாற்றாசிரியர் லயனல் சரத் அவர்கள் எல்லாளன்-துட்டகைமுனு போருக்கான வரலாற்றுப் பின்னணி குறித்து மகாவம்ச ஆசிரியரது நிலைப்பாட்டை எடுத்துக்காட்டியுள்ளார். எல்லாளன் என்ற தமிழ் மன்னன் நீதி தவறாது இலங்கையை ஆண்ட செய்தியை மகாவம்சமும் வெளிப்படையாகக் குறிப்பிடுகின்றது. எல்லாள மன்னரது ஆட்சிச் சிறப்பையும் இவரது சீரிய நல்லொழுக்கம் பற்றியும் மகாவம்சம் கூறுகையில் "நேரிய நீதி தவறாத எல்லாளன் என்னும் தமிழ் மன்னன் ஆட்சி புரியும் நோக்குடன் இங்கு வந்து அசேலன் என்னும் மன்னரிடம் இருந்து அரசைக் கைப்பற்றி 44 வருடங்கள் ஆட்சி புரிந்தார். மன்னர் தீர்ப்பு வழங்கும் வேளை அனைவர்களிடமும் நடுநிலையாக நடந்து கொண்டார். தமது கட்டிலின் மேல் ஆராய்ச்சிமணி ஒன்றைத் தொங்கவிட்டு மிக நீண்டதொரு கயிறு ஒன்றினால் அரச மாளிகை வாசலுடன் இணைத்திருந்தார். மன்னர் சம்பிரதாய விழுமியங்களுக்கு மதிப்பளித்து சிகிரியாவுக்குச் சென்று பிக்குமார்களிடம் ஒப்படைத்துவிட்டு திரும்பி வருகையில் வண்டியின் ஒரு பகுதி விகாரையில் மோதியதால் விகாரையின் ஒரு பகுதி சிதைந்துவிட்டது. எல்லாள மன்னர் சிதைவடைந்த பதினைந்து செங்கல்லுக்காக மன்னர் பதினையாயிரம் பொற்காசுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்கும்படி மந்திரிமார்களிடம் கட்டளையிட்டார்."(19)

கி.பி 6ம் நூற்றாண்டில் தொகுக்கப்பட்ட மகாவம்சத்தில் எல்லாளன் குறித்த வரலாற்றுச் செய்திக்கு முரணாக மகாவம்சம் எழுதப்பட்டு 1000 வருடங்களுக்கு பின்னர் எழுதப்பட்ட இராஜவலிய என்னும் சிங்கள வரலாற்று நூலில் எல்லாள மன்னன் அநுராதபுர நகரில் 2வது பேதிஸ்ஸ மன்னரால் கட்டப்பட்ட தாது கோபுரங்களைச் சிதைத்தழித்து அதர்மமான முறையில் ஆட்சி செய்ததாகக் குறிப்பிடப்படுகின்றது. தொல்சிலக்கியங்களில் இடைச்செருகல், வரலாற்றுத் திரிபு எவ்வாறு உருவாகின்றது என்பதைக் காட்ட எல்லாளன் குறித்த ஒரு தகவல் உதாரணமாகக் காட்டப்படுகின்றது.

சிங்கள வரலாற்றாசிரியர் லயனல் சரத் அவர்களின் வார்த்தையில் மகாவம்ச-இராஜவலிய ஆகிய நூல்களுக்கிடையிலான கருத்துத் திரிபுகளைத் தெரிந்து கொள்வது நன்று "மகாவம்சம் எழுதப்பட்ட சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னர் எழுதப்பட்ட இராஜவலியிலும் எல்லாள மன்னன் அநுராதபுர நகரில் 2வது பேதிஸ்ஸ மன்னரினால் கட்டப்பட்ட தாது கோபுரங்களைச் சிதைத்தழித்து அதர்மமான முறையில் ஆட்சி புரிந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்விரு கூற்றுக்களும் மகாவம்சத்தின் கூற்றுக்கு முரணானவை. எல்லாள மன்னர் பிருந்தகலையில் வாழ்ந்த பிக்குமார்களுக்குத் தானம் வழங்கியதைக் குறிப்பிட்டுள்ள மகாவம்ச ஆசிரியர் அம்மன்னரினால் சாசனங்களுக்கு ஏதேனும் பாதிப்புக்கள் நிகழ்ந்திருந்தால் அதனைக் குறிப்பிடாமல் இருப்பதற்கு நியாயமில்லை. இராஜவலிய என்னும் நூலை எழுதிய பிரபல்யமடையாத எழுத்தாளர் இதற்கு முன்னர் எழுதப்பட்ட மகாவம்சத்தை வாசித்திருக்கவில்லை என்பது புலனாகின்றது. எனினும் பூஜாவலியை எழுதிய மயூரபாத ஆசிர அதிபதியாகிய புத்தமித்திரர் அவர்கள் அவ்வாறன்று. எனினும் இருவருங்கூட எல்லாள மன்னர் விகாரையை அழித்தொழித்து சாசனங்களுக்குப் பாதிப்புக்களை ஏற்படுத்தியிருப்பதாக எழுதியிருப்பதுதான் வியப்புக்குரியது." (20)

சிங்களத் தொல் இலக்கியங்களில் ஏற்படும் இடைச்செருகல், விபரீதமான கருத்துத் திரிபுகள் போலவே தமிழ்த் தொல் இலக்கியங்களிலும் உண்டு என்பதே முக்கியமானதாகும். இது குறித்து திருகோணமலைத் தமிழ்த் தொல் இலக்கியம் குறித்த அத்தியாயத்தில் பார்க்கலாம்.

விஜயனின் வருகைக்கு முற்பட்ட இலங்கையின் ஆதிக்குடிகளை மகாநாம தேரர் நாகரீகமான மக்களாகக் காட்டிக் கொள்ள விரும்பவில்லை. ஆரியர்கள் வட இந்தியாவிலிருந்து இலங்கையில்



குடியேறியதைத் தொடர்ந்தே இலங்கையில் நாகரீகமான சமூகம் உருவாகியது என்ற கருத்துருவாக்கம் மகாவம்சத்தில் இருந்து தோன்றியிருக்கின்றது. சிங்களவர்களை ஆரியர்களாகக் காட்ட முற்பட்ட மகாநாம தேரர் அவர்கள் இலங்கையின் ஆரம்பக் குடிகளை நாகரீகமற்ற கூட்டத்தினராகக் காட்ட முனைந்தார்.

ஆரியர்களின் வருகையுடன் தான் இலங்கை நாகரீக வளர்ச்சி பெற்றது என்ற கருத்துக்கள் சிரான் தெரணியாகலவின் தொல்பொருள் ஆய்வுகள் மூலம் மறுக்கப்படுகின்றன. எனினும் இலங்கையின் ஆரம்ப கால நாகரீகத்தைத் தோற்றுவித்தவர்கள் ஆரியரின் வருகைக்கு முன்னர் இலங்கையில் வாழ்ந்த ஆதிக் குடிகள் என்பது 1969 இல் அநுராதபுரத்திலும், 1970இல் கந்தரோடையிலும், பதுளை மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பிலும் (பொன்பரிப்பு) நடத்தப்பட்ட தொல்பொருள் அகழ்வு முடிவுகளால் தெளிவாக்கப்பட்டுள்ளது. குறிப்பாகத் திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த குச்சவெளிப் பகுதியில் கண்டெடுக்கப்பட்ட பெருங்கற்காலத்திற்குரிய பாவனைப் பொருட்கள் ஆரியரின் வருகைக்கு முன்னர் வாழ்ந்த ஆதிக் குடிகளின் நாகரீக வளர்ச்சியை எடுத்துக்காட்டுகின்றன மிக நீண்டகாலமாகப் பல வரலாற்றாசிரியர்களினால் மகாவம்சத்தை ஆதாரமாகக் கொண்டு கூறப்பட்டு வந்த கருத்துகள் தற்கால தொல்பொருள் ஆய்வுகளின் மூலம் நிராகரிக்கப்படுகின்றன என்பதற்கு மேற்கூறிய உதாரணங்கள் ஆதாரமாகின்றன. மகாவம்சத்தின் நம்பகத்தன்மை குறித்து பல விமர்சனங்களைத் தொல்பொருள் ஆய்வுகள் எழுப்புகின்றன. சமுத்திரன் பாளி இலக்கிய நூல்கள் ஈழத்தினை ஒரே அரசியற் கூறாகப் படம் பிடித்துக் காட்ட முனைந்தாலும். இது முற்றிலும் உண்மை இல்லை என்பதனை ஏனைய நூல்களில் காணப்படும் வரலாற்றுக் குறிப்புகளும், நாடெங்கிலும் பரந்து காணப்படும் பிராமிக் கல்வெட்டுக்களும் உறுதி செய்கின்றன. புத்தரின் வருகை குறித்த ஐதீக கதையிற் கூட ஈழத்தில் மூன்று அரசுகள் காணப்பட்டதற்கான குறிப்புகள் உள்ளன.(21) அநுராதபுரத்தில் நடைபெற்ற வெள்ளரசு மரம் நாட்டு விழாவில் சத்திரியர்களும், பிராமணர்களும் கலந்து கொண்டதாகப் பிராமிக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

சிங்கள இராசதானிகளின் ஆட்சிக் காலங்களுக்கூடாக இலங்கையின் பிராந்திய வரலாற்றுப் போக்குகளை வெளிச்சத்திற்கு கொண்டு வருவதில் பல இடர்பாடுகள் உண்டு. எனவே பிராந்திய வரலாற்றினைச் சரிவர வெளிச்சத்திற்கு கொண்டு வருவதன் தேவை அவசியமாகின்றது திருகோணமலை குறித்து எழுதப்படும் பிரதேச வரலாற்றுக்கான சான்றுகள் திருகோணமலைச் சமூக வரலாற்றை உள்ளடக்கும் அரசியல், நிர்வாகம், மதம், மரபுகள், பண்பாடு போன்றவற்றை ஆண்டு நிரல் வரிசையில் தொகுத்துக் கொள்ளப் போதாமல் இருப்பதைப் புரிந்து கொள்ள முடிகின்றது. மகாவம்சம் தொகுக்கப்பட்ட காலத்திலிருந்தே இலங்கைத் தீவானது பௌத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்கள ஒற்றையாட்சி நாடாகக் காட்டும் முயற்சி இருப்பதனால் தற்காலச் சிங்கள வரலாற்று ஆசிரியர்களும் இலங்கைத் தீவின் வரலாற்றைச் சிங்கள இராசதானிகளான அநுராதபுரம், பொலநறுவை, தம்பதேனிய, யாப்பகூவ என ஒழுங்கு நிரல்படுத்தியுள்ளனர். இதன் மூலம் தற்காலச் சிங்கள வரலாற்றாசிரியர்களினால் சிங்கள இராசதானிகளை மையப்படுத்தி வகுக்கப்பட்ட காலப் பிரிவுக்குள் திருகோணமலையின் வரலாற்றைக் கால வரையறை செய்வது எந்த வகையிலும் பொருந்தமற்றது. திருகோணமலை தமிழ் ஆட்சியாளர்களின் நிர்வாகத்தின் கீழே இருந்திருக்கின்றது. இலங்கையின் ஆட்சி மையமாக அநுராதபுரத்தையே மகாவம்சம் முதலான பாளி நூல்கள் குறிப்பிடுகின்றன. அதே நூல்கள் அநுராத புரத்திற்கு வடக்கேயும் தெற்கேயும் இருந்த சிறு இராச்சியங்கள் பற்றியும் குறிப்பிட்டுள்ளன. கி.மு. 6ம் நூற்றாண்டில் இலங்கையின் வடபகுதியில் இருந்த நாக அரசுகளின் சிறப்பான சிற்றரசுகளில் ஒன்றாக திருகோணமலை காணப்பட்டது. நாக தீவின் மன்னர்களாக மகோதரன், குலோதரன் என்போர் விளங்கியுள்ளனர். திரிகூடம், இலங்காபுரி என்ற பெயர்களினால் திருகோணமலை அழைக்கப் பட்டிருக்கின்றது.(22)

சில சந்தர்ப்பங்களில் திருகோணமலை மாவட்டத்தின் ஒரு பகுதி சிங்கள அரசின் மேலாண்மையை ஏற்று இருந்ததை அறிய முடிகின்றது. குறிப்பாகப் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்ததெனக் கருதப்படும், ஒல்லாந்தராலும் எழுதப்பட்ட நூல்களிலே இலங்கையிலுள்ள இராச்சியங்கள், சிற்றரசுகள் என்பவற்றுள் திருகோணமலை, கொட்டியாரம் பற்று (மூதூர் பிரதேசம்) என்பனவும் குறிக்கப்படுகின்றன. பதினாறாம் நூற்றாண்டின் முடிவிலே கொட்டியாரம்பற்று வன்னிமையிற் கண்டியரசர்களின் மேலாதிக்கம் ஏற்பட்டிருந்தது. கண்டியில் அரசுரிமை குறித்து ஜயவீர பண்டாரனுக்கும் விமலதர்மசூரியனுக்குமிடையில் போர் ஏற்பட்ட பொழுது ஜயவீரனுக்கு ஆதரவாக கொட்டியாரப் பற்று வன்னியன் போர் வீரர்களையும், போருக்குத் தேவையான கூலியாட்களையும் அனுப்பியிருந்தான்.(23)

திருகோணமலை மாவட்டம் வன்னியராட்சியில் திருகோணமலை, கொட்டியாரம், (மூதூர்) கட்டுக்குளம் பற்று, தம்பலகாமம் என்ற நிர்வாகப் பிரிவுகளாக காணப்பட்டுள்ளது. இந்த நான்கு பிரிவுகளும் தமிழக ஆட்சியாளர்களின் கீழ் காணப் பட்டிருக்கின்றது. இந்த நான்கு வன்னிபங்களும் சிற்றரசுகளுக்கு உரிய அதிகாரத்தைக் கொண்டிருந்தன. மேற் குறிப்பிடப்பட்ட நான்கு வன்னிபங்களில் கொட்டியார வன்னிபமே கண்டியரசனின் மேலாதிக்கத்தை ஏற்றிருந்தது. கிறிஸ்த்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து திருகோணமலை மாவட்டம் சிற்றரசு நிலையில் காணப்பட்ட போதிலும், திருகோணமலை அரசுகளின் கால



வல்லைகளை வரையறைக் செய்வதற்கான உறுதியான சான்றாதாரங்கள் இல்லாதது வரலாற்றைக் கால ஒழுங்கு நிரலின் அடிப்படையில் வகுப்பதில் பல பிரச்சினைகள் உருவாகின்றன. திருகோணமலை வரலாற்றின் போக்குகளைக் கோணேஸ்வரமும், திருகோணமலைத் துறைமுகமே தீர்மானித்திருக்கின்றன. திருகோணமலை குறித்த தொல் இலக்கியங்கள் தல புராண வடிவில் காணப்படுகின்றன. மேற்படி தலபுராணங்களில் திருகோணமலைச் சமூகம் குறித்த சில செய்திகளை மட்டுமே காணக்கூடியதாக உள்ளது.

தொகுப்டரையாகப் பார்க்கின்ற போது இலங்கை வரலாற்றைக் கூறும் தொல் இலக்கியங்களில் பௌத்த பாளி நூல்களான தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் என்பன பௌத்த சிங்கள நலன் சார்ந்த ஒரு வரலாற்றுத் தொடரையே தருகின்றது. மகாவம்சத்திலிருந்தே திருக்கோணேஸ்வரம் குறித்த செய்தியை முதலில் பெற முடிகின்றது. வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு பௌத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட போது சில வட இந்திய இலக்கிய மரபுகளும் அறிமுகமானது. வடஇந்தியாவில் உள்ள புராண மரபுகளும் காவியங்களும் இலங்கையில் பௌத்த பாளி நூல்களின் தோற்றத்திற்குக் காரணமாகின. இராமாயணம், மகாபாரதம் என்பனவற்றின் செல்வாக்கு மகாவம்சத்தில் இழையோடியுள்ளது. துட்டகாமினி - எல்லாளன் போர்க் காட்சிகளும், துட்டகாமினியைக் காவியத் தலைவனாக மகாவம்சம் காட்டுகின்ற பாங்கும் இராமாயணத்தின் பாதிப்பே. மகாவம்சம் சத்திரிய தர்மமான போர் ஆற்றல் உடைய துட்டகாமினியைக் காவிய நாயகனாக்கியுள்ளது.

இலங்கையின் ஆதிக் குடிகள் குறித்த செய்திகள் சமகாலப் பதிவில்லாத காரணத்தால் குழம்பிக் காணப்படுகின்றன. இலங்கையின் பிரபல வரலாற்றாசிரியரான ஜீ.ஜி. மெண்டிஸ் சிங்கள இனத்தின் தோற்றத்திற்குக் காரணமாகக் கூறப்படும் விஜயனின் வருகையை ஏற்றுக் கொள்ளவில்லை. இலங்கையிற் தான் இறுதி வரை பௌத்த தர்மம் பேணப்படும் என்று கௌதம புத்தர் கூறியதாக மகாவம்சம் கூறுகின்றது. மகாவம்சம் பௌத்தத்தை மட்டுமல்ல, பௌத்த மதத்தைப் பின்பற்றும் சிங்கள அரசர்களின் வரலாற்றையும் இலங்கைக்கான மகா வம்சத்தினரது (பரம்பரையினரது) வரலாறாகக் காட்டுகின்றது. ஈழத்தில் நாகரிகத்தினைப் புகுத்தியவர்களான பெருங்கற்காலக் கலாச்சாரத்திற்குரிய திராவிட மொழி பேசிய மக்களும். சிங்கள-தமிழ் மொழிகளைப் பேசியோரின் மூதாதையி-னரும் இணைந்து உருவாக்கியதே தற்கால ஈழத்து நாகரீகமாகும். எனினும் ஈழத்து வரலாற்றை அறிய உதவும் நூல்களாகிய தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் போன்றன பௌத்த மத வரலாற்றைக் கூறுவதையே தமது பிரதான நோக்கமாகக் கொண்டிருந்ததால் ஏனைய சம காலச் சமூகம் பற்றிய வரலாற்றுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல்கள் தேவையான அளவு முக்கியத்துவத்தினைக் கொடுக்கவில்லை. இதுவே மகாவம்சத்தின் குறைபாட்டுக்கும் காரணமாகிவிடுகின்றது. எனினும் மகாவம்சம், சூளவம்சம் என்பனவற்றிற்கு ஊடாகவே இலங்கைக்கான மன்னர்களின் தொடர் வரலாற்றைப் பெறக்கூடியதாக உள்ளது என்பது மிக முக்கியமானதாகும்

இலங்கையின் பௌத்த சிங்கள வரலாற்றைக் கூற முனைகின்ற முன் குறிப்பிட்ட பௌத்த, பாளி நூல்கள் தமிழர்களின் தலையீடுகள் அதிகரிக்கின்ற வேளையில் நிகழ்ந்த சம்பவங்களையும் பதிவு செய்துள்ளன. இலங்கைத் தமிழ் மக்களுடைய வரலாற்றையோ அல்லது தமிழ்ப் பிரதேசங்களின் வரலாற்றையோ தொகுக்கின்ற போது பௌத்த பாளி நூல்களிலும் தங்கியிருக்க வேண்டிய தேவை தவிர்க்க முடியாமல் ஏற்படுகின்றது. இலங்கைத் தமிழ் தொல் இலக்கியங்களைப் பொறுத்தவரை கைலாசபுராணம் காலத்தால் முந்தியது. இதுவே திருகோணமலைக்கான இலக்கிய மரபு உருவாகக் காரணமாக இருந்த போதிலும், கோணேசர் கல்வெட்டிலேயே கோணேசர் ஆலயம் தொடர்பான நடவடிக்கைகளும், திருகோணமலைச் சமூகம் தொடர்பான செய்திகளும் அதிகளவு காணப்படுகின்றது. திருகோணமலை வரலாற்றை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு தமிழத் தொல்லிலக்கியங்களின் பங்களிப்பு அவசியமாகின்றது.

அடிக்குறிப்புகளும் விளக்கங்களும்

1. பேராசிரியர் க.கைலாசபதி. கோணேஸ்வரம் என்ற நூலின் முன்னுரையில். ஆசிரியர் செ.குணசிங்கம், பக். v

2. கலாநிதி.சி.க.சிற்றம்பலம், யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு, பக் 105

3.Silva.K.M.De. A History of Sri Lanka, 1981,pp 20

4 சோழராட்சியில் வேளைக்காறப் படைப்பிரிவு காணப்பட்டது. இந்தப் படைப்பிரிவில் பணியாற்றியோர் மன்னருக்கு நேரப் படை வீரர்களாக இருந்திருக்கின்றார்கள். இவர்கள் போர் ஏற்படும் காலத்தில் அரச படையுடன் இணைந்து பணியாற்றுவதும், ஏனைய காலங்களில் வணிகத்திலும், வேளாண்மைத்துறையிலும் ஈடுபட்டனர். வேளைக்காறப் படையினர் வணிகர்களுக்கு பாதுகாப்பும் அளித்துவந்தனர்.

5 கலாநிதி சி.க. சிற்றம்பலம், யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு பக் 76

6. செ.குணசிங்கம், கோணேஸ்வரம், பக் 20 - 25

7 செ.கிருஷ்ணராசா, இலங்கை வரலாறு பாகம் 1, பக் 23.

8. மேலது, பக் 19.

9. கலாநிதி க.குணராசா, ஈழத்தவர் வரலாறு, பக் 17

10.கலாநிதி.ஆ.வேலுப்பிள்ளை, இலங்கைத் தமிழ் சாசன வழக்காறுகள் - நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு, இலங்கை, 1974. பக் 62

11.பேராசிரியர். சி.பத்மநாதன், திருகோணமலைக் கோட்டையிலுள்ள தமிழ் சாசனங்கள், வீரகேசரி (1.2.1994, பக் 9 )

12 கலாநிதி.ஆ.வேலுப்பிள்ளை, மேலது பக் 62

13.பம்பிலை சீனி. வேங்கடசாமி, மேற்கோள் டாக்டர் ஆ.பத்மாவதி, சோழர் கால அரசும் மதமும் பக் 51,

14.செ.குணசிங்கம், நான்காவது அனைத்துலக தமிழாராய்ச்சி மாநாடு மலர், இலங்கை, 1974, இலங்கையில் தமிழ்ச் சாசனவியல் ஆராய்ச்சியின் வளர்ச்சி பக் 30

15.பேராசிரியர். சி.பத்மநாதன், மேலது, பக் 9

16.Mahavamsa, Chap XXI

17. பேராசிரியர் கா. இந்திரபாலா கோணேஸ்வரர் ஆலய கும்பாபிஷேக மலர் 1981 பக் 49

18 லயனல் சரத், புராதன இலங்கையின் தமிழ்-சிங்கள உறவுகள். பக் 8, சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பு, Centre for Ethnic Harmony, Peace, Communi cation, Nugegode, Sri Lanka

19.மகாவம்சம், 13-33 இடைப்பட்ட பாடல்கள்

20.லயனல் சரத், புராதன இலங்கையின் தமிழ் - சிங்கள உறவுகள், பக் 8, சிங்கள தமிழ் மொழிபெயர்ப்பு, Centre for Ethnic Harmony, Peace, Communi cation, Nugegode, Sri Lanka



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21.கலாநிதி.சி.க. சிற்றம்பலம், யாழ்ப்பாணம், தொன்மை வரலாறு பக். 64

22.கலாநிதி.க.குணராசா, ஈழத்தவர் வரலாறு பக். 26

23.பேராசிரியர் சி.பத்மநாதன். கோணேசர் கல்வெட்டு பக். 34, ஆதாரமாகக் காட்டப்பட்ட நூல் A True and Exact Description of the Great Island of Ceylon by Phillipus Baldaeus trans into English by Pieter Brohier, The Ceylon Historical Journal, Vol VIII July 1958 to April 1959, Nos.1-4 p.16



## 2 திருகோணமலைத் தமிழ் வரலாற்று இலக்கியங்கள்

கோணேஸ்வரத்தின் மாண்மியத்தை வட, தென் மொழி நூல்கள் போற்றுகின்றன. பெரியவளமைப்பத்தி, கைலாசபுராணம், கோணேசர் கல்வெட்டு, குளக்கோட்டன் கம்பசாத்திரம், திருக்கோணாசல புராணம், கைலாயமாலை, வையாபாடல், திருக்கோணாசல வைபவம், கோணமலை அந்தாதி, மட்டக்களப்பு மான்மியம், யாழ்ப்பாண வைபவமாலை, திருக்கரைசைப் புராணம், கதிரைமலைப் பள்ளு என்பன திருகோணமலையின் வரலாற்றைக் கூறும் தொல் தமிழ் இலக்கியங்களில் முக்கியமானவையாகும். மேலும் கி.பி. 5ம் நூற்றாண்டில் வட இந்திய குப்த பேரரசுக் காலத்தில் உருவாகிய வாயு புராணத்திலும் திருக்கோணேஸ்வரம் குறித்துத் தெரிந்துகொள்ள முடிகின்றது. 7ம் நூற்றாண்டிலே திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட திருகோணமலைப் பதிகமும் திருகோணமலை பற்றிய ஆரம்ப காலத்திற்குரிய சில வரலாற்றுச் சான்றுகளைத் தருகின்றன. இவற்றுள் பெரியவளமைப்பத்தி, கோணேசர் கல்வெட்டு, குளக்கோட்டன் கம்பசாத்திரம், திருக்கோணாசல புராணம், கைலாசபுராணம் போன்றன மிக முக்கியமானவையாகும். இதில் கோணேசர் கல்வெட்டு எழுதப்படுவதற்கு ஆதாரமான பெரிய வளமைப்பத்தி செப்பேடு, குளக்கோட்டன் கம்பசாத்திரம் என்பன அழிந்து விட்ட காரணத்தாலே திருகோணமலைபற்றிய ஆரம்ப கால ஆய்வு மேற்கொள்வதிற் பல தடைகள் ஏற்பட்டுள்ளன. மேற்குறித்த நூல்கள் அனைத்தும் கோணேஸ்வர ஆலயத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவையே. திருக்கோணாசல வைபவ ஆசிரியர் அகிலேசபிள்ளை கம்பசாத்திரம், பெரிய வளமைப்பத்தி என்பன குளக்கோட்டனால் உருவாக்கப்பட்டதென்றும், அவற்றில் திருப்பணி விதிகளும், ஆலய நடை முறைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன எனவும் கூறியுள்ளார். தமிழ்த் தொல் இலக்கியங்கள் இலங்கை வரலாற்றைக் கூறும் பௌத்த பாளி நூல்களான மகாவம்சம், சூளவம்சம் போன்று திருகோணமலை வரலாற்றை ஒரு தொடர்ச்சியாகத் தராவிட்டாலும் திருகோணமலை மக்களது சில வழக்காறுகளையும், சில அரசியல் செய்திகளையும் அறிந்து கொள்ள முடிகின்றது.

இலங்கையின் ஏனைய நகரங்களுடன் ஒப்பிடுகையிற் திருகோணமலையில் கிடைத்திருக்கும் கல்வெட்டுக்களும், ஏட்டு வடிவிலான இலக்கியங்களும் மிகத் தொன்மை வாய்ந்தன. இலங்கையிலுள்ள நிர்வாக மாவட்டங்கள் அனைத்திலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலை மாவட்டத்திலேயே மிகக் கூடுதலான தமிழ்ச்சாசனங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.(1)

தமிழ்மொழியில் உள்ள தொல் இலக்கியங்களிற் புராணம் சிறப்பிடம் பெறுகின்றது. கடவுளரை முக்கியப் பாத்திரங்களாகக் கொண்டு ஒழுக்கத்தையும், நீதியையும் நிலைநாட்டும் விதத்திற் பழங்காலத்தில் நடந்ததாக விரித்துக் கூறப்படுவது புராணம் எனப்படுகின்றது.(2) புராணம் என்பதன் பொருள் பண்டைய வரலாறு. உலகத்தினது தோற்றமும் ஒடுக்கமும், பாரம்பரியங்களும், மனுவந்தரங்களும், பாரம்பரியக் கதைகளும் உள்ளடங்கிய ஐந்து விடயங்களையே புராணம் கூறுகின்றது.(3) மேற்குறிப்பிட்ட ஐந்து விடயங்களை உள்ளடக்கியே கி.பி 5ம் நூற்றாண்டிலே குப்தப் பேரரசு காலத்தில் வட இந்தியாவிற் புராணங்கள் வட மொழியில் வளர்ச்சி பெற்றன எனினும் தமிழ் மொழியிலுள்ள உள்ள புராணங்கள் 11ம் 12ம் நூற்றாண்டைச் சார்ந்தவையே. தமிழில் உருவாகிய புராணங்கள் வட மொழியில் எழுந்த புராணங்களைப் போலன்றிச் சைவ சமய குரவர்களின் வாழ்க்கையின் வரலாற்றைக் கூறும் பக்தி இலக்கியங்களாகவும் தலபுராணங்களாகவும் காணப்படுகின்றன. தமிழிலே தோன்றிய புராணங்கள் வடமொழிப் புராணங்களுக்குரிய இலக்கணத்திலிருந்து விலகிக் காவியப் பண்புடையனவாகவே காணப்படுகின்றன. இதற்குக் கைலாச புராணம் ஒரு சிறந்த உதாரணமாகும்.

பொதுவாகப் புராணங்கள் உள்ளிட்ட பல தொல் இலக்கியங்கள் சமகால நிகழ்வுகளைப் பதிவு செய்திருப்பனவாகக் கருத முடியாது. புராணக் கதை, நாட்டார் வழக்காறு, மரபுக் கதைகள் என்பனவற்றின் தொகுப்பாகவும் கருதப்படுகின்றது. புராணம் பொதுவாக சொர்க்கம், நரகம், கடவுள், மனிதர்கள், தேவர்கள், அசுரர்கள் தொடர்பான களங்களில் உருவாக்கப்பட்டிருப்பதாலே கற்பனைகளும், மிகைப்படுத்தலும் புராணங்களின் பொதுப் பண்புகளாக உள்ளன. கி.பி. 12ம் நூற்றாண்டிலே பெரியபுராணம் என்னும் சைவ அடியார்களின் வரலாறு எழுதப்பட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. புராணங்கள் பின்வந்தவர்களால் சிவனடியார்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த அற்புதங்களின் தொகுப்பாகக் கருதப்படுகின்றன. புராணங்கள் சிவனடியார்களின் வாழ்வினை விளக்குவதோடு, சிவநெறி தழைத்தோங்க இலக்கிய நயத்துடன் ஆக்கப்பட்டனவாகும்.

தலபுராணங்கள் திருத்தலங்கள் பற்றிப் புகழ்ந்து பாட எழுதப்பட்டதாகும். தமிழ்ப் புராணங்கள் தென்னிந்தியத் தலங்களின் புகழ் உச்ச நிலையை அடைந்த போது பாடப்பட்டனவாகும். சமய குரவர்களின் தேவாரம், திருவாசகம் என்பனவும் தலங்களின் புகழைப் பாடியிருக்கின்றன. திருப்பதிகங்கள் தல புராணங்களுக்கு



வழிவகுத்தன. சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் எதிராகத் தொடக்கப்பட்ட சிவநெறிப் போராட்டத்திற்கு இத்தகைய உத்திகள் பயன்பட்டன. இந்த வரிசையிலே கைலாசபுராணமும் உள்ளடக்கப்படுகின்றது. புராணங்களில் சொல்லப்படுகின்ற மரபுகள் முக்கியமாகக் கருதப்படுவதால் வரலாற்று ஆய்விற் புராணங்கள் தரும் செய்திகள் ஓரளவு முக்கியம் பெறுகின்றன:

கோணேஸ்வரம் பற்றிய ஆய்வுக்குக் கிடைக்கின்ற தமிழ்த் தொல் நூல்களில் கைலாச புராணமே காலத்தால் முந்தியது. கோணேசராலயம் சிறப்புற்று விளங்கிய காலப் பகுதியிற் இந் நூல் பாடப்பட்டதாகும். கைலாசபுராணம் திருக்கோணேஸ்வரத்தைக் களமாகக் கொண்டிருப்பதால் தல புராணம் எனக் கொள்ள முடிகின்றது. தட்சண கைலாச புராணம் திருக்கோணேஸ்வரரையும், மாதுமையாளையும் போற்றி எழுந்த தல புராணமாகும் இந் நூலில் தலத்தின் தோற்றம், ஆதிவரலாறு பற்றிய இதிகாசக் கதைகளைக் காணக்கூடியதாக உள்ளது. மச்சேந்திய புராணத்தைத் தழுவியே தட்சண கைலாசபுராணம் எனப்படும் கைலாச புராணம் உருவாக்கப்பட்டது. இந்நூலின் மூலப் பிரதி அழிந்துவிட்ட காரணத்தால் கைலாச புராணத்தின் ஆசிரியர் யார் என்பதில் சில சர்ச்சைகள் தோன்றியுள்ளன. கிடைத்தற்கரிய இந்நூலினை திருகோணமலையைச் சேர்ந்த உபாத்தியாயர் சி.சுப்பிரமணியம் பிள்ளை தேடிப்பெற்றுச் சிவசிதம்பர ஐயர் மூலம் 1887இல் வெளியீட ஏற்பாடு செய்தார்.(4) சில ஆய்வாளர்கள் தட்சண கைலாச புராணம் செகராசசேகரன் பாடினான் என்ற கருத்தை முன் வைத்துள்ளார்கள்.(5) எனினும் செகராசசேகரன் கைலாசபுராணத்தைப் பாடினான் என்ற கருத்து பல அறிஞர்களாலும் மறுக்கப்பட்டுள்ளது. 1916இல் டபிள்யூ.வைத்தியலிங்க தேசிகரால் பதிப்பிக்கப்பட்ட கைலாச புராணத்தில் திருகோணமலையைச் சேர்ந்த பண்டிதராசர் இயற்றினார் எனக் கூறப் பட்டுள்ளது. இவற்றை வைத்திலிங்க தேசிகரின் பதிப்பிற் காணப்படும் பின்வரும் செய்யுள் பண்டிதராசர் தான் என்பதை தெளிவுபட உறுதிப்படுத்துகின்றது.

திருக்கிளரு மச்சகேச்சுர புராணத்
செந்தமிழா லெல்லோருந் தெளியத்தானே
பெருக்கமுடன் கைலாசபுராண மென்னப்
பேருவிட்டுச் சீருவிட்டுப் பெருமை தன்னாற்
சுருக்கமுறு வகையாக்கி விருத்தப்பாக்கள் தானு
மறுநூற்று முப்பத்தைந்தாச் செய்தான்
விருக்கு மொழிச் சைவசிகாமணியே யென்ன
மொழிதருமெய் பண்டிதராசன் தானே ..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு பு.பொ.வைத்திலிங்க தேசிகரின் பதிப்புக்குச் சாற்றுக் கவி பாடிய பல தமிழ் அறிஞர்கள் கைலாச புராணம் திருகோணமலையைச் சேர்ந்த பண்டிதராசராலே பாடப்பட்டதாகக் கூறுகின்றார்கள். இவர்களிலே சி.கணேசையர், வ.குமாரசுவாமிப் புலவர், சாமிநாத மயில்வாகனனார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் ஆ.சதாசிவம் கைலாச புராணத்தின் ஆசிரியராக பண்டிதராசரையே கருதுகின்றார். சிறீமத் மு.தம்பையாக் குருக்கள் கைலாச புராணத்தை இயற்றிய ஆசிரியரை "சீர்திசை பரந்த பண்டிதராச கவி" எனக் குறிப்பிடுகின்றார்.(6) தட்சண கைலாச புராணத்திற்குச் சாற்றுக் கவி பாடிய பருத்தித்துறை, புலோலி சிறீமத் வ.குமாரசுவாமிப் புலவர் "பத்த சித்த பூசராம் பண்டிதராசன் தமிழிற் பாடிவைக்க..." என கைலாச புராண ஆசிரியரை குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. (பிரம்ம சிறீ பண்டிதராசர் அருளிச் செய்த சிறீ தட்சண கைலாச புராணம். பதிப்பாசிரியர் பு.பொ.வைத்திலிங்க தேசிகர், 1916) வசாவிளான் சுதேச நாட்டிய அச்சியந்திரசாலையார் இயற்றிய ஆசிரிய விருத்தத்தில் தட்சண கைலாசபுராண ஆசிரியரைச் செந்தமிழ்க் கலைஞான யோரு பண்டிதராசர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.(7) ஈழத்துக் கவிதைக் களஞ்சியம் என்னும் நூலிற் காணப்படும் பண்டிதராசர் குறித்த பேராசிரியர் ஆ.சதாசிவம் அவர்களுடைய கருத்துக்கள் கவனிக்கத்தக்கது. "இவரது ஊர் திருக்கோணமலை. தென்மொழி, வடமொழி ஆகிய இரண்டையும் அறிந்த இவர் கோணேசராலயத்து அருச்சகராயிருந்தார். சிங்கைச் செகராசசேகர மன்னனின் வேண்டுகோட்கிணங்கித் தட்சண கைலாச புராணம் எனப்படும் கோணாசல புராணத்தை இயற்றினார்."(8) இப்பதிப்பு பிரம்ம சிறீ பண்டிதராசருளிச் செய்த சிறீ தட்சண கைலாச புராணம் என்ற தலைப்பில் வெளியானது. கோணேசர் கல்வெட்டின் பதிப்பாசிரியர் இ.வடிவேல் அவர்கள் மேற்கூறப்படும் கருத்தையே கொண்டுள்ளார்.(9) தேசிகரின் கைலாசபுராணத்திற் சாற்றுக்கவிகள் பாடிய தமிழ் அறிஞர்கள் கூறுவது போன்று கைலாசபுராண ஆசிரியரைப் பண்டிதராசர் எனக் கொள்வதே பொருத்தமானதாகும்.

கைலாச புராணம் என்ற நூலின் பெயரை இதன் பதிப்பாசிரியர்கள் தட்சண கைலாச புராணம் என்றே குறிப்பிட்டுள்ளார்கள். எனினும் அதனை இயற்றிய ஆசிரியர் "மாதரவி விறைஞ்சுகதை கைலாச புராணமென வுரையலுற்றேன்" என்றும், மேலும் " திருக்கிளரு மச்சகோச்சர புராணத் செந்தமிழா லெல்லோருந் தெளியத்தானே பெருக்கமுடன் கைலாசபுராண மென்னப் பேருமிட்டுச்...., " எனக் குறிப்பிடுவதன் மூலம் இந்நூலின் பெயர் கைலாச புராணம் என்று குறிப்பிடுதே சரியான முடிபாகும். எனினும் 1887இல் இதன் முதற் பதிப்பை வெளியிட்ட சிவசிதம்பர ஐயரும், 1916இல் பதிப்புச் செய்த பு.பொ.வைத்திலிங்க தேசிகரும் தக்சிணகைலாச புராணம் என்ற பெயர் வழக்கை ஏற்படுத்தினர்.



இலங்கையில் உருவாகிய தல புராணங்களின் வரிசையிலே கைலாச புராணமே மிகப் பழமையானதாகும். திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றினை வட மொழியில் கூறிய தட்சண கைலாச மான்மியம் கோணேஸ்வரத்தின் ஆலய குரு இருபாலை முதன்மை களிடம் இருந்து சில வருடங்களுக்கு முன் தவறிவிட்டது என திருக் கோணாசல வைபவ ஆசிரியர் அக்கிலேசபிள்ளை 1889இல் எழுதிய முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். வதிரி சி. நாகலிங்கப்பிள்ளை தட்சண கைலாச புராணம் என்னும் வசன நூலை வைகாசி மாதம் 1928இல் வதிரி விநாயக சுந்தர விலாச யந்திரசாலையில் அச்சிட்டு வெளியிட்டார். இந்நூலின் மூல நூல் பதினெண் புராணங்களில் ஒன்றாகிய ஸ்காந்தத்திலுள்ள தட்சண கைலாச மான்மியமாகும்.

கைலாச புராணத்திலுள்ள திருநகரச் சருக்கத்தில் தெரிவிக்கப்படும் குளக்கோட்டன், கயவாகு மன்னர்களின் திருப்பணிகள் பற்றிய மரபு வழிக் கதைகள் நீங்கலான விடயங்கள் வடமொழியில் இருந்த மச்சேந்திய புராணத்தை அடிப்படையாகக் கொண்டவையாகும். இதன் மூலம் மச்சேந்திய புராணம் குளக்கோட்டன் காலத்திற்கு முந்தியது என இலகுவிற் புரிந்து கொள்ள முடியும். வடமொழியில் இருந்த மச்சேந்திய புராணத்தைத் தமிழிலும் கற்றுணர வேண்டும் என்பதற்காகத் தென் மொழியான தமிழிற் பாடப்பட்டது. குளக்கோட்டனின் தந்தை வராமதேவன் மச்சேந்திய புராணத்தை நாள்தோறும் பாடக் கேட்டதாகக் கைலாச புராணம் கூறுகின்றது. எனவே கைலாச புராணத்தின் மூல நூலான மச்சேந்திய புராணம் பதினோராம் நூற்றாண்டுக்கு முற்பட்டது எனக் கருதலாம். கைலாச புராணம் ஏழு சருக்கங்களைக் கொண்டது. 1.பாயிரம், 2.இலங்கை மண்டலச் சருக்கம், 3.திருமலைச் சருக்கம், 4.புலஸ்தோற்பத்திச் சருக்கம், 5. அர்ச்சனாவிதிச் சருக்கம், 6.மச்சவதாரச் சருக்கம், 7.தெரிசனாமூர்த்திச் சருக்கம், 8.திருநகரச் சருக்கம் என்பனவாகும். கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ள பாயிரத்திற் கோணேசர் புகழ் கூறப்பட்டுள்ளது. அத்துடன் மாதுமையம்மை, விநாயகர், சுப்பிரமணியர், சமய குரவர்கள், திருக்கோணேஸ்வரத்திற்குத் திருப்பணி செய்த குளக்கோட்டன் ஆகியோரைச் சிந்தையில் நிறுத்திப் பாடப்பட்டிருக்கின்றது. ஈழமண்டலச் சருக்கம் காவியத் திற்குரிய தன்மையுடையதாக வர்ணனை மிகுந்து காணப்படுகின்றது. "தேன் நிறைத்த உயர் அம்பரைச் செங்கதிர் வான் நிறைத்து வருவது போல" போன்ற வர்ணனைகள் மிகுந்து காணப்படுகின்றது. இதே போன்று திருகோணமலையின் இயற்கை அழகை "நாநிலம் பெருமகள் உடுத்த கடற்துகள்" என்ற வரிகள் இலக்கியச்சுவைக் கான ஒரு சில எடுத்துக்காட்டுகளாகும். நீலக் கடலை ஆடையாக அணிந்த முல்லை, மருதம், நெய்தல், குறிஞ்சி இணைந்த நிலமே என்ற திருகோணமலையின் நிலத் தோற்றப் பண்பை மேற்கூறிய வரிகள் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றன. "இலக்கியப் பண்புகளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்த வரையில் இதற்கு நிகரான நூலேதுவும் இலங்கையில் தோன்றியதாகத் தெரியவில்லை. இலங்கையிலே தமிழரின் ஆதிக்கமும், வித்துவத்திறனும், சைவசமயமும் உன்னத நிலையிலிருந்த காலமொன்றினைக் கைலாச புராணம் பிரதிபலிக்கின்றது. புராணம் எனக் கூறப்பட்டபோதிலும் காவிய இலக்கணத்திற்குரியதாகவே காணப்படுகின்றது. திருகோணமலை பற்றியதோர் தனியானதோர் இலக்கிய மரபு உருவாகி மலர்வதற்கும் இதுவே ஆதாரம்".(10)

சி.நாகலிங்கப்பிள்ளையால் வட மொழியிலிருந்து தட்சண கைலாசபுராணப் பிரதி ஒன்று தமிழ்ம் மொழி பெயர்க்கப்பட்டு 1929இல் கொழும்பில் வாழ்ந்த நா.குமாரசுவாமிக் குருக்கள் அவர்களினால் வெளியிடப்பட்டது. திருக்கோணேஸ்வரம் உட்படப் பல தலங்களின் மகிமைகளைக் கூறுகின்றது. கந்தபுராணத்திலுள்ள தட்சண கைலாச மான்மியத்தின் மொழிபெயர்ப்பாக இருப்பதனால் ஆலய வரலாறு தொடர்பான புராணக்கதைகள் மட்டுமே காணப்படுகின்றன. திருகோணமலைச் சமூக மரபுகளோ அல்லது அரசியல் வரலாற்றுச் செய்திகளோ காணப்படவில்லை. திருமலைச் சருக்கத்தில் திருமலையின் தோற்றம், ஊழியின் தோற்றம், ஊழியின் முடிவு, ஊழிக்காலத்தில் இறைவனுடன் ஆன்மா ஒன்று சேர்தல் போன்ற இந்து மதக் கோட்பாட்டை விளக்கும் தத்துவங்கள் கருப்பொருளாக அமைந்துள்ளன. கைலாசபுராணத்தின் ஏழாம் சருக்கம் குளக்கோட்டன், கயவாகு மன்னர்கள் திருக்கோணேஸ்வரத்திற்குச் செய்த திருப்பணிகளையும், அளித்த தானங்களையும் விரிவாகத் தெரிவிக்கின்றது. குளக்கோட்டன், கயவாகு பற்றிய ஏனைய சாசனங்களுடன் ஒப்பிட்டு உண்மையை அறிந்து கொள்ளக் கிடைத்த முதலாவது தொல்லிலக்கியம் என்ற காரணத்தால் கைலாச புராணத்தின் முக்கியத்துவம் அதிகரிக்கின்றது.

## கோணேசர் கல்வெட்டு

"குளக்கோட்டு மன்னன் கோணேசர் ஆலயம் பற்றியும், அதனை நிர்வாகம் செய்யும் சட்ட திட்டங்களைப் பற்றியும் விரிவாகக் கூறியுள்ள விடயங்கள் செப்பேட்டுப் பெரியவளமைப் பத்தியிற் பொறித்து வைக்கப்பட்டிருந்தன. அந்தப் பத்தியிலுள்ள விடயங்களைத் தொகுத்தும் விரித்தும் கவிராஜவரோதயர் பாடியுள்ள பாடல்களும் உரைநடைப் பகுதியுமே கோணேசர் கல்வெட்டாகும்."(11) கோணேசர் கல்வெட்டைக் கோணேசர் சாசனம் என பொ.வைத்திலிங்க தேசிகரும் (1916), திரிகோணமலைக் கல்வெட்டுப் புராணம் என ஆ.முத்துத்தம்பிப்பிள்ளையும் குறிப்பிட்ட போதிலும் கோணேசர் கல்வெட்டு என்பதே நூலாசிரியர் வழங்கிய பெயராகும். சாசனங்களிற் பொறிக்கப்பட்ட செய்திகளைப் பாடலாக எழுதும் முறையைக் கல்வெட்டெனக் கூறுவதுண்டு. "சாசன வாசகங்களை அடிப்படையாகக் கொண்டெழுந்த இலக்கியங்களையும் கல்வெட்டென குறிப்பிடும் வழக்கம் இலங்கையில் ஏற்பட்டிருந்தமைக்குக் கோணேசர் கல்வெட்டு என்னும் நூல் ஓர் எடுத்துக்காட்டாகும்".(12) கைலாச புராணத்தின் தொடர்ச்சியே கோணேசர் கல்வெட்டு எனக் குறிப்பிடுவதற்கு இரு தொல் இலக்கியங்களிலும் பொதுவான பண்புகள் உள்ளன. கைலாச புராணம் கோணேஸ்வரர் ஆலயம் சிறப்பு நிலையிலிருந்த காலகட்டத்தில் இயற்றப்பட, கோணேசர் கல்வெட்டு ஆலய மரபுகளும், வழமைகளும் சீர் குலைந்த காலத்தில் எழுதப்பட்டது.

திருக்கோணேஸ்வரத்தின் வரலாற்றம்சங்களையும், திருகோணமலை வன்னிமைகளின் வரலாறு பற்றிய சில செய்திகளையும், நாட்டார் வழக்காறுகளையும் இணைத்துக் கூறும் தொல் இலக்கியம் கோணேசர் கல்வெட்டு என அழைக்கப்படும். இந்த நூல் திருகோணமலை மக்களின் பண்டைய வாழ்வியற் பண்பாட்டையும், சமூக வழக்காறுகளையும் தெரிந்து கொள்ள உதவும் சிறந்த இலக்கியமாகும். திருகோணமலையைச் சேர்ந்த கவி இராஜவரோதயன் இயற்றிய இந்த நூல் நான்கு தடவை மறுபதிப்புச் செய்யப்பட்டிருக்கின்றது. முதல் மறுபதிப்பை 1887இல் வல்லை க. சின்னத்தம்பிப்பிள்ளை வெளியிட்டார். 1916இல் பு.பொ. வைத்திலிங்க தேசிகர் கோணேசர் கல்வெட்டைத் தக்சிண கைலாச புராணத்துடன் சேர்த்து வெளியிட்டார். 1950இல் திருகோணமலையைச் சேர்ந்த வே.அகிலேசபிள்ளையின் மகன் அ.அளகைக்கோன் திருகோணமலை வைபவம் என்ற நூலின் இணைப்பாகச் சேர்த்து வெளியிட்டார். மேற்குறிப்பிட்ட மூன்று பதிப்பாசிரியர்களும் கவி இராஜவரோதயர் எழுதிய கோணேசர் கல்வெட்டை மறுபதிப்புச் செய்தார்களே தவிர உரைநடை எழுதவில்லை. ஆனால், 1993இல் திருகோணமலைத் தமிழ் அறிஞர் பண்டிதர் இ.வடிவேல் அவர்கள் கோணேசர் கல்வெட்டை விளக்கவுரையுடன் வெளியிட்டார். இலங்கையிலே, தமிழ் மொழியிலே எழுதப்பெற்றுள்ள வரலாற்றுச் சார்புடைய நூல்களிலே கோணேசர் கல்வெட்டுத் தனித்துவமானது. பல ஆதாரபூர்வமான வரலாற்றுச் செய்திகள் அதில் அடங்கியுள்ளன.

திருகோணமலைப் பிராந்தியத்திலுள்ள சாசன வழக்காறுகளையும் அவற்றின் பொருள் மரபினையும் அடிப்படையாகக் கொண்டு உருவாகிய ஒரு தொடர்ச்சியான இலக்கிய மரபினைப் பிரதிபலிக்கின்ற நூலாகவே கோணேசர் கல்வெட்டு அமைந்துள்ளது.(13) குறிப்பாகக் குளக்கோட்டன் திருப்பணிகள், திருகோணமலைச் சமூகம் பற்றிய செய்திகள் தெளிவாகக்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறப்படுவதனால் இலங்கை வரலாற்றை ஆராய முற்படும் வரலாற்று ஆர்வலர்களின் கவனத்தை அதிகளவு ஈர்த்துள்ளது. வரலாற்று ஆய்விற்கு மட்டுமன்றி நாட்டார் வழக்காற்றியல், மொழியியல் ஆய்வுகளுக்கும் கோணேசர் கல்வெட்டு மிகச் சிறந்த ஒரு ஆதார நூலாக இருப்பதன் காரணமாக அதிக முக்கியம் பெறுகின்றது.

கவிராஜவரோதயன் திருகோணமலையைச் சேர்ந்தவர் என்பதை ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம் என்ற நூலின் தொகுப்பாசிரியர் பேராசிரியர் ஆ.சதாசிவம் கூறுகின்றார். கவி இராஜவரோதயன் எந்தக் காலகட்டத்தில் வாழ்ந்தார் என்பதை அறிவதிலே பல சிரமங்கள் காணப்படுகின்றன. பேராசிரியர் சி.பத்மநாதன் கோணேசர் கல்வெட்டு பதினேழாம் நூற்றாண்டில் எழுதப்பட்டதாகக் கூறுகின்றார்(14). எனினும் கோணேசர் கல்வெட்டின் காலம் குறித்துப் பல முரண்பாடான கணிப்புக்கள் தொடர்கின்றன. கோணேசர் கல்வெட்டில் உரைநடைப் பகுதி காணப்படுவது அதன் காலத்தைப் பின்னோக்கிப் பார்க்கத் தூண்டுகின்ற போதும் 16ம் நூற்றாண்டிற்கு முற்பட்டது எனக் கொள்வது பொருத்தமானதாகும். ஐரோப்பியர் வருகைக்கு முற்பட்ட காலத்தில் எழுதப்பட்டிருக்க வேண்டும். கோணேசர் கல்வெட்டில் காணப்படும் ஆங்கிலேயர் பற்றிய குறிப்பு பிற்கால இடைச் செருகலாகக் கொள்வது பொருத்தமானதாகும். எனவே கவிராசவரோதயன் காலம் குறித்த கணிப்பை சரியாக மதிப்பிடுவதற்கு மேலதிக ஆய்வுகள் அவசியமாகின்றன.

> *"சொல்லுற்ற சீர்க் குளக்கோட்டு மன்னன் சொற்படி சொல்லென்னவே*
> *கல்வெட்டுப் பாட்டெனப் பாவனை பாதி கதைப் பெறுவாய்*
> *அல்லுற்ற கண்டத்தன் பொறுமைத நெஞ்சில் வருத்தி யிதை*
> *வெல்லுற்ற சீர்க் கவிராச வரோதய பூபனனே"* (15)

மேற்படி பாடலின் பிரகாரம் குளக்கோட்டன் முற்காலத்திலே சொல்லி வைத்ததாற் போன்று சொல் என்று கேட்க சிவனை நெஞ்சில் நிறுத்தி கவி இராஜவரோதயன் கோணேசர் ஆலய விதிகளைப் பாடினான் என அறிய முடிகின்றது. குளக்கோட்ட மன்னன் திருக்கோணேஸ்வரத்திலே செய்த திருப் பணிகளும், ஆலய நிர்வாக வரலாறுகளும் ஏனையவையும் செப்பேட்டுப் பெரிய வளைமைப் பத்தியில் எழுதி வைக்கப்பட்டிருந்தன. அதிலுள்ளவற்றையே கவிராஜவரோதயன் கோணேசர் கல்வெட்டு எனப் பாடியருளினார். செப்பேட்டுப் பெரிய வளைமைப்பத்தியில் உள்ள எல்லா விடயங்களையும் கவிராஜ வரோதயர் பாட்டாகப் பாடினார் என்று சொல்வதற்கில்லை. கோணேசர் ஆலய நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்துவதற்காகத் தமிழ் நாட்டி லிருந்து குடிமக்களை அழைத்துத் திருகோணமலை மாவட்டத்திலே குடியமர்த்தியதையும், அந்த மக்களை நீதி தவறாமல் ஆட்சி செய் வதற்குக் குறுநில மன்னர்களைப் போல வன்னிமைகளை அமர்த்திய தையும் கவிராஜவரோதயர் செப்பேட்டிலுள்ள படியே கோணேசர்



கல்வெட்டிற் சொல்லி வைத்துள்ளார். அத்துடன் சமூக வழமைகளையும், தொழும்பு முறைகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

குளக்கோட்டன், கயவாகு மன்னன் பற்றிய செய்திகள் பாடல்களிற் காணப்படுகின்றன. குளக்கோட்ட மன்னனினால் உருவாக்கப்பட்ட வன்னிபங்கள் பற்றிய தகவல்கள் உரைநடையிற் காணப்படுகின்றன. தமிழ்நாட்டில் மருங்கூர், சோழநாடு, காரைநகர், மதுரை போன்ற இடங்களில் இருந்து வன்னிபங்கள் வரவழைக்கப் பட்டுத் திருகோணமலையிலே குடியமர்த்தப்பட்டனர். இவர்கள் திருகோணமலையில் பூபாலக்கட்டு என்னுமிடத்தில் மாளிகையில் வாழ்ந்தனர். குளக்கோட்டன் மதுரையிலிருந்து பூபாலவன்னிமைப் பரம்பரையையும், காரைக்காலில் இருந்து செகராசநாத வன்னிமைப் பரம்பரையையும், சோழநாட்டில் இருந்து காராளசிங்க வன்னிமைப் பரம்பரையையும், மருங்கூரில் இருந்து நடராச குமாரசிங்க வன்னிமைப் பரம்பரையையும் திருகோணமலைக்கு அழைத்து வந்து மனுநீதி தவறாது ஆட்சி செய்யும்படி வேண்டினான். திருகோணமலை, கட்டுக்குளம் பற்று, நிலாவெளி ஆகிய பகுதிகளில் நிர்வாகிகளாகத் தமிழ்நாட்டில் இருந்து அழைத்துவரப்பட்ட வன்னிபங்கள் நியமிக்கப்பட்டனர். இந்த வன்னிபங்கள் திருக்கோயில் வரை ஆட்சி செய்ததாகவும் அறியக்கிடக்கின்றது. வன்னிபங்களுக்குத் தொண்டு செய்யத் தொழும்பர்களும் அழைத்து வரப்பட்டனர்.

கோணேசர் கல்வெட்டில் வன்னிபங்களின் கடமையும், தொழும்பர்களின் தொண்டு விதிமுறைகளும் மிக விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. திருமணம், இறப்பு போன்ற நிகழ்வுகளின்போது தொழும்பர்கள் செய்யவேண்டிய கடமைகள் வரையறை செய்யப்பட்டிருக்கின்றன. இவை தவிரக் குளக்கோட்டு மன்னன் பெருந் தொகையான சோழநாட்டு மக்களை மருங்கூர், காரைக்கால், திருநெல்வேலி, போன்ற இடங்களில் இருந்து அழைத்து வந்து திருகோணமலையிலே குடியேற்றி வயல்களையும், குளங்களையும் உண்டாக்கி வேளாண்மையை விருத்தி செய்தான் என்ற செய்தியையும் அறியக்கூடியதாக இருக்கின்றது. கட்டுக்குளம்பற்று, கொட்டியாரம்பற்று தம்பலகாமப் பற்றுக்களில் குளக் கோட்டு மன்னனால் குடியமர்த்தப்பட்ட குடி மக்களில் ஒருசாரார் கோயிலின் தொழும்பர்களாகவும், மற்றொருசாரார் குடிமக்களின் தொழும்பர்களாகவும் நியமிக்கப்பட்டார்கள். தொழும்பு செய்வோருக்காகக் குளக்கோட்டு மன்னன் வயல் நிலங்களை மானியமாக வழங்கியிருந்தார் கோணேஸ்வரத்தின் பராமரிப்புக்காக உண்டாக்கப்பட்ட நில புலங்கள், கிராமங்கள், ஆங்காங்கே குடியமர்த்தப்பட்ட மக்களின் கடமைகள் மற்றும் கோயிலின் தொழும்புகளுக்காக அவர்களுக்கு வழங்கப்பட்ட மானியங்கள், கோயிலுக்குரிய திரவியங்கள், தானியங்கள், ஏனைய வகைகள் முதலிய சேமிப்புக்கள், களஞ்சியப் பொருட்கள், என்பவற்றைப்

பெரியவளமைப்பத்தியில் திட்டம் பண்ணியுள்ளபடி செயற்படுத்தும் கடமைகளைக் கனகசுந்தரப் பெருமாள் என்பவர் செய்து வந்துள்ளார்.(16) குளக்கோட்டன் காலத்து தொழும்பு முறை தம்பலகாமப்பற்றில் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. தம்பலகாமப் பற்றில் அப்பன் தொழும்பு, புலவன் தொழும்பு, வைராவியார் தொழும்பு, மாலைகட்டித் தொழும்பு, இராசமேளம் அடிக்கும் தொழும்பு, பண்டாரியார் தொழும்பு, நாவிதன் தொழும்பு, குடும்பன் தொழும்பு போன்ற பல வகைப்பட்ட தொழும்பு முறைகள் இருந்தன. இவர்களுக்காக வழங்கப்பட்ட எலிபட்டப்பன் வயல், புலவன் வயல், வைரவியார் கீத்து, மாலை கட்டிக் கீத்து, மேளகாரன் கீத்து, பண்டாரி கீத்து, பெரிய வண்ணான் கீத்து, அம்பட்டன் வெட்டுக் காடு, பள்ளன் வயல் போன்றன. இன்னும் நடைமுறையிற் காணப்படுகின்றன.

திருகோணமலையைச் சுற்றியுள்ள பகுதியிற் குளக்கோட்டனால் உருவாக்கப்பட்ட தொழும்பு முறை முற்றாக மறைந்து போய்விட்டது. போர்த்துக்கீசர் திருக்கோணேஸ்வரத்தை அழித்த பின்னர் கட்டுக்குளப்பற்று, கொட்டியாரப்பற்றுப் பகுதியில் வாழ்ந்த தொழும்பர்களின் கோயிற் தொண்டு கைவிட வேண்டியேற்பட்டதே காரணமாகும். இதனால் தொழும்பர் அனுபவித்து வந்த மானிய முறைகளும் அழிந்துவிட்டன. போர்த்துக்கீசரது மூர்க்கத்தனமான நடவடிக்கை காரணமாகத் திருகோணமலை மாவட்டத்திலிருந்த பல இந்து மத ஆலயங்கள் அழிக்கப்பட்டவே ஆலயத் தொழும்பர்களுக்காக வழங்கப்பட்ட தொழும்பு முறையும் அழிந்து, தொழும்பு மானிய முறையும் கைவிடப்பட்டது. எனினும் மேற்படி மரபுகள், தம்பலகாமம், குச்சவெளி, திரியாய், மற்றும் கொட்டியாரப் பகுதியிற் பின்பற்றப்பட்டன.

கோணேசர் கல்வெட்டு செய்யுட் பகுதியாகவும், உரை நடைப் பகுதியாகவும் இரு பிரிவுகளாக உள்ளது. செய்யுள் பகுதியில் குளக்கோட்டன் திருப்பணி, கயவாகு மன்னன் கொடை என இரு பகுதிகளாகப் பார்க்க முடிகின்றது. உரைநடைப் பகுதி 29 தலைப்பின் கீழ் எழுதப்பட்டிருக்கின்றது. 1.மாணிக்கங்கள் வரவு 2.வரிப்பத்தார் 3.கலியாணத்துக்குச் செப்தொழும்பு 4.தீபைக்குச் செப்தொழும்பு முறை 5.சூகர வேட்டை 6.மழைமை வரவு 7.கயவாகு ராசன் உபயம் 8. புவனேகை கயவாகு 9.பரராசசேகரன் செகராசசேகரன் வரவு 10.ஆரியச் சக்கரவர்த்தி வரவு 11.திரவிய இருப்பு 12.சிந்தூர இருப்பு 13.எட்டு இராசாக்கள் கொடுத்த திரவிய இருப்பு 14.சிங்காசனத்துக்கருகான திரவியம் 15.மாகாலிங்க இருப்பு 16.திருமலையின் கீழ்ப்புதினம் 17.திருநாள் 18.கழனிமலை 19.திருத்துரொங் கட்டியது 20.ஆசாரிமார் வரவு 21.காரானர் வரவு 22.புலவன் வரவு 23.வன்னிபம் வரவு 24. காரைநகரால் வந்த வன்னிபம் 25.சோழநாட்டு வன்னிபம் 26.மருங்கூர் வன்னிபம் 27.கருகுலக்கணக்கு 28 ஆலாத்திப் பெண்கள் 29.திருச்சூகர வேட்டைகதுாது.



மேற்கூறிய உரைநடைப் பகுதிகளிலே திருகோணமலை மக்களின் வழக்காறுகள், மரபுகள், கோணேசர் ஆலயம் தொடர்பான விடயங்கள், தொழும்பர்களின் தொழும்பு, திரவிய இருப்புக்கள் போன்றன எழுதப்பட்டிருக்கின்றன. திரவிய இருப்பு என்ற உரை நடைப் பகுதியில் கோணேசர் ஆலயத் திரவிய இருப்புப் பற்றி விபரமாகக் கூறப்பட்டுள்ளது. எட்டு இராசாக்கள் கோணேசர் ஆலயத்திற்கு அளித்த நன்கொடை விபரத்தைப் பெரியவளமைப் பத்தியிலிருந்து பார்த்து கனகசுந்தரப் பெருமாள் சபையோருக்குக் கூறியது :

## திரவிய இருப்பு

*வரராமதேவன் அறைமுதலில் வைத்த பொன் களஞ்சு 689*
*குளக்கோட்டு மகராசா அறைமுதலில் வைத்த பொன் களஞ்சு 8481*
*பொன்னகை களஞ்சு 9512 களஞ்சு.*
*கயவாகுமகாராசா அறை முதலில் வைத்த பொன் களஞ்சு*
*பொன்னகை களஞ்சு 249*
*புவனேகயவாகு இறைமுதலில் வைத்த பொன் களஞ்சு 9284*
*பொன்னகை களஞ்சு 3926*
*நரசிங்கச்சக்கரவர்த்தி அறை முதலில் வைத்த பொன் களஞ்சு 89211*
*பொன்னகைக் களஞ்சு 2948*
*பரராசசேகரன் செகராசசேகரன் இவர்கள் அறை முதலில் வைத்த பொன் களஞ்சு 729 பொன்னகைக் களஞ்சு 781*
*ஆரியராசன் அறை முதலில் வைத்த பொன் களஞ்சு 219. பொன்னகை களஞ்சு 120*
*நாட்டவர்கள் கோயிலறையில் வைத்துக் கும்பிட்ட பொன் களஞ்சு 219*

எட்டிராசாக்கள் கொடுத்த திரவிய இருப்பு என்னும் தலைப்பிலே கோணேசர் ஆலயத்திலே திரவியங்கள் எங்கு எப்படி வைக்கப்பட்டிருந்தது என்ற விபரத்தையும் கோணேசர் கல்வெட்டுத் தெளிவாகக் கூறுகின்றது.

## எட்டிராசாக்கள் கொடுத்த திரவிய இருப்பு

*முன்சொன்ன எட்டு ராசாக்களும் கொடுத்த திரவியமும் நகையு மிருக்குமிடம் ஆலயத்தின் கிழக்கு வாயிலில் ஏழு கற்படிக்குக் கீழே தெற்குப்புறமாக ஒரு முக்கோணக் கல்லுச் சாத்திக் கட்டப் பட்டிருக்கிறது. அதன்மேல் ஒருமுக்கோணக் கற்கதவுண்டு. அதனைத் திறந்து உள்ளே போக முடக்குத்தாறு முழத் தாழ்வுக்கப்பால் ஒரு பண்டகசாலை உண்டு. அதற்குள் எட்டிராசாக்கள் கொடுத்த திரவியம்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பாக வைக்கப்பட்டுள்ளது. அதற்குக்காவல் இரணவீரபத்திரனும் ஐந்தலைநாகமும். திரவியக் குகையிற் கிட்ட வைரவர் காவல். இது பூதநாயகனிடைக்கம்.

வடக்கே வாயிலிலே ஒன்பது கற்படிக்குக் கீழ் நாற்சதுரக் கதவுண்டு. அதனைத் திறந்துள்ளே போக மேற்குப்புறமாக அறுகோணக் கல்லுங் கட்டப்பட்டுள்ளது. அதன்கீழ் முப்பத்தாறு முழத்தாழ்வுக்கப்பால் ஒரு பண்டகசாலையுண்டு. அதற்கு நாலு மூலைப் பத்திரகாளியும் பூயனுங்காவல். நகைக் குகைக்கு நாலுபுறத்தும் நாலுவைரவர் காவல். கனகக்குகைக்கு நாலு புறத்தும் நாலுவைரவர் காவல். இவை எல்லாம் ஆபதோத்தாரண வைரவரிடம் அடக்கம்.(17)

## சிங்காசனத்துக்குள்ள திரவியம்

கொப்பக்கிருக சிங்காசனத்துக்கு வடபாலாக முக்கோணமான கல்லொன்றுபாவுகல்லோடே பரவியிருக்கும். அந்தக் கல்லை யுயர்த்தப்போட அதிலொரு வாசலுண்டு. அதற்குள்ளே படியும் தொண்டு போக அறுபத்துநான்கு முழ நீளத்துக்கப்பாலிருந்த நெருக்க மான ஒரு தெருவிருக்கும். அதற்கப்பாலே மிகுந்த விசாலமான ஒரு மண்டபமுள்ளது. அதனுள் சாத்துப்படிக்கான நவரத்தினங்கள் பதித்த திருவாபரணங்களும், தங்கக்குடை, வெண்குடை, தங்க ஆலவட்டம், பொன்னாலான வட்டம், வெள்ளியாலான வட்டம் இவை முதலான பல திரவியமுமுண்டு.

கோணசர் கல்வெட்டில் கயவாகு மன்னன் கோணேசர் ஆலயத்திற்கு அளித்த உபயம் தனி விபரமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

## கயவாகுராசன் உபயம்

திருமருவு கயவாகு மகாராசனும், தனது படை மனுகம், மாவெலி கங்கையருகாக வெகுவிசாலமான வெளியுந் திருத்தி, அதற்கடுத்த அணைகளுங் கட்டுவித்து. அதன்மேல் பால் வெகுகுளங்களுங் கட்டுவித்து ஆயிரத்து முன்னூற்றைம்பதவண நெல் விதைப்புத் தரையுந் திட்டம் பண்ணிப் பத்துக்கொன்று அடையுமெடுப்பித்து, அதற்கருகாகத் தென்னை பன்னீராயிரம், புன்னை பன்னீராயிரம், இலுப்பை பன்னீராயிரம், பூகம் பன்னீராயிரம், ஏரண்டம் பன்னீராயிரம், பனசம் பன்னீராயிரம், மேதியினம் பன்னீராயிரம், பலபல விதமான புட்பவனச் சோலைகளும் செய்வித்து ஆதியாகிய கோணநாயகரே! இகபர மிரண்டுமறியாமல் நரசென்மமாகப் பிறந்த அடியேன் எனது



சிற்றறிவினாற் றேவரீருடைய தமனியவாலயத்தை அழித்து வேறாக்கு விடுவேனென்று சொன்ன பிழையைப் பொறுத்துக் கொள்ள வேண்டுமென்று விழுந்து நமஸ்காரம் பண்ணி இதுவெல்லாந் தோணேசர்க்கென்று தாமிரவார்த்துக் கொடுத்துக் குளக்கோட்டு மகாராசா ஒருநாளைக்கிரண்டவண அரிசி பூசைக்குத் திட்டம்பண்ணினது. இப்போது அதிகமாக நாளொன்றுக்கு மூவவண அரிசியும் அதற்கடுத்த செலவுங் கட்டளையன்றி ஒருநாளைக்கு மூன்றவண அரிசி பூசை நடக்கும்படி திட்டம்பண்ணிக் கனகசுந்தரப்பெருமாள் கவசத்திலும் பதிப்பித்துச் செப்பேடுவரைந்து கொடுத்து வன்னியம் இருபாகை முதன்மை முதலாகச் சகலரையுமழைப்பித்து தான் கட்டுவித்து வச்சிரமணியமண்ட பத்திலிருந்து சகலருக்குஞ் சொல்லும் வசனம்:- ஆதியாகிய கோண நாயகருடைய கிருபை அரியயன் முதலான எவருக்கும் அளவிடற் கரிதாயிருக்கும் மூர்த்தியைத் தரிசனை பண்ணித் திருவை பெறத்தக்க இராசாக்கள் மிகுதியுமுண்டு. அவருள் சில ராசாக்களு டைய கதை சொல்லுகின்றேன் கேட்பீர்களாக.(18)

கோணேசர் ஆலயத்துக்குச் சொந்தமான திரவியங்களும், சொத்துக்களும் கோணேசர் ஆலயப் பகுதியில் உள்ள சுரங்க வழி களஞ்சிய அறையில் கோணேசர் ஆலய அரும்காவல் தெய்வங்களால் பாதுகாக்கப்பட்ட செய்தியை கோணேசர் கல்வெட்டு விபரமாகக் கூறுகின்றது. போர்த்துக்கீசர் கோணேசர் ஆலயச் சூறையாடலுக்கு முன்பாக கோணேசர் ஆலய திரவியக் களஞ்சியம் தொடர்பான கோணேசர் கல்வெட்டை பெற்றிருக்க வேண்டும். இதுவே போர்த்துக்கீசர் கோணேசர் ஆலயச் சூறையாடலைத் துல்லியமாகச் செய்து முடிக்கக் காரணமாகியது.

தமிழ்நாட்டில் உள்ள ஆலய நடைமுறையிற் காணப்படுவது போன்று கோணேசர் ஆலயச் சொத்து, நன்கொடைகள், திரவிய இருப்புச் சொத்து, வரவு செலவுகள் போன்ற விபரங்கள் எழுதி வைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததற்கான ஆதாரங்கள் கோணேசர் கல்வெட்டில் உள்ளன. சோழருடைய வருகைக்கு முன்பாகவே தமிழக ஆலய நடைமுறைகள் வழக்கில் இருந்தன. நிலாவெளி கனகசுந்தரப்பெருமாளிடம் இருந்த வளமைப்பத்தி, பெரிய கணக்கு, கல்வெட்டுப்பத்தி பற்றிக் கோணேசர் கல்வெட்டு விபரம் தருகின்றது. பரம்பரையாகத் திருகோணமலை மக்கள் கோணேசர் ஆலயம் தொடர்பாகப் பேண வேண்டிய மரபுகளையும், வழமை களையும் வழமைப்பத்தி விபரிக்கின்றது. பெரிய கணக்கு கோணேசர் ஆலயத்திற்குரிய உடைமைகள், சொத்துக்கள், வரவு செலவு விபரங்கள் பற்றிக் கூறுகின்றது.

"தமிழகத்துக் கோயில்களிலே திருப்பதிகங்களை ஓதுவதற்கு ஓதுவார்களை நியமிப்பது வழமை. அத்தகையோருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப் பெற்ற நிலங்களைத் திருப்பதியக் காணி என்றும் திருவாசகக் காணி என்றும் சாசனங்கள் குறிப்பிடுகின்றன. தென் இந்திய வைணவக் கோயில்களிலும், சைவக் கோயில்களிலும் பின்பற்றப்பட்ட வழமைகளின் அடிப்படையில் நோக்குமிடத்து, காஞ்சிபுரத்திலிருந்து வரவழைத்த ஒருவரைக் கோணேசர் கோயிலிலே திருப்பதிகங்களைப் பாடுவதற்கு நியமித்து, அவருக்குத் திருவாசகப் புலவன் என்று பேர் சாத்தி நிலமும் கொடுக்கப்பட்டதென்ற செய்தி ஆதாரபூர்வமானதாகவே காணப்படுகின்றது. அன்னாருக்குச் செப்புக் கம்பை பூட்டிய பத்ததி கொடுக்கப் பெற்றது என்ற குறிப்பும் பழைய ஆவணங்களை ஆதாரமாகக் கொண்டதாகவே அமைந்திருக்க வேண்டும். திருவாசகப் புலவனுக்குக் கிடைத்த நில தானம், தமிழகத்திலிருந்து திருப்பதியக் காணி, திருவாசகக் காணி என்பனவற்றை ஒத்ததாகும். திருவாசகப் புலவனைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளைக் கோணேசர் கல்வெட்டின் ஆசிரியர்கள் தமது தகைமைக்கு ஏற்ற வண்ணமாக விபரித்துள்ளனர்." (19)

கோணேசர் கல்வெட்டுக் கோணேசர் ஆலயத்திற்கான நடைமுறை விதிகளையும், ஏற்பாடுகளையும் விபரமாகக் குறிப்பிட்டது போன்று இலங்கையின் வேறு எந்த ஆலயத்திலும் காணப்படவில்லை. மேற்கூறிய விடயங்கள் மூலம் கோணேசர் ஆலயம் மிக உன்னதமான நிலையில் இருந்து கோயில் நிர்வாகம் ஆலய சபையினரால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டிருக்கின்றது. மூன்று அவண அரிசியிலே தினப்பூசை நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டதால் பூசைகளிலும், வழிபாட்டிலும் நாளாந்தம் கலந்து கொள்வோர் தொகை எத்தகையது என்பதை ஓரளவு ஊகிக்கலாம்.

தொல் இலக்கியங்கள் பல சமகாலத்தில் பதிவுசெய்யப்படாத காரணத்தால் வரலாற்றுச் செய்திகளிற் சில முரண்பாடுகள் தோன்றுவது இயற்கையே. குறிப்பாகக் கைலாசபுராணமும், கோணேசர் கல்வெட்டும் வெவ்வேறு காலகட்டங்களில் இயற்றப்பட்டவை. கோணேசர் கல்வெட்டில் குளக்கோட்டன், கயவாகு மன்னன் பற்றிய குறிப்புக்கள் சற்றுக் குழம்பிக் காணப்படுகின்றன. கோணேசர் கல்வெட்டின் பிரதான நோக்கமாக குளக்கோட்டன் பணி குறித்துக் கூற முனைந்ததால், கயவாகு குறித்த தகவல் பின் தள்ளப்பட்டிருக்கின்றது. தட்சண கைலாச புராணத்தில் கயவாகு குறித்துக் கூறப்படும் தகவல்கள் கோணேசர் கல்வெட்டில் காணப்படவில்லை. இக்குறைபாடுகள் இலங்கையின் வரலாற்றின் அடிப்படை ஆதாரங்கள் எனக் கருதப்படும் மகாவம்சம், சூளவம்சம் போன்றவற்றிலும் சுட்டிக்காட்டப்படுகின்றன. தொல் இலக்கியங்கள் மரபுவழித் தகவல்களையே அதிகம் கருப்பொருளாகக் கொண்டுள்ளன. பரம்பரைத் தகவலில் இயல்பாக ஏற்படக்கூடிய திரிபுகளும், இடைச் செருகற் செய்திகளும் தொல்லிலக்கியங்களிற் சேர்ந்து கொள்வதாலே தொல்லிலக்கியங்களைச்



சான்றாதாரங்களாகக் கொள்வதில் பல சிரமங்கள் ஏற்படுகின்றன. கோணேசர் கல்வெட்டிற் காணப்படும் ஆங்கிலேயர் (இங்கிலீசர்) குறித்த தகவல் சோதிடச் செய்தியாகக் கொள்வதை விட இடைச் செருகல் என்பதுவே பொருத்தமானதாகும். இலக்கியங்களிற் சேர்க்கப்படும் இடைச்செருகல் வெள்ளிலை அல்லது வெள்ளோடு எனக் குறிப்பிடப்படும். மூலப்பிரதிகளை வேறு ஏட்டில் பிரதி செய்கின்றபோது பிரதி செய்து கொள்பவர் முன் குறிப்பிடப்படும் செய்திகளை மாற்றிப் புதிய கருத்துக்களைச் சேர்த்துக் கொள்வதுண்டு. திருகோணமலை மாவட்டத்தில் இது போன்ற பலர் இலைமறை காயாக வாழ்ந்து வந்திருக்கின்றார்கள்.(20) இலக்கிய நயம் கருதி மிகைப்படுத்தல் ஏற்படுவதனால் சில தொல்லிலக்கியங்கள் சான்றாதார நிலையில் இருந்து விலகி ஒரு காவியப் பண்புடைய இலக்கியமாக மாறிவிடுகின்றன.

கோணேசர் கல்வெட்டின் மொழி அமைப்பினைப் பொறுத்த வரை கோணேசர் கல்வெட்டு முழுமையாகக் கவிராசவரோதயனால் இயற்றப்பட்டதா என்ற சந்தேகம் எழுப்பப்படுகின்றது. குளக்கோட்டன் திருப்பணி பற்றிய செய்யுள் அமைப்பிலிருந்து கயவாகு மன்னன் குறித்த அகவற்பா வேறுபட்டுள்ளது. அதே போன்றே உரை நடைப் பகுதியும் உள்ளது. எனவே தான் கோணேசர் கல்வெட்டின் உரை நடைப் பகுதி கவிராசதாவரோதயரால் இயற்றப்பட்டதா அல்லது பிற்பட்டவர்களினால் எழுதி இணைத்துத் தொகுக்கப்பட்டதா என்ற வினா உருவாகின்றது. "குளக்கோட்டன் சொல்லியபடி கூறுமாறு கேட்க கவிராசவரோதயன் கல்வெட்டாகப் பாடினான்" எனக் கூறப்படுவதால் செய்யுள் பகுதி மட்டுமே கவிராசவரோதயனால் எழுதப்பட்டது எனக் கருதப்படுகின்றது. திருகோணாசல புராணத்தில் கூறப்படும் கயவாகு மன்னனின் வரலாறுகளையே கோணேசர் கல்வெட்டின் அகவலிலும் காணப்படுவதால் கயவாகு மன்னன் பற்றி அகவல் ஒரு இடைச் செருகலாகவும் கருத முடிகின்றது. எனவே தான் கோணேசர் கல்வெட்டு ஒரு தொகுப்பு நூலா அல்லது தனி நபரால் எழுதப்பட்ட தனி நூலா என்ற கேள்வி உருவாகுகின்றது. இதற்கான தெளிவான பதிலைத் தெரிந்து கொள்வதற்குக் கோணேசர் கல்வெட்டு இயற்றப்பட்ட காலத்திற்குரிய வேறு உரை நடை இலக்கியங்களின் மொழி அமைப்பு குறித்த அறிவு அவசியமானதாகும்.

கோணேசர் கல்வெட்டில் பல சமூக வழக்காறுகளையும், கோணேசர் ஆலய நடைமுறைகளையும் காணக்கூடியதாக உள்ளது. குறிப்பாகத் திருகோணமலைச் சமூகத்திற் காணப்பட்ட தொழும்பு, குடிமை, வன்னியர் ஆட்சியாளரின் கடமைகள் என்பனவும் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. குளக்கோட்டன் வன்னிபங்களை வரவழைத்த செய்திகள் விபரமாகக் கூறப்பட்டுள்ளன. கோணேசர் கல்வெட்டிற் கூறியவாறே திருகோணமலை பல பிரிவுகளாக வன்னியர் ஆட்சியின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ் இருந்த செய்திகளைக் கந்தளாய்க் கல்வெட்டு மூலம் உறுதி செய்ய முடிகின்றது. (21) மேற்படிக் கல்வெட்டானது திருக்கோணேஸ்வரத்திற்கு நிலதானம் அளிக்கப்பட்டதைத் தெரிவிக்கின்றது.

இந்தக் கல்வெட்டின் அரசியற் சாரம் என்னவென்றால், திருகோணமலை, கொட்டியாரம் என அழைக்கப்படும் மூதூர் பகுதியில் இக்கல்வெட்டுப் பொறிக்கப்படும் காலத்திலே சுதந்திர வன்னியர் ஆட்சி நடைபெற்றிருக்கிறது என்பதேயாகும். வன்னியர் ஆட்சியிலே திருகோணமலை நிர்வாகத்தில் அடப்பர்கள் என அழைக்கப்பட்ட கிராமத் தலைவர்களும் பங்கு கொண்டிருக்கின்றார்கள். மேற்படி அறங்காவலர் பதவிகள் குறித்த தகவல் வேறு கோயில் ஆவணங்களிற் காண முடியாத காரணத்தால் இவர்கள் திருக்கோணேஸ்வரத்தைச் சேர்ந்தவர்கள் என்பது தெளிவாகின்றது. எனவே திருகோணமலை குறித்த வரலாற்றாய்விலே கோணேசர் கல்வெட்டுத் தரும் செய்திகள் முக்கியம் பெறுகின்றன. குளக்கோட்டன், கஜபாகு மன்னன் குறித்த செய்திகள் ஏனைய வரலாற்றுச் சான்றுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது மிக விளக்கமாகக் காணப்படுகின்றன. பொதுவாக வரலாற்றுச் சாசனங்கள் மன்னனுடைய கொடை, தானம், வீரம் குறித்த செய்திகளையே கொண்டிருக்கும். கோணேசர் கல்வெட்டில் ஒரு சமூகம் தொடர்பான தகவல்களே மிகுந்து காணப்படுவது ஒரு முக்கியமான சிறப்பம்சமாகும். இத்தகைய இலக்கியப் பண்பு இலங்கையின் வேறெந்தத் தொல் நூல்களிலும் காணப்படவில்லை.

## திரிகோணாசல புராணம்

தட்சண கைலாச புராணத்தின் விரிவாக்கத் தொடர்ச்சியே திரிகோணாசல புராணம் எனக் கொள்ளலாம். திரிகோணமலைப் புராணம் 70 படலங்களையும், 1491 செய்யுட்களையும் கொண்டுள்ளது. திருகோணமலை சிறி.மாசிலாமணி முத்துக்குமாரப்பிள்ளை என்பவருடைய கையெழுத்திற் காணப்படுகின்றது.(22) ஈழமண்டலப் புலவர் என்ற நூலைத் தொகுத்த ஆ.முத்துத்தம்பிப் புலவர் திரிகோணாசல புராணத்தை மாசிலாமணி முத்துக்குமாரு என்பவர் எழுதியதாகக் குறிப்பிட்டுள்ளார். யாழ்பாண வைபவமாலையின் ஆங்கில மொழிபெயர்ப்பு வெளியிட்ட காலத்தில் (1879) மாசிலாமணி முத்துக்குமாரு என்பவர் வாழ்ந்து கொண்டிருந்ததாக ஆங்கில மொழிபெயர்ப்பாளர் கிறிஸ்தோபர் பிறிட்டோ குறிப்பிடுகின்றார். எனினும் திரிகோணாசல புராணத்தை வெளியிட்ட பதிப்பாசிரியர் சண்முகரத்தினையர் (1909) இந்நூல் ஆசிரியர் யார் என்ற விபரம் தெரியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.



திரிகோணாசல புராண ஆசிரியர் திருகோணமலையைச் சேர்ந்த சைவப் புலவர் என்பது ஏற்கப்படுகின்றது. இந்நூலில் உள்ள செய்திகள் அநேகமானவை மரபுக் கதைகளையே கொண்டுள்ளன. மச்சபுராணம், கைலாசபுராணம் என்பனவற்றைத் தழுவிய தகவல்களே இதன் மூலப் பொருள்களாக உள்ளன. திருகோணமலைக்கான தொல் இலக்கிய வரிசையிலே திருக்கோணாசல புராணம் முக்கியமானதாகும். திருக்கோணேசர் ஆலய வரலாற்றைத் தொடர்பாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. திருகோணமலை வரலாற்று நிகழ்வுகளைக் கூறும் இலக்கியம் என்பதைவிட ஆலய நெறிகளைத் தொகுத்துக் கூறும் ஒரு தல புராணம் என்பதுவே பொருத்தமானதாகும்.(24)

## திருக்கரைசை புராணம்

திரிகோணாசல புராணம் எழுந்த கால கட்டத்தில் அல்லது சற்று பின்னர் உருவாக்கப்பட்டதே திருக்கரைசை புராணமாகும். திருக்கரைசை புராணம் திருகோணமலை மாவட்டத்திலே மகாவலி கங்கைக்கரையிலே கரைசை என்னும் பதியிலே அமைந்த சிவன் கோயிலது (அகத்தியத்தாபனம்) வரலாற்றையும், மகாவலி கங்கைத் தீர்த்தத்தின் மகிமையையும் கூறுகின்றது. இந்த ஆலயம் அகத்தியரால் நிறுவப்பட்டதாகச் சமய வரலாறு கூறுகின்றது. திருகோணமலைச் சமூகத்தினது வாழ்வியல் மரபுகளிலே சிலவற்றைத் தெரிந்து கொள்ளக்கூடிய வாய்ப்புக் கிடைக்கின்றது. திருக்கரைசைப் புராண ஆசிரியர் யார் என்பது தெளிவாகத் தெரி-வில்லை. இந்நூலை ஈசான சிவாச்சாரியாரின் சீடன் இயற்றினார் என அறியப்படுகின்றது.(25) இப்புராணத்தின் முதற் பதிப்பைச் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரின் பொழிப்புரையோடு திருகோணமலைத் தமிழறிஞர் வே.அகிலேசபிள்ளை அவர்கள் 1891 வைகாசி மாதம் வெளியிட்டார். குமாரசுவாமிப் புலவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"ஈசானச் சிவன் என்றது உமாபதி சிவாச்சாரியாரைப் போலும். சங்கற்ப நிராகரணப் பாயிரத்திலே உமாபதி சிவாச்சாரியார் சிதம்பரத்திலே தேர் மண்டபத்திலிருந்து மாயாவாதி முதலிய சமயிகளை வாதத்திற் வென்று வேதசிவாகமப் பொருளைத் தாபித்தார் எனப் பெறப்படுகின்றது. இங்கே மன்றுதனில் அகலாதென்றும் வீண்ட சிவசித்தாந்த வேதாந்தப் பொருள், விளக்கும் விளக்கமாகி எனக் கூறுதலாலும் பின் புராண வரலாற்றிலே கொற்றவன்தன், வாதும் பிரமாணத்தைக் குறித்துக் கொண்டே, எனக் கூறுதலாலும் பெறப்படும். வேறேயே இந்நூல் செய்தோன் அவன் சீடர் என்கருதுக."*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே மூலாசிரியர் யார் என்பது தெளிவாகக் கூற முடியாதுள்ளது. திருக்கரைசை புராண ஆசிரியர் உமாபதி சிவாசாரியாரின் சீடரா அல்லது நேரடிச் சீடரா என்பது குறித்த விளக்கம் தெளிவாக இல்லை. புராணங்களிலே காணப்படும் இலக்கிய நயம் கருதிய வர்ணனைகள் மிகுந்து காணப்படுகிறன. இந்நூலை ஒரு வரலாற்று ஆய்வு நூலாகக் கருதுவதைவிடப் புராண இலக்கியமாகக் கொள்வதே பொருத்தமானதாகும்.

தொகுப்புரையாகப் பார்க்கின்ற போது திருகோணமலைத் தமிழ்த் தொல்லிலக்கியங்களிலே தொடர்ச்சியான வரலாற்றுச் சான்றுகள் காணப்படவில்லை. திருகோணமலை வரலாற்றைக் கால ஒழுங்கு நிரலில் தொகுப்பதற்குத் தேவையான வரலாற்று நிகழ்வுகளை திருகோணமலைத் தொல்லிலக்கியங்கள் கொண்டிருக்கவில்லை. இதனால் தொடர்ச்சியாக ஆட்சியாளர்களைக் கண்டறிவது சாத்தியமற்றுப் போகின்றது. எனினும், கோணேசர் கல்வெட்டு, தட்சண கைலாச புராணம் என்பன குளக்கோட்டன், கயவாகு மன்னன் குறித்த சில தகவல்களைத் தருவதால் முக்கியம் பெறுகின்றன. மேலும் வன்னியராட்சி, திருகோணமலைத் தமிழர் சமூகத்தில் காணப்பட்ட மரபுகள், கோணேசர் ஆலய நடைமுறைகள் குறித்தும் சில தகவல்களைப் பெறமுடிகின்றது. இந்தத் தகவல்களும் ஆரம்ப காலத்திற்குரியதல்ல. திருகோணமலை குறித்த தொல்லிலக்கியங்கள் தலபுராணங்களாகக் காணப்படுவதால் அரசியற் செய்திகள் அதிக முக்கியத்துவத்தைப் பெறவில்லை. திருக்கோணேஸ்வரம் போர்த்துக்கீசரால் அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து திருகோணமலையில் குளக்கோட்டனாற் பேணப்பட்ட நிர்வாக முறைகளும், தொழும்பு மரபுகளும் மறைந்துவிட்டன. எனினும் கோணேசர் கல்வெட்டுத் தகவல்களுக்குச் சான்றாக தம்பலகாமப் பற்று சமூக மரபுகள் காணப்படுகின்றன. திருகோணமலையின் தொடர்ச்சியான வரலாற்றைத் தொகுப்பதற்குத் தமிழ்த் தொல்லிலக்கியங்களின் பங்களிப்பு மிகக் குறைவாக இருப்பதனாலே கல்வெட்டுக்களிலும், பௌத்த பாளி நூல்களிலும் ஆதாரத்தைத் தேடவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகின்றது.

### அடிக்குறிப்புகளும் விளக்கங்களும்

1 பேராசிரியர் சி.பத்மநாதன் கோணேசர் கல்வெட்டு பக் 4, பதிப்பாசிரியர் இ.வடிவேல், 1993

2. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி பக் 746

3. அபிதானகோசம் ஆசிரியர் ஆ.முத்துத்தம்பிப்பிள்ளை 1902.



4. கா. சிவசிதம்பர ஐயர் தட்சண கைலாச புராணம், யாழ்ப்பாணம் 1887

5. இந்நூலின் முதற் பதிப்பு 1887 இல் சிவசிதம்பர ஐயரால் யாழ்ப்பாணத்திலுள்ள [illegible] பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. இரண்டாவது பதிப்பு புலோலி வைத்திலிங்க தேசிகர் பருத்தித்துறை [illegible] பதிப்பகத்தில் அச்சிட்டு 1916 இல் வெளியிட்டார். முதற் பதிப்பை வெளியிட்ட சிவசிதம்பர ஐயர் கைலாச புராணத்தைச் சிங்கைச் செகராச சேகரன் இயற்றினான் எனக் குறிப்பிடுகின்றார். 1995 இல் வெளியிடப்பட்ட தட்சண கைலாச புராண வெளியீட்டில் அதன் பதிப்பாசிரியர் [illegible]. "சிங்கைச் செகராசசேகரனாற் பாடப்பட்ட தட்சண கைலாச புராணம் திருக்கோணேஸ்வரம் பற்றிய தல புராணமாகும். [illegible] சிறப்பிக்கப்படுகின்றன." [illegible] (தட்சண கைலாசபுராணம், பதிப்பாசிரியர் பேராசிரியர் சி.பத்மநாதன், பக். XL)

6. பிரம்ம ஸ்ரீ பண்டிதராசர் அருளிச் செய்த ஸ்ரீ தட்சண கைலாச புராணம் பதிப்பாசிரியர் புலோலி வைத்திலிங்க தேசிகர், 1916

7. பிரம்ம ஸ்ரீ பண்டிதராசர் அருளிச் செய்த ஸ்ரீ தட்சண கைலாச புராணம். பதிப்பாசிரியர் பு.பொ.வைத்திலிங்க தேசிகர், 1916

8. ஈழத்து தமிழ்க் கவிதைக் களஞ்சியம். தொகுப்பாசிரியர் ஆ. சதாசிவம் பக் 27

9. திருக்கோணேஸ்வரம், தொன்மையும் வன்மையும் ஆசிரியர் இ. வடிவேல் பக்கம் 4

10. தட்சண கைலாசபுராணம் பக்கம் XLI

11. கோணேசர் கல்வெட்டு பக 38
12. மேற்படி பக் 4
13. மேற்படி பக் 2
14. மேற்படி பக் 19

15. கோணேசர் கல்வெட்டு பக் 47

16. இ. வடிவேல், மேற்படி பக். 66

17 கோணேசர் கல்வெட்டு பக் 115
18 மேற்படி பக் 109
19 மேற்படி பக் 26
20 மேற்படி பக் 82

21 கா.இந்திரபாலா, ஈழநாட்டுத் தமிழ்ச் சாசனங்கள். கிழக்கிலங்கைச் சாசனங்கள், சிந்தனை, மலர் 2 , பக் 40, பேராதனை 1966



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22 மாசிலாமணி முத்துக்குமார் என்பவருடைய கையெழுத்துப் பிரதியாக இருப்பதனால் இந்நூலை திரு மா. முத்துக்குமார் என்பவர் எழுதியதாகக் கருதப்படுகின்றது. ஆனால் பண்டிதர் இ.வடிவேலு அவர்கள் முத்துக்குமார் என்பவர் 1843இல் மூல ஏட்டில் இருந்து பிரதி செய்தார் எனக் கூறுகின்றார். (பண்டிதர் இ.வடிவேல், அகில இலங்கைத் தமிழ்த்தின மலர், திருகோணமலை 1971)

23 திரிகோணாசல புராணம், பதிப்பாசிரியர், ஆ. சண்முகரத்தினசர்மா, 1909

24 திருகோணமலையைச் சேர்ந்த தமிழ் அறிஞர் வே. அகிலேசபிள்ளை அவர்கள் திருக்கோணாசல புராணத்தை எழுதியிருந்தார். அகிலேசபிள்ளை அவர்கள் விசாலாட்சி விருத்தம், கோணநாயகர் பதிகம், அடைக்கலமாலை, சிறை விடு பதிகம் எழுதியுள்ளார். அத்துடன் அகிலேசபிள்ளை அவர்கள் திருக்கரசை புராணம், தசிரதசிங்கன் மற்றும் ஏனையவற்றைப் பதிப்பித்தார். அவரால் 1889இல் எழுதப்பட்ட [illegible] நாடகம் இன்னும் அச்சேறாமல் உள்ளது.

25 வை. அ. இராசரத்தினம், திருக்கரைசைப் புராணம், இந்து இளைஞர் மன்றம், [illegible] 1975. இந்நூல் 1891, 1932, 1975 ஆகிய ஆண்டுகளில் மீளப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றது.

*

- 4 சுண்டு = 1 கொத்து
- 5கொத்து = 1 நாழி
- 2நாழி = 1 மரக்கால்
- 24 மரக்கால் = 1 அவணம்
- 240 கொத்து = 1 அவணம்





# பெருங் கற்காலம்: ஆதிக் குடிகள்

வரலாற்றுக் காலத்திற்கும், வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திற்கும் இடைப்பட்ட காலப்பகுதியே வரலாற்றுத் தோற்றக் காலமாகும். வரலாற்றுத் தோற்றக் காலத்தின் இறுதிக் கால கட்டத்தையே பெருங்கற்காலம் என வரையறை செய்யப்பட்டுள்ளது. இலங்கையில் வரலாற்றுக் காலம் குறித்த கால பகுப்பில் வரலாற்றாய்வாளர்களிடம் ஒரு உறுதியான கருத்து ஒற்றுமை இல்லாத போதும் கி.மு 5 - கி.மு 3 நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலப்பகுதியை இலங்கையின் வரலாற்றுக் காலமாகக் கருதப்படுகின்றது. வரலாற்றுக்கு முற்பட்ட கால ஆய்வில் மனிதன் பாவித்த கருவிகளும், பாவனைப் பொருட்களும் காலக் கணிப்பை வகுப்பதில் முக்கிய இடம் வகிக்கின்றன. கற்காலத்தில் பயன்பாட்டில் இருந்த கருவிகளின் பாவனை வளர்ச்சியின் அடிப்படையில் பழைய கற்காலம், இடைக் கற்காலம், புதிய கற்காலம் என மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. கற்காலப் பகுதியின் ஒரு பகுதியான இடைக் கற்காலம் கி.மு 1000 ஆண்டளவில் முடிவுறுவதால் இதற்கும் சமூகத்தின் வரலாற்றுக்கால முதல் மன்னனாகிய தேவநம்பியதீசன் ஆட்சிக் காலத்திற்கும் இடைப்பட்ட காலமே (கி.மு 1000-கி.மு 250) பெருங் கற்காலமாகின்றது. இக் காலத் தொல்லியற் சான்றுகளை இலங்கை, இந்திய வரலாற்றாய்வாளர்களினால் பெருங்கற்காலக் கலாசாரம் என அழைக்கப்படுகின்றது. வரலாற்று ஆய்வாளர்கள் இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் ஒரு இலட்சத்து இருபத்தையாயிரம் ஆண்டு கால அளவில் தோற்றம் பெற்றதாகக் கணிப்பிட்டுள்ளார்கள்.(1) இந்தியாவில் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் சுமார் ஐந்து இலட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவாகியதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. தென்னிந்திய அகழ்வுகளில் கிடைத்த ஆதாரங்களின் மூலம் கேரளா தவிர்ந்த தென் மாநிலப் பரப்புகளில் பெருங் கற்காலப் பண்பாடு கி.மு 1000ம் ஆண்டளவில் தோற்றம் பெற்றதாகக் கருதப்படுகின்றது. இலங்கையில் நடத்தப்பட்ட ஆய்வுகளும் கி.மு 1000ம் ஆண்டு காலப்பகுதியில் பெருங்கற்காலப் பண்பாடு தோற்றம் பெற்றிருந்ததை உறுதி செய்துள்ளது.

இச் சந்தர்ப்பத்தில் பெருங் கற்காலம் என்றால் என்ன என்ற விளக்கம் அவசியமாகின்றது. இடைக்கற்கால சமூகத்தில் இறந்தோரை அடக்கம் செய்வதற்காகப் பெரிய கற்களைப் பயன்படுத்தி சமயச் சின்னங்களை உருவாக்கியதால் அக்காலப் பகுதியைப் பெருங் கற்காலம் என அழைக்கப்படுகின்றது. ஈமைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல் பல இடங்களில் கண்டறியப்பட்டுள்ளன. ஈமைச் சின்னங்களாகப் பயன்படுத்திய பெரிய கற்களின் அமைப்பின் அடிப்படையில் கல்மேசை, கல்லறை, நடுகல், கல்வட்டம், கற்திட்டை போன்ற பெயர்களைப் பெற்றன. மேலும், பெருங்கற்காலச் சமூகத்தில் கற்குவியல், கற்சதுக்கம் என்பனவும் கண்டறியப்பட்டுள்ளன. எனினும் இக் கால மக்கள் முழுக்க முழுக்க கற்களால் மட்டும் தமது ஈமைச் சின்னங்களை அமைக்கவில்லை. தாழிகளிலும், குழிகளிலும் இறந்தோரை அடக்கம் செய்தவர்களும் இவர்களேயாவர். எனினும் இக் காலச்சாரத்திற் பெருங் கற்களாலான ஈமைச்சின்னங்களே அதிகம் காணப்பட்டதால், இது பெருங்கற்காலக் கலாச்சாரம் எனப் பெயர் பெற்றது.(2) முதுமக்கள் தாழி என்பது இறந்த ஒருவரின் உடலைப் பெரிய அகன்ற பானைகளுள் வைத்து அதனுடன் இறந்தவர் பாவித்த பொருட்களும், உணவுகளும், தானியங்களும் வைக்கப்பட்டு அடக்கம் செய்தலாகும். இதனால் இம் மரபை ஈமைத்தாழி எனவும் அழைக்கப்பட்டது. இந்த அடக்க முறையில் பெருங்கற்கள் முக்கியம் பெறுகின்றன. ஈமைச்சின்னங்களாக பெருங்கற்களைப் பயன்படுத்தும் பண்பாடு உலகின் பல பாகங்களில் பின்பற்றப்பட்டிருப்பதை தொல்லியல் ஆய்வுகள் எடுத்துக் காட்டிய போதும், உலகின் பல்வேறு பாகங்களிலும் காணப்படும் பெருங்கற்கால உடல் அடக்க பண்பாடு வேறுபட்ட காலகட்டங்களிலேயே நிகழ்ந்திருப்பது மிக முக்கியமான விடயமாகும்.

இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் விஜயனின் வருகைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் நாகரீக மடைந்த ஒரு சமூகம் இலங்கையில் வாழ்ந்ததை உறுதி செய்கின்றது. இந்த முது மக்கள் தாழி அடக்க முறை கி.மு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே நடைமுறையிலிருந்தது என டாக்டர் கே.கே பிள்ளை அவர்கள் குறிப்பிடுகின்றார். இந்த முதுமக்கள் தாழி திராவிடரது அடக்க முறை எனக் கருதப் படுவதற்கு இரு காரணங்கள் உள்ளது. முதுமக்கள் தாழி குறித்த குறிப்புகள் புறநானூறு, தொல்காப்பியம் நற்றிணை போன்ற தொல் தமிழ் இலக்கியங்களில் காணப்படுகின்றது. முதுமக்கள் தாழியைப் புறநானூறு ஈமத்தாழி எனக் குறிப்பிடுகின்றது. அடுத்து திராவிடர்களது பாரம்பரிய நிலப் பரப்பான தாமிரபரணி ஆற்றோரத் திலும், தென்னிந்தியாவைப் பொறுத்தமட்டில் ஆதிச்சநல்லூர், தஞ்சாவூர், பல்லாவரம், பழனி, செங்கமேடு, சேத்துப்பாளையம், அழகர்மலை, மயிர்தமங்கலம், திருக்காற்புலியூர், சிதம்பரம், பிரம்மகிரி, பேணகல் ஆகிய இடங்களிலும் பெருங் கற்கால பண்பாட்டு மையங்கள் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. தமிழகத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் மட்டும் சுமார் நூற்றிப் பதினான்கு ஏக்கர் நிலப் பரப்பில் ஈமத்தாழிகள் புதைக்கப்பட்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆதிச்ச நல்லூர், சித்தூர் போன்ற



இடங்களிலும் முதுமக்கள் தாழிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய முதுமக்கள் தாழியே இலங்கையில் புத்தளம் மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு மற்றும் குருகல்பரந்தன், மாந்தோட்டை, அநுராதபுரம் ஆகிய இடங்களிலும் கண்டுபிடிக்கப்பட்டன. ஆதிச்ச நல்லூருக்கு எதிரே அமைந்த மாந்தையும், பொம்பரிப்பும் (பொன்பரப்பி) ஒரே பிராந்தியம் எனக் கூறக்கூடியளவிற்கு இப் பெருங் கற்காலப் பண்பாட்டில் அதிக ஒற்றுமை காணப்படுகின்றது. முது மக்கள் தாழிகள் இலங்கையின் பல்வேறு பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளன. ஆனைக்கோட்டை, பரந்தன், இப்பன்கடுவ, பத்திய கம்பளை, கல்மனை, கித்துல்கல், குருவித்தை பத்தொம்பலென்ன முதலான பகுதிகளில் அகழ்ந்தெடுக்கப்பட்ட முதுமக்கள் தாழிகள் திராவிட மக்களது குடியிருப்புகள் பரந்து நிலைத்திருந்தமையைச் சுட்டுகின்றன.(3) பொன் பரப்பிப் பகுதியிலும், தென்னிந்தியாவிலும் கண்டெடுக்கப்பட்ட இத்தாழிகளை நோக்கும் போது தென்னிந்திய மக்களின் சந்ததிகள் பொன்பரப்பிப் பகுதியில் வாழ்ந்து வந்தமை புலனாகின்றது. நாற்பது அடி நீளமும் எட்டடி அகலமுங் கொண்ட நிலப் பரப்பில் நாலடி உயரமுள்ள பன்னிரண்டு தாழிகள் நிலத்திலிருந்து ஒரு அடி ஆழத்தில் புதைத்திருந்தமையை பொன்பரப்பி ஆய்வில் காணக் கூடியதாக உள்ளது.(4) தமிழகத்தில் கண்டறிப்பட்ட ஈமத்தாழிகள் மூன்றரை அடி உயரமும் ஒன்பது அடிச் சுற்றளவும் கொண்டுள்ளன. எனவே தொல் பொருள் ஆய்வுகளின் ஆதாரங்கள் மூலம் ஒரே பண்பாடுடையத் திராவிட மக்கள் வங்கக் கடலின் இரு புறங்களிலும் வாழ்ந்திருக்கின்றார்கள் என்ற அறிவுபூர்வமான முடிவுக்கு வரமுடிகின்றது.

திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி, கொட்டியாரம் ஆகிய இடங்களில் நடைபெற்ற தொல்லியல் ஆய்வுகளிலும் பெருங் கற்காலத்திற்குரிய தொல்லியற் சின்னங்கள் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இலங்கையின் கிழக்குக்கரையில், வடமேற்குக் கரை போன்று பெருங்கற்காலப் பண்பாட்டுக்கான அதிகளவு மையங்கள் காணப்படாவிட்டாலும், இங்கு கிடைத்த அச்சுக் குத்தி நாணயங்கள் திருகோணமலை மாவட்டத்திற் குச்சவெளியிற் கிடைத்த கறுப்புச் சிவப்பு நிற மட்பாண்டங்கள், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கதிரவெளியிற் கிடைத்துள்ள பெருங்கற்காலக் கலாச்சாரத்திற்குரிய, கல்மேசை, கல்லறை போன்றன இப் பகுதியிலும் வரலாற்றுக்குரிய கால மனிதனின் நடமாட்டம் காணப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றன.(5) இலங்கைச் சமூகத் தோற்றத்தின் ஆரம்ப கர்த்தாக்களாகக் கருதப்படும் பெருங்கற்காலச் சமூகத்தினர் கந்தரோடை, ஆனைக்கோட்டை, வல்லிபுரம், பூநகரி, மாந்தை, முல்லைத்தீவு, புத்தளம் மாவட்டத்தைச் சேர்ந்த பொம்பரிப்பு (பொன்பரிப்பு), அநுராதபுரம், களனி, கதிர்காமம், கிழக்கே முன் குறிப்பிடப்பட்ட குச்சவெளி, கொட்டியாரம், கதிரவெளி, நீங்கலாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிபகும்பனை, குருக்கல்கிண்ண, வெல்லாவ ஆகிய பகுதிகளிலும் வாழ்ந்திருக்கின்றார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் பெருங் கற்காலத்திற்குரிய ஆய்வுகள் பரந்தளவு மேற்கொள்ளப்படாத காரணத்தால் திருகோணமலை மாவட்ட ஆதிக்குடிகள் குறித்து விரிவாகத் தெரிந்து கொள்ள முடியாதுள்ளது. இலங்கையின் வேறு இடங்களில் தொல்லியலாளர்கள் காட்டிய ஆர்வம் திருகோணமலை மாவட்டத்தில் காட்டப்படவில்லை. எனவே வேறு இடங்களில் சமகாலத்தில் வாழ்ந்த அதே பண்பாட்டுக்குரிய மக்களின் வாழ்க்கை முறையினை தெரிந்து கொள்வதன் மூலம் திருகோணமலை மாவட்டத்தில் வாழ்ந்த பெருங்கற்காலச் சமூகத்தினர் குறித்த சில வினாக்களுக்கு விடைகளைத் தேட முடியும். திருகோணமலை மாவட்டத்தில் வாழ்ந்த பெருங்கற்காலச் சமூகத்தினரது பண்பாட்டைப் புரிந்து கொள்வதற்கு அதே கால கட்டத்தில் இலங்கையிலும், தென்னிந்தியாவிலும் வாழ்ந்த பெருங்கற்காலச் சமூகம் தொடர்பான அறிவு மிக அவசியமானதாகும். ஏனெனில், இலங்கை மற்றும் தென்னிந்தியப் பெருங் கற்காலச் சமூகத்தினரது தொல்பொருட் சின்னங்கள் மூலம் இவர்கள் ஏறத்தாள ஒரே பண்பாட்டை உடையவர்களாக விளங்கியிருக்கின்றார்கள் என்பது ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. எனினும் சில வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டுள்ளன. தென்னிந்திய அகழ்வுகளின் மூலம் பெருங்கற்காலச் சமூகத்தினர் இரும்பையும் செம்பையும் பயன்படுத்தியிருப்பதை அறியக்கூடியதாக உள்ளது. இலங்கையைப் பொறுத்தவரை புதிய கற்காலத்தின் ஒரு பரிணாமத் தொடர்பாகவே பெருங்கற்காலத்தை அறிய முடிகின்றது. எனினும் கி.மு 1000 ஆண்டுக்கு முற்பட்ட பெருங் கற்கால மக்களுடைய ஒரு சமூக அமைப்பிற்கான அடிப்படைக் கட்டுமானங்கள் தெளிவாக அடையாளம் காணக்கூடியதாக உள்ளது.

கி.மு 1000-கி.மு 500 இடைப்பட்ட பெருங் கற்கால முன்னரைக் காலப் பகுதியில் எழுத்தின் உபயோகத்தினைத் தவிர, மட்பாண்டம் செய்வதற்கான குயவர் சக்கரம், இரும்பின் உபயோகம், கல்லறை மயானப் பகுதி, நெற் செய்கை, செயற்கைக் குளம், குடியிருப்புப் பகுதி என்பன கண்டறியப்பட்டிருந்தன. குயவர் சக்கரத்தின் கண்டுபிடிப்பானது மட்பாண்டங்களின் உற்பத்திக்கும் கைத்தொழில் வளர்ச்சிக்கு வழிகோலியதுடன், மிகப் பரந்தளவில் காணப்பட்டிருந்த பெருங்கற் காலக் குடியேற்றங்களிடையே போக்குவரத்து ஏற்படவும் காரணமாகியது.(6) பெருங்கற்காலக் கலாச்சாரத்திற்குரிய மக்களே இலங்கையின் நீர்ப்பாசனப் பண்பாட்டைத் தோற்றுவித்தவர்கள். மந்தை வளர்ப்பு, வேளாண்மை என்பன மூலம் ஒரு நிலையான பண்பாட்டைக் கொண்டிருந்தார்கள் என்பதை அகழ்வுகள் உறுதி செய்கின்றன. எனவே பெருங்கற்காலக் கலாச்சாரச் சமூகத்தினரின் வாழ்க்கை முறையில் நிலமானது



பயிர்ச்செய்கை நிலம், குளம், மயானம், ஊர் என நான்கு பிரிவுகளாகப் பயன்படுத்தப் பட்டிருக்கின்றன. பெருங்கற்கால மக்களிடையே காணப்பட்ட சமூக அமைப்பில் நகரம் முக்கியம் பெற்றிருந்தது. குளங்கள் தேவைக்கு ஏற்ப செயற்கையாக அமைக்கப்பட்டு பயிர்ச்செய்கைக்குப் பயன்படுத்தப்பட்டன. மதவழிபாடு முதிர்வுநிலை அடையும் காலப்பகுதியில் இந்து மத கோயில்களில் கூறப்படுவது போல தலம், தீர்த்தம் என்பன தோற்றம் பெறுவதற்கு முன்கூறப்பட்ட நில பயன்பாட்டுப் பகிர்வு முறை தளம் அமைத்துக் கொடுத்தது. இதனால் தான் பண்டைய கிராமங்களில் தீர்த்தம், தலம் என்பன முக்கிய இடத்தைப் பெற்றன. திருகோணமலைக் கரையோரக் கிராமங்கள் அனைத்திலும் இந்து ஆலயங்கள் தோற்றம் பெற்றதோடு சிறு குளங்களும் உருவாக்கப்பட்டன. கட்டுக்குளம் பற்றில் காணப்படும் குளங்கள் தலங்களுடன் தொடர்பாகக் காணப்படுகின்றன. குளங்களை ஒட்டிக் காணப்படும் வேம்பு, கடம்பு, ஆல் போன்ற பெரு விருட்சங்கள் பெருங்கற்காலச் சமூக மரபுகளின் வெளிப்பாடுகளே. பெருங்கற்கால சமூக மக்களான இயக்கர், நாகர் வழிபாடுகளில் விருட்சம் முக்கியம் பெற்றிருந்தது. விருட்ச வழிபாடு காலப்போக்கில் தெய்வங்களுடன் இணைக்கப்பட்டன. முருகனுக்கும், கடம்புக்கும் இந்த வழியிலேயே தொடர்பேற்படுத்தப்பட்டது.

குச்சவெளி அகழ்வில் கண்டறியப்பட்ட கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள் ரோம நாட்டு கறுப்பு சிவப்பு மட்பாண்டங்களை ஒத்துக் காணப்படுகின்றன. ரோம உள்நூர் வணிகப் பண்ட மாற்றுக்கள் அக்காலத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும். பெருங்கற்காலத்தில் ஆரம்பித்த வெளிநாட்டு வணிக உறவே பின்னர் வளர்ச்சி பெற்றிருக்கின்றது. குச்சவெளி, திரியாய், கொட்டியாரம், முல்லைத்தீவு என்பன வரலாற்றின் ஆரம்ப காலத்தில் இருந்து வெளிநாட்டு வணிகர்கள் வந்து செல்லும் மையங்களாக இருந்திருக்கின்றன. முல்லைத்தீவில் கிடைத்த இலக்குமி நாணயங்களும், நிலாவெளியில் கண்டறியப்பட்ட இலக்குமி உருவமும் வணிகப் பரிமாற்றங்களையே விளக்குகின்றன. திரியாய்ப் பாறைக் கல்வெட்டில் வணிகர்கள் குறித்த செய்தி பொறிக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் அரிக்கமேட்டில் நடத்தப்பட்ட அகழ்வாய்வில் ரோமருடைய திராட்சை மதுரசப் பாவனைக்கான அம்போறா கண்டறியப்பட்டுள்ளன. எனவே ரோமருக்கும், திருகோணமலைப் பெருங் கற்கால மக்களுக்கும் இடையில் வணிகத் தொடர்பு ஏற்பட்டிருக்க கூடும். எனினும் மார்தா பிறிக்கெற் ரோம மட்பாண்டங்கள் தமிழகத்தில் இருந்து இலங்கைக்கு கொண்டு வரப்பட்டதாகக் கூறுகின்றார்.(7) விமலா பேக்லேயின் ஆய்வின் பிரகாரம் ரோம ரவுலெற்றெற் மட்பாண்டங்களுக்கும் பெருங்கற்காலத்தில் பாவனையில் இருந்த கறுப்புச் சிவப்பு மட்பாத்திரங்களுக்கும் இடையே பெரிய ஒற்றுமை இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. ரோமரினால் உருவாக்கப்பட்ட ரவுலெற்றெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்பாண்டங்கள் உருவாகுவதற்குப் பெருங்கற்கால கறுப்புச் சிவப்பு மட்பாண்டங்கள் காரணமாக இருந்திருக்கிறது என இனங்காணப்பட்டது.(8) தென்னிந்திய பெருங்கற்கால மக்கள் கடற்போக்குவரத்து நாகரீகத்தைத் தெரிந்திருந்தார்கள் என்பதற்கு சுமைத்தாழியில் கண்டெடுக்கப்பட்டுள்ள கடல் உயிரினங்களின் எச்சங்கள் சான்றாக உள்ளன. ஈமத் தாழிகளில் பெரும் சுறாக்களின் எலும்புகள் காணப்படுவதால் பெருங்கற்கால மக்கள் சுறாப் பிடிப்பதற்கான அறிவைப் பெற்றிருந்திருக்கின்றார்கள். எனவே கிழக்கிலங்கைக் கரையோரப் பெருங்கற்காலச் சமூகத்துடன் தென்னிந்திய பெருங்கற்காலச் சமூகம் தொடர்பு கொண்டிருந்ததன் மூலம் வணிகப் பரிமாற்றம் நிகழ்ந்திருக்கும் என்பது ஏற்கக் கூடியதே. எனினும் மிக விரிவான தொல்லியல் ஆய்வுகள் இன்றி திருகோணமலை மாவட்ட பெருங்கற்காலச் சமூகம் குறித்த விபரங்களைத் தருவதில் பல தடைகள் உள்ளன. விஜயனின் வருகைக்கு முந்திய பெருங்கற் காலச் சமூகம் தொடர்பான ஆய்வுகள் செய்யப்படாமைக்கு இலங்கையில் தமிழர்கள் பூர்வ குடிகள் என்ற கருத்து உறுதிப்படுத்தப்படும் என்ற அச்ச உணர்வே காரணமாகும்.

திருகோணமலை மாவட்ட அகழ்வுகள் இன்னும் திருப்திகரமாக நடத்தப்படாத சூழ்நிலையிலும் கிடைக்கப் பெற்ற பெருங்கற்கால தொல்பொருளியல் எச்சங்கள் மூலம் இந்தப் பண்பாட்டுக்குரிய மக்கள் குறித்துத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை உருவாகின்றது. குச்சவெளி, கொட்டியாரப்பற்று ஆகிய பகுதிகள் உள்ளிட்ட இலங்கையின் பெருங்கற்காலச் சமூகம் குறித்த தேடுதலில் இன அடையாளம் முக்கியம் பெறுகின்றன. இலங்கை வரலாற்றில் இனச் சர்ச்சைகளின் அடிப்படைக் கூறுகளான ஆரிய, திராவிடர்களின் முதன்மை குறித்த சர்ச்சைகளில் பெருங்கற்காலச் சமூகத்தின் பங்களிப்பு குறித்த ஆய்வு முக்கியம் பெறுகின்றது.

## இயக்கர்கள்

இலங்கையின் ஆதிக் குடிகளாகக் கருதப்படும் இயக்கர், நாகர் குறித்த விரிவான தகவல்கள் கிடைக்காத போதும், இலங்கையின் நாகரீகத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் என்ற முறையில் அவர்கள் குறித்த ஆய்வு அவசியமாகின்றது. சிங்கள வரலாற்றாசிரியர்கள் இயக்கர், நாகர் குறித்து பல முரண்பாடான கருத்துக்களை முன் வைத்துள்ளார்கள்.

மகாவம்சத்தின் பிரகாரம் புத்தர் ஞானம் பெற்று ஒன்பது மாதங்களுக்குப் பின்னர் இலங்கை வந்தார். அப்பொழுது இலங்கையில் இயக்கர்கள் பரந்து வாழ்ந்தனர்.(9) விஜயனின் வருகையின் போது இயக்க குல இராணி குவேனியைச் சந்தித்ததாக மகாவம்சம் கூறுகின்றது. கி.மு 543இல் விஜயனின் இலங்கை வருகை அமைந்ததாகக் கூறும் மகாவம்சம் விஜயனின் வருகையின் போது



காளிசேனன் என அழைக்கப்பட்ட இயக்கர் குல அரசன் ஆட்சி செய்தான் எனக் குறிப்பிடுகின்றது. காளிசேனன் குறித்து குவேனி மூலம் தகவல் அறிந்த விஜயன் ஒரு திருமணக் கொண்டாட்டத்தில் இயக்கர் குல அரசனான காளிசேனனைத் தந்திரமாகக் கொலை செய்துவிட்டு ஆட்சியைப் பிடித்தான் என மகாவம்சம் கூறுகின்றது.

இயக்கர்கள் தாமிரபரணிப் பிரதேசம் என அழைக்கப்படும் பகுதியில் செறிவாக வாழ்ந்திருக்கின்றார்கள். இயக்கர்கள் சிறிஸ்தவத்து என்னும் நகரில் பெருமளவு வாழ்ந்ததாகக் கருதப் படுகின்றது. எனினும் இயக்கர்கள் திரிகூடம் இலங்காபுரி, அரித்தகரி, பக்குரல, லங்கல, விந்தவனம், மகியங்கனை, தூமரக்க என்னும் இடங்களிலும் வாழ்ந்ததாக அடையாளங் காணப்பட்டுள்ளன.(10) அருவியாற்றுக்கும், மகாவலி கங்கைக்கும் தெற்கே உள்ள மேற் குறிப்பிட்ட இலங்கையின் புவியியற் பிரதேசமே தாமிரபரணி என்று கணிக்கப்படுகின்றது. இராமாயணமும் இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர்கள் குறித்துக் கூறுகின்றது. மகாவம்சத்தின் பிரகாரம் புத்தர் இலங்கை வந்தபோது மகாநாகா தோட்டத்தில் குழுமியிருந்த இயக்கர்களைச் சந்தித்து பயங்களைப் போக்கி இரட்சித்ததாகக் கூறப்படுகின்றது.(11) இயக்கர்கள் இயற்கை வழிபாட்டைப் பின்பற்றியிருந்தனர். இயக்கர்களின் மர வழிபாட்டு முறை சிறப்பாக அடையாளங் காணப்படுகின்றது. இயக்க வழிபாடு அக்காலத்தில் பரவியிருந்த இயற்கை வழிபாட்டின் ஓரம்சம் என்பது உறுதி. ஆரம்பத்தில் கட்டப்பட்ட தாதுகோபுரங்கள் இயக்க வழிபாடு செல்வாக்குப் பெற்ற இடங்களில் தான் உருவாகியிருக்க வேண்டும்.(12) இயக்கர்கள் நீர்ப்பாசனத்தில் அதிக ஆர்வம் கொண்டவர்களாக இருந்தார்கள் என்பதற்குப் பல சான்றுகள் உண்டு. இயக்கர்களே பொலநறுவைக் காலத்திலும் பல நீர்ப்பாசனத் திட்டங்களை இயக்கியவர்கள். இலங்கையில் காணப்பட்ட ஆயிரக்கணக்கான குளங்களையும், ஆறுகளையும் நீர்ப்பாசனத்திற்குத் தயார் செய்தவர்கள் என்ற வகையில் இலங்கையின் ஆதிக் குடிகளான இயக்கர்களும், நாகர்களும் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட சமூக அமைப்பில் வாழ்ந்தவர்கள் என்ற கருதுகோளில் தவறில்லை. இலங்கையில் வாழ்ந்த இயக்கர்களுக்கும், கேரளத்து சாக்கியர்களுக்கும் ஒரே சமூகத்தைச் சார்ந்தவர்களாக ஏற்றுக் கொள்ளத்தக்களவில் பண்பாட்டுத் தொடர்பு காணப்படுகிறது.

## நாகர்கள்

இயக்கரைப் போன்றே நாகர்களும் ஈழத்தின் ஆதிக் குடிகள் ஆவர். எனினும் வழிபாட்டில் இயக்கர்களைவிட நாகர்கள் வேறுபட்டிருந்தனர். நாகர்கள் நாகவழிபாட்டுடன் தொடர்புபடுத்தப்படுகின்றார்கள். எனினும் கலாநிதி சேவியர் நாகர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாக வணக்கத்துடன் மர வழிபாட்டையும் பின்பற்றியதாகக் கருதுகின்றார். எனினும் நாகர்களின் வழிபாட்டு முறை இந்து மத வழிபாட்டு மரபுகளில் இயல்பாகவே கலந்து கொண்டது. எனவே நாகர்களை இந்து மதத்துடன் தொடர்புடையவர்களாக ஏற்றுக் கொள்ளலாம்.(13) நாகர்களின் குடிப்பரம்பலானது ஈழத்தில் பரவிக் காணப்பட்டதாக கருதப்பட்ட போதிலும், நாகதீபம் என்னும் பகுதியில் அதிகளவு வாழ்ந்ததாக கருதப்படுகின்றது. நாக அரசர்களுக்கிடையே ஏற்பட்ட இரத்தின சிம்மாசனம் தொடர்பான முரண்பாட்டைத் தீர்க்கப் புத்தர் நாகதீபம் வந்ததாக மகாவம்சம் கூறுகின்றது. (14)

இலங்கையின் ஆதிக் குடிகளான நாகர்கள் குறித்து மகாவம்சம் மாத்திரமல்ல தீபவம்சத்திலும் குறிப்புகள் உண்டு. ஐந்தாம் நூற்றாண்டிற்குரிய சீனாவைச் சேர்ந்த நாடு காண் பயணி பாஹியான், மற்றும் 7ம் நூற்றாண்டுக்குரிய நாடு காண் பயணியான யுவான் சுவாங் ஆகியோர் இலங்கையின் ஆதிக்குடிகள் குறித்து கூறியிருக்கின்றார்கள். பாஹியானின் பயணக் குறிப்பில் இலங்கையில் நாகர்கள் வாழ்ந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அவருடைய குறிப்பில் நாகர்கள் வெளிநாட்டு வணிகர்களுடன் வணிகத்தில் ஈடுபட்டதாக கூறப்படுகின்றது. இலங்கைக்கு மகிந்த தேரர் வருவதற்கு முன்பாகவே எண்ணங்களை வரி வடிவத்தில் வெளிப்படுத்தும் கலை உருவாகியிருந்தது. அவ்வகையில் கி.மு 5ம் நூற்றாண்டிலிருந்து கரையோரப் பிராந்தியங்களிலேயே முதலில் வரி வடிவத்திற்கான தேவை உணரப்பட்டது. இந்த வகையில் நாகவம்சத்தைச் சேர்ந்த பெருங்கற்கால மக்கள் கூட்டத்தினரே இலங்கையில் முதலில் வரிவடிவ வழக்கினை ஆரம்பித்து வைத்தனர். குச்சவெளியில் காணப்பட்ட கறுப்புச் சிவப்பு மட்பாண்டத்திலும் வரிவடிவங்கள் காணப்படுகின்றன.

அனுராதபுர இராச்சியம் உருவாகுவதற்கு முன்னரேயே நாகர்கள் நாகதீப அரசை உருவாக்கிவிட்டார்கள். திருகோணமலை மாவட்டத்திலோ அல்லது ஏனைய இடங்களிற் காணப்பட்ட நாக அரசுகள் ஏன் எழுச்சி பெறவில்லை என்ற கேள்வி உருவாகின்றது. இலங்கையில் காணப்பட்ட நாகர்களுடைய அரசுகள் சிற்றரசுகளாக சிதறிக் காணப்பட்டனவே தவிர ஒரு இராச்சியமாக உருவாகியிருக்கவில்லை. நாக அரசுகள் இராச்சியமாக உருவாகாமல் அநுராதபுர அரசின் மேலாணைக்குள் கொண்டுவரப்படுவதற்கு பௌத்த மதம் முக்கிய காரணமாக இருந்தது. இலங்கையில் மைய அரசு உருவாகுவதற்கு பௌத்தமே தளம் அமைத்துக் கொடுத்தது. இந்நிலையில் அநுராதபுர அரசின் தோற்றத்திற்கான காரணங்களைத் தெரிந்து கொள்வது நன்று. இலங்கையில் கண்டறியப்பட்ட ஆரம்ப கால பிராமிச் சாசனங்கள் மூலம் பௌத்த சங்கத்திற்குக் குகைத் தானங்கள், வாவித் தானங்கள், பயிர்ச்செய்கை நிலங்கள்



அளித்ததை அறிய முடிகின்றது. பெருங் குளங்கள், வாவிகள் மூலம் பெரும் நீர்ப் பாசனம் ஏற்பட்ட காரணத்தினால் உபரி உற்பத்தியும், ஒன்றிணைக்கப்பட்ட சொத்துக்களும் நாளடைவில் ஒரு பலமான அரசின் தோற்றத்திற்கு வழிவகுத்தன. நாகர்களுடைய அரசு எவ்வாறு சிதறிப் பரந்து காணப்பட்டதோ அதே போன்றே விஜயனின் வருகைக்கு முன்பாக காணப்பட்ட வழிபாடுகளும் தேசிய மயப்பட்டதாகக் காணப்படவில்லை. அநுராதபுரத்தை மையப்படுத்தி உருவாகி ஒன்றிணைக்கப்பட்ட பௌத்த மகாசங்கத்தின் சொத்தைத் தளமாகக் கொண்டு உருவாகிய அரசின் பாதுகாப்பு அரவணைப்புக்குள் பௌத்தமதம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. எனவே இதுவரை இலங்கையில் காணப்பட்ட நாக, இந்து வழிபாட்டை விட பௌத்தம் பலமான ஒரு தளத்தில் வளர்ச்சி பெறத் தொடங்கியது.

இதுவரை கிராமங்களின் எல்லைப் பகுதிகளில் குகைக்குள் வாசம் செய்த பௌத்த குருமார்கள் மக்களின் குடியிருப்புக்களின் மத்தியில் பௌத்தப் பள்ளிகளை உருவாக்கத் தொடங்கினார்கள். பௌத்த துறவிகள் மக்களுக்கும், அரசனுக்கும் இடையில் சமூக உறவை ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்தக் காலகட்டத்திலிருந்து பௌத்தம் ஒரு அரசுச் சார்பான மதமாக இலங்கையில் தோற்றம் பெறத் தொடங்கியது. அரசின் ஆதரவைப் பெற்ற பௌத்த மதத்தின் செல்வாக்கினால் இயக்கர், நாகர்களின் ஒரு பகுதியினர் பௌத்தர்களாக மதம் மாறிக் கொண்டனர். இந்த மதமாற்றம் காரணமாக நாகர்களின் நாக வழிபாட்டுச் செல்வாக்கு பௌத்த மதத்திலும் புகுந்து கொண்டது. ஐந்து தலை நாகத்தின் படத்தின் கீழ் கௌதம புத்தர் தியானத்தில் இருப்பது போன்ற உருவம் தோற்றம் பெற்றதற்கு நாக வழிபாடே காரணமாகும். இன்றும் சிங்கள பௌத்தர்களின் மத்தியில் காணப்படும் நாக வழிபாட்டிற்கு நாகர் காலப் பண்பாடே காரணமாகும். இலங்கையின் கிழக்குக் கரையிலிருந்த நாகச் சிற்றரசுகள் பௌத்த மத ஒழுங்கமைப்பு போன்று ஒரு கட்டமைப்பை உருவாக்கவில்லை. வட இந்தியாவில் பெருவளர்ச்சி பெற்றிருந்த இந்து மதக் கட்டமைப்பிற்கு எதிராக பௌத்தம் வளர வேண்டிய தேவை இருந்த காரணத்தால் பௌத்த மதக் கட்டமைப்பானது மிகப் பலம் பொருந்தியதாக இருந்தது. ஆனால் திருகோணமலை உட்பட இலங்கையின் ஏனைய பாகங்களில் உருவாகிய நாகச் சிற்றரசுகளுக்குப் பலமான கட்டமைப்பையோ, அன்றி நிர்வாக ஒழுங்கமைப்பையோ கொண்டிருக்க வேண்டிய தேவை உருவாகவில்லை. பௌத்தம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்ட போது மத ஒழுங்கு நிரலில் பௌத்த மத குருமார்கள் அதிகாரங்களையும், கடமைகளையும் பகிர்ந்து வைத்திருந்தார்கள். இதுவே சிதறியிருந்த மக்களையும், அரசுகளையும் வெற்றி கொள்ள உதவியது. இந்த அடிப்படையில் தான் திருகோணமலை மாவட்டத்தில் தோற்றம் பெற்றிருந்த பெருங்கற்காலச் சமூக அரசுகளின் தோற்றத்தையும், வீழ்ச்சியையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராய வேண்டும். எனவே திருகோணமலை மாவட்டத்தில் உருவாகியிருந்த ஆதிச் சமூகத்தின் சமூகக் கட்டமைப்புக்கள் சிதறின. எனினும் நாக மத வழிபாட்டு மரபுகள் பௌத்தத்திலும், இந்து மதத்திலும் ஊடுருவியது. இதற்கான சான்றாதாரங்களைச் சூளவம்சத்தில் காணலாம்.

நாகர்களுடைய செறிவான வாழிடப் பகுதியே நாக தீபம் என அடையாளங்காணப்படுகிறது. எனினும் பொதுவாக இலங்கை வரலாற்றாய்வாளர்களிடையே நாகதீபம் என வரையறை செய்யப்படும் இடம் குறித்துக் கருத்து வேறுபாடுகள் உண்டு. ஏனெனில், நாகதீபம் குறித்து தகவல் தரும் மகாவம்சத்திலோ அல்லது வேறு எந்த வரலாற்று நூலிலோ நாகதீபம் இட அமைவு குறித்து விளக்கம் இல்லை. நாகதீபம் என்பதை யாழ்ப்பாணத் தீபகற்பமாக சில ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். வேறு சில ஆய்வாளர்கள் இலங்கையின் வட மேற்குப் பிரதேசத்தைக் குறிப்பதாகக் கருதுகின்றார்கள். தென் இலங்கையில் உள்ள மகாகமத்தில் உள்ள திஸ்ஸமஹாவ என்னும் இடத்தில் உள்ள ஆண் நாகத்திற்கும், மணி நாகதீவில் வாழ்ந்த பெண் நாகத்திற்கும் திருமணம் நடந்ததாக கி.பி. 14ம் நூற்றாண்டைச் சேர்ந்த சிங்கள மொழி இலக்கியமான சமதாலங்காரா என்ற நூலில் ஒரு ஐதீகக் கதை உள்ளது. இந்த மணிநாகதீவு அல்லது மணிநாகதீபம் என்பது ராஜாவலிய என்ற நூலின்படி கந்தரோடையைக் குறிக்கிறது. இருப்பினும் மணிநாக தீபம் என்பது யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதையும் குறிப்பிடுவதாகக் கொள்ளல் வேண்டும் என்பது அறிஞர்களின் வாதமாகும்.(15) ஆனால் முதலாம் நூற்றாண்டுக்குரியதாக கருதப்படும் தொலமியின் வரைபடத்தின் பிரகாரம் நாகதீபம் இலங்கையின் வட கிழக்குப் பகுதியில் உள்ளதாய் கருதப்படுகிறது. கோணேஸ்வரம் நூலின் ஆசிரியர் செ.குணசிங்கம் அவர்களின் கருத்து சில தெளிவான விளக்கங்களைத் தருகின்றது.

*"ஆனால் தொலமியின் படத்தில் உள்ள குறிப்பிடம் மாத்திரமன்றி வலாஹஸ்ஸ என்ற ஜாதக நூலிலும் நாகதீவு வட கிழக்கே அதாவது திருகோணமலைக் குடாவைச் சேர்ந்த பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாகதீவின் எல்லைபற்றி மேலே தெரிவிக்கப்பட்ட கருத்துக்களில் எது சரியானது, எது பிழையானது எனக் கூறுவது கஷ்டமாக இருந்தாலும், நாகதீவு எனப்பட்டது இலங்கையின் வடபகுதி (கிழக்கு, மேற்குப்பகுதி உள்பட) முழுவதையும் உள்ளடக்கியிருந்தது. எனினும் அதன் தென்னெல்லையை நிச்சயித்துக் கொள்ளல் தற்போதைய நிலையில் முடியாததென்றும் கூற முடியும். மேற்படி கருத்தின் அடிப்படையில் நாகர் எனப்பட்டோர் ஆரம்பகாலத்தில் திருகோணமலைப் பகுதியில் வாழ்ந்திருப்பார்கள் என்றும் அவர்கள் நாகவழிபாட்டை மேற்கொண்டிருந்திருப்பார்கள் எனவும் கூறலாம்..(16)*



நாகதீபம் குறித்த சர்ச்சையைத் தீர்த்துக் கொள்ள முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த தொலமியின் வரைபடம் தொடர்பான விளக்கம் ஓரளவு உதவுகின்றது. ஏறாயில் என்.வா ஆயிரத்துத் தொளாயிரத்துப் பதினேழாம் ஆண்டு நடைபெற்ற கலந்துரையாடலின் போது, பிரித்தானிய சுவடிகள் காப்பகத்தில் இருந்து முதலாம் நூற்றாண்டுக்குரிய தொலமியினால் தயாரிக்கப்பட்ட பழைய படத்தின் பிரதியை ஆதாரமாகக் காட்டி நாகதீவானது மகாவலி கங்கைக்கு வடக்கே நாட்டின் கிழக்குக் கரையில் காணப்படுகிறது என்று வாதிட்டார்.(17) தொலமியின் படக்குறிப்பிலிருந்து மாத்திரமல்ல வலாஹஸ்ஸ என்ற ஜாதக நூலிலும் நாகதீவு வடகிழக்கே அதாவது திருகோணமலைக் குடாவைச் சேர்ந்த பகுதியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.(18) நாகதீபத்தின் வரையறை குறித்து வரலாற்று ஆய்வாளர்களிடத்து ஒருமித்த கருத்து இல்லாது போனாலும், ஈழத்தின் வடபுலத்தை குறிப்பாக புத்தளம் - கொட்டியாரக் குடாவிற்கு மேலுள்ள வட பகுதியை நாகதீபமாக கருதுகின்றார்கள். இந்த எல்லைக்குள் திருகோணமலைப் பிரதேசமும் உள்ளடங்குகின்றது என்பது ஏற்கக் கூடியதே.

நாகர்கள் குறித்த சர்ச்சைகளில் அவர்கள் மானிட வர்க்கத்தைச் சேர்ந்தவர்களா அல்லது இல்லையா என்பதே மிக முக்கிய கேள்வியாகக் கருதப்படுகின்றது. பரணவிதான உள்ளிட்ட பல சிங்கள வரலாற்றுத்துறையினர் நாகர்களை மனிதர்களாக ஏற்கவில்லை. இதுபற்றிய ஆய்வில் ஈடுபட்ட மென்டிஸ் நாகர்களை அமானுஷரராகவே கருதுகின்றார். பரணவிதான உள்ளிட்ட பல சிங்கள வரலாற்றுத்துறையினர் விஜயனின் வருகையுடன் தான் இலங்கைத் தீவில் மனிதக் குடியேற்றம் உருவாகின என்பதை உறுதிப்படுத்த இத்தகைய கருத்துக்கள் அவர்களுக்கு தேவைப்படுகின்றன. நாகர்களை இலங்கையின் ஆதிக் குடிகளாக ஏற்பதன் மூலம் இலங்கையின் ஆதிக் குடிகள் திராவிடர்கள் என்ற கருத்து வலுப்பெற்றுவிடும் என்ற அச்ச உணர்வு பல சிங்கள வரலாற்று ஆய்வாளர்களுக்கு உண்டு. அத்துடன் இந்து மதத்தின் உட்கூறுகளாகக் கருதப்படும் விருட்ச வழிபாடு, நாக வழிபாடு என்பனவற்றையும் ஏற்க வேண்டிய தேவை ஏற்படும். வரலாற்றாசிரியர் சேனநாயக்க பரணவிதான நாகர்கள் குறித்துக் கூறும் கருத்தே அவருக்குப் பின்வந்த சிங்கள வரலாற்றாய்வாளர்களினாலும் பின்பற்றப்படுகிறது.

*"நாகர்களைப் பாளி இலக்கியங்களில் மனித வர்க்கமாக காட்டப்படவில்லை. நாகர்கள் பாம்பின் தோற்றத்தையுடைய நிலத்தின் கீழ் வாழும் பண்பையும் கொண்ட மனித வர்க்கத்திற்கு அப்பாற்பட்ட ஜீவன்களாகக் காட்டப்பட்டுள்ளனர். இவர்கள் விரும்பியபோது விரும்பிய உருவம் எடுக்கக்கூடியவர்கள். நாகர்களை மனிதர்களாகக் காட்ட முயல்வது நியாயமற்ற*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*தொன்றாகும். நாகர்களை மனிதர்களாக ஏற்றுக் கொண்டாலும் திராவிடர்களுடன் தொடர்புபடுத்த சத்தகைய சான்றுகளும் இல்லை பழைய நாக தீவுகளில் திராவிடர்கள் வாழுகின்றார்கள் என்ற காரணத்திற்காக நாகர்களைத் திராவிடர்களாக ஏற்க முடியாது. நாகர்களை மனிதர்களாக ஏற்பதாயின் அவர்களை ஆரியர்களாகக் கொள்வதே பொருத்தமானதாகும்.,,(19)*

பரணவிதானவின் இக்கூற்றுக்கள் தடுமாற்றமும், உள் நோக்கமும் கொண்டவை என்பதை எவராலும் இலகுவில் புரிந்து கொள்ள முடியும். நாகர்கள் மனிதர்கள் அல்ல என்ற தனது கடும் நிலைப்பாட்டை முன்வைக்கும் பரணவிதான வட இந்திய நாகபுர வாசிகள் ஆரிய மொழி மக்களே என்பதைக் கூறி இலங்கை நாகர்களை ஆரியராக ஏற்கலாம் என்று கூறுவது இலங்கையில் ஆதியில் திராவிடர்கள் வாழவில்லை என்ற கருத்தை நிலை நிறுத்துவதேயாகும். நாகர்களை மனித வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என வாதிடும் பரணவிதான, நாகர்களை மனிதர்களாக ஏற்றுக்கொண்டாலும், திராவிடர்களாக ஏற்க முடியாது ஆரியர்களாக ஏற்கலாம் எனக் கூறுவது பகுத்தறிவுக்குப் பொருத்தமற்றதாகும். இலங்கைத் தீவின் மூத்த குடிகள் சிங்களவர்கள் என்ற கருத்தை நாகர் பற்றிய கருத்துக்கள் வலுவிழக்கச் செய்துவிடும் என்ற அச்ச உணர்வே பரணவிதானவின் தடுமாற்றத்திற்கான காரணமாகும். நாகர்களை மனிதர்களாகப் பாளி நூலில் காட்டப்படவில்லை என்ற காரணம் அவர்களை அமானுசர்களாகக் கொள்வதற்குப் போதுமானதல்ல. இந்து மத வழிபாடும், அதைச் சார்ந்த நாகவழிபாடும் திருகோணமலைப் பகுதியில் பின்பற்றப்பட்டது குறித்து சூளவம்சம் கூறும் கதையை முதலில் கவனிப்போம். சூளவம்சத்தில் கூறப்படும் இந்தக் கதையின் நம்பகத் தன்மை கேள்விக்குரியதாக இருந்தாலும், நாகர்கள் குறித்த கருத்துக்கள் சூளவம்சம் எழுதப்பட்ட காலத்தில் இருந்தது என்பதை உறுதிப்படுத்தப் போதுமானது.

''இப்போது பஞ்சம் ஒன்று நடைபெறுகின்ற போது மந்திரங்களை உச்சரிப்பதில் சிறப்புப் பெற்றிருந்த ஒருவன் உணவு பெறும் பொருட்டுப் பிச்சை ஓட்டையில் தன்னைப் போர்த்திக்கொண்டு ஒவ்வொருவரிடமும் சென்று உணவு இரந்தான். கிராமத்தில் அலைந்து திரிந்தும் அவனால் உணவு பெற முடியவில்லை. பசி அதிகரித்தமையால் ஓரிடத்திலிருந்து நடுங்கிக் கொண்டிருந்தான். இரக்கமுள்ள மகாநாக அவனை இப்போது கண்டதும் அவன் மேல் இரக்கம் கொண்டு, பிச்சா பாத்திரத்தைப் பெற்றுக் கிராமத்தின் எல்லாப் பகுதிகளிலும் சுற்றித் திரிந்தான். இருந்தும் கஞ்சிகூட அவனால் பெற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால், அவன் தன் மேலாடையை நீக்கிய போது உணவு பெற்றுக் கொண்டான். இந்த உணவை (மந்திரவாதி) உண்டு திருப்தியடைந்து பின்வருமாறு நினைத்துக் கொண்டான். நான் அவனை (மகாநாகனை) இந்தத் தீவிலுள்ள இராச்சியத்தின்



பிரயோசனமுள்ள ஒருவனாக ஆக்க வேண்டும். (இவ்வாறு கூறித்) தன்னுடன் அவனை (மகாநாகனை)க் கூட்டிக் கொண்டு சிறிது நேரத்துக்குள் கோகர்ணக் கடற்கரைக்கு வந்தான். அவனை இங்கு அமர்த்திவிட்டு மந்திரவாதி மந்திரத்தை முறைப்படி வழமை போல உச்சரித்தான். பின்னர் புஸ்ஸ (மார்கழி முதல் தை வரை) மாதத்தின் முழு நிலவுள்ள இரவில் நாகனை மந்திரத்தால் வரவழைத்தான் இப்போது ''பெரிய நாகா''வைத் தொடு என மகாநாகனைப் பணித்தான். முதல் இரவு பயத்துடன் கவனித்த போது ''நாக'' தோன்றியும் அவனால் அதைத் தொட முடியவில்லை. இரண்டாவது கவனிப்பின் போதும் இவ்வாறே நடந்தது. இறுதி முறையாகக் கவனித்த போது அவன் ''நாக''வை வாலில் பிடித்து (உடனே) போகவிட்டு மூன்று விரல்களால் மாத்திரம் அதனைத் தொட்டான். ''எனது முயற்சிகள் வெற்றி பெறுகின்றன'' எனத் தான் முன்பு கூறியதை மந்திரவாதி சொன்னான் ''மூன்று அரசர்களுடன் யுத்தம் செய்தும் நான்காவது அரசனைக் கொன்ற பின்பும் முதிர்ந்த வயதில் நீயே அரசனாக மூன்று வருடங்களுக்கு இருப்பாய். நீ போய் அரசனுக்கு பணி செய் எனது சக்தியைப் பின்பு பார்ப்பாய்'' என மந்திரவாதி கூறி மகாநாகனை முன் அனுப்பினான். மகாநாகா அரசனைத் தேடிச் சென்று அரசனின் சேவையில் சேர்ந்து கொண்டான். அரசன் அவனை றோகணத்தில் வரி சேகரிப்பாளனாக நியமித்தான்.''(20)

பொரஜன அட்டகதா என்னும் வரலாற்று நூலில் இலங்கையில் பெரும் பஞ்சம் ஏற்பட்டதாகவும் பஞ்சம் காரணமாக பெருந் தொகையான பிக்குகள் உணவுக்காக அலைந்து இறந்ததாகவும் கூறப்பட்டுள்ளது.(21) மேலும் பல பிக்குகள் தமிழ் நாட்டிற்கு தப்பிச் சென்றதாகவும் அறிய முடிகின்றது. எனவே சூளவம்சம் கூறும் கதையின் ஒரு பகுதி உண்மையாக இருக்க முடியும் என்பதை ஏற்கக் கூடியதாக இருக்கின்றது. முதலாம் நூற்றாண்டைச் சேர்ந்த நாடு காண் பயண் தொலமியின் வரைபடக் குறிப்புகளிலும், பாஹியானின் பயணக் குறிப்புகளிலும் நாகர்கள் குறித்த செய்தி பதிவாகியுள்ளன. இலங்கையின் பல பாகங்களிலும் நாகச் சிற்பங்கள் காணப்பட்டதற்கான சாசனச் சான்றுகள் உண்டு. மொனராகலை மாவட்டத்தில் உள்ள கொல்லதேனியப் பகுதியில் அபநாக என்பவன் ஆட்சி செய்த காலத்தில் சோண என்னும் ஒரு பெண் அளித்த குகைத் தானத்தைக் கூறும் சாசனம் கண்டறியப்பட்டுள்ளது. அப என்பது ஆய் என்ற குறுநில மன்னரையே குறிக்கின்றது. நாகர்கள் என்ற இனம் இலங்கையில் மாத்திரமல்ல இந்திய உப கண்டத்திலும் வாழ்ந்திருக்கின்றார்கள். காஞ்சிபுரம் பகுதி நாகர்களின் ஆட்சியில் இருந்திருக்கின்றது. நாக வழிபாடு இந்தியப் பழங்குடி மக்களின் வழிபாட்டு மரபில் நீண்ட காலமாக அறியப்படுகின்றது. சிவனும், நாகமும் வழிபாட்டுக்குரியன என யசுர் வேதம் கூறுகின்றது. இந்துவெளி நாகரீகத்துக்கான தொல்பொருள் அகழ்வின் போதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தியானத்தில் இருக்கும் சிவலிங்கத்துக்கு அருகே அடக்கத்துடன் காணப்படும் நாகத்தின் உருவம் பொறித்த இலச்சினை கண்டெடுக்கப்பட்டுள்ளது. இந்துமத வளர்ச்சிப் போக்கில் நாக வழிபாடு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றது. எனவே திராவிடர்களின் மூதாதையர்களான மக்களே நாக வழிபாட்டையும் பின்பற்றியிருக்கின்றார்கள் எனக் கருதும்போது அவர்களை மனிதர்களாக அடையாளம் காண்பதில் தவறில்லை. எனவே தொலமியின் புராதன இலங்கைப் படம் தரும் விளக்கத்தைச் சூளவம்சம் திருகோணமலைக் கடற்கரையில் நாக வழிபாடு நடந்ததாகக் கூறும் சம்பவத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது திருகோணமலை நாகர்களின் இருப்பிடங்களில் ஒன்றாக இருந்திருக்கின்றது என்ற கருத்தை ஏற்க முடிகின்றது.

திருகோணமலைப் பகுதியில் அடையாளங்காணப்பட்ட பெருங் கற்கால மனிதர்களாக நாகர்களைக் கருதுவதற்கு மற்றுமொரு முக்கிய காரணம் தமிழ்நாட்டுப் பகுதியில் கண்டறியப்பட்ட நாகருக்கான பண்பாட்டு அடையாளங்கள் இலங்கையிலும் காணப்படுவதே. இதை இலங்கையில் நாகர் கால ஆய்வுப் பணியில் ஈடுபட்ட கென்னடி உறுதி செய்துள்ளார்.(22) கென்னடி நாகர் காலத்தில் ஆரியரோ அல்லது வேறு ஒரு மக்கள் கூட்டத்தினரோ இப் பிரதேசத்தில் ஊடுருவவில்லை என்பதோடு, தென்னிந்திய பெருங்கற் காலப் பண்பாட்டை உருவாக்கிய மக்களே ஈழத்திலும் உருவாக்கினார்கள் எனக் கூறுகின்றார்.(23) எனவே நாகர்கள் தமிழர்களின் தோற்றத்திற்குக் காரணமான திராவிடர்களின் மூத்த இனத்தவராகக் கருதமுடிகின்றது. திருகோணமலையின் ஆதிச் சமூகம் இந்துக்களாக இருந்திருக்கின்றார்கள் என்பதை சூளவம்சம் கூறும் மற்றுமொரு ஐதிகக் கதை உணர்த்துகின்றது

கஸ்ஸப மன்னனின் புதல்வர்களில் மூத்த மகன் மானவர்ம என்பவன் குமரக் கடவுள் மீது அதிக பக்தி உடையவனாக இருந்தான். ஒரு நாள் அவன் திருகோணமலைக்கு அருகே ஓடிக்கொண்டிருந்த ஆற்றங்கரையோரமாக குமரக் (முருகக்) கடவுளைத் தியானம் செய்வதற்காக வந்தான். வழக்கம் போல நிறைந்த பக்தியுடன் உருத்திராட்ச மாலையைக் கையில் எடுத்து மந்திரத்தை உச்சாடனம் செய்தான். குமரக் கடவுள் (முருகன்) மயில் வாகனத்தில் மானவர்ம முன் தோன்றினார். மயில் நீர் அருந்துவதற்காக முருகப் பெருமானுக்கு அர்ச்சனைக்காக வைத்திருந்த தேங்காயை தனது அலகினால் கொத்தித் துவாரமிட்டது ஆனால் ஏற்கனவே தேங்காயில் இருந்த துவாரம் வழியாக இளநீர் வெளியேறிவிட்டது. நீர் கிடைக்காத மயில் மானவர்மவின் கண்களை அலகினால் கொத்தி நீரைக் குடித்தது. மானவர்மாவின் பக்தியை உணர்ந்த குமரக் கடவுள் மானவர்ம கேட்ட வரத்தைக் கொடுத்து விட்டு விண் சென்றார். கண்ணைப் பறி கொடுத்த மானவர்மவின் நிலையைப் பார்த்த மானவர்மனின் ஊழியர்கள் துயரப்பட்டதைப்



பார்த்த மானவர்ம தான் விரும்பிய வரம் கிடைத்து விட்டதாகக் கூறி அவர்களை ஆறுதல்படுத்தித் தானும் சந்தோசமடைந்தான். மானவர்மவின் ஊழியர்கள் மானவர்மனை முடி சூட்டுவதற்காக அநுராதபுரத்திற்கு அழைத்துக்கொண்டு சென்றார்கள்.

வழக்கம் போல ஐதிகக் கதைகளின் நம்பகத்தன்மை கேள்விக்குரியது என்றாலும், குறைந்தது சூளவம்சத்தில் இந்த ஐதிகக் கதை எழுதப்பட்ட காலத்திலாவது முருக வணக்கம் திருகோணமலையில் பின்பற்றப்பட்டது என்ற உறுதியான செய்தியை மேற்கூறிய கதையின் மூலம் அறிய முடிகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் ஏற்கனவே நாம் கவனித்தது போல நாக வணக்கத்துடன் சிவ வணக்கம், சக்தி வணக்கம், திருமால் வணக்கம், முருக வணக்கம் என்பன பின்பற்றப்பட்டிருக்கிறது. இந்த வழிபாடு இந்து மத வழிபாட்டின் பிரதான அம்சம் மாத்திரமல்ல திராவிட வழிபாட்டின் அடிப்படையாகவும் கொள்ள முடியும். இந்து மதம் பல உட்கூறுகளைக் கொண்டுள்ளது. அதன் உட்கூறுகளை ஆராயும் போது ஆதிக் குடிகளின் இயற்கை வழிபாட்டு மரபுகளை அறிய முடிகின்றது. இலங்கையில் வாழ்ந்த ஆதிக் குடிகளில் ஒரு பிரிவினரான இயக்கர் மரவழிபாட்டிலும், நாகர்கள் நாக வழிபாட்டிலும் ஈடுபட்டார்கள். நாக வழிபாட்டை பௌத்தர்களும், சமணர்களும் ஏற்றிருந்தார்கள். இன்றும் ஈழத்தில் சிங்கள மக்கள் மத்தியில் நாக வழிபாட்டு முறை காணப்படுகின்றது. காலப்போக்கில் இந்த வழிபாட்டு மரபுடன் ஆரியப் பாரம்பரிய வழிபாட்டு முறைகளும் இணைந்து கொண்டன. ஆரிய வழிபாட்டு மரபில் அக்னி வழிபாடு, சிவன், திருமால் வழிபாடு முக்கியம் பெற்றிருந்தன. திராவிடப் பண்பாட்டில் நிலம் இயற்கையின் பெரும் சக்தியாக மதிக்கப்பட்டது.

சங்க காலத்தில் நிலங்கள் ஐவகையாகப் பிரிக்கப்பட்டு ஐந்து நிலங்களுக்கும் ஐவகை ஒழுக்கங்கள் வகுக்கப்பட்டன. எனினும் பாலை நீங்கலான நான்கு நிலங்களில் நான்கு பிரதான தெய்வங்கள் வழிபடப்பட்டன. குறிஞ்சிக்கு முருகன் அல்லது சேயோன், முல்லைக்கு கண்ணன் அல்லது மாயோன், மருத நிலத்திற்கு இந்திரன், நெய்தல் நிலத்திற்கு வருணன் என இலக்கியங்கள் கூறுகின்றன. பரிபாடலில் கண்ணன் முழு முதற் கடவுளாகச் சித்தரிக்கப்படுகின்றான். சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டில் திருமுருகாற்றுப்படை அடங்குகின்றது. சைவ ஆகம விதிகளின்படி சிவன் என்பது மங்கலம் தரவல்லவன் என்ற பொருள் தருவதால் சிவ வழிபாடு பிரபஞ்சத்துடன் தொடர்புபடுத்தப்பட்டது. சிவன் முழுமுதற் கடவுளாக மதிக்கப்படுவதால் ஐவகை நிலங்களுக்கும் பொதுவானதாகக் கருதப்பட்டது. இந்த அடிப்படையிலே கோணேசர் ஆலயத்தின் தோற்றத்திற்கான காரணத்தைப் புரிந்து கொள்ளுதல் பொருத்தமானதாகும். நிலத்தை தாயாகக் கருதும் பண்பாடு உலகின் பல பாகங்களிலும் காணப்படுவது போன்று திராவிடர்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதினார்கள் என்பதற்கு நிலமைகள் என்ற சொற் பிரயோகம் நல்லதோரு ஆதாரமாகும். இந்த மரபுகள் தாய் வழிச் சமூகப் பண்பிலிருந்து தோன்றியதாகும். கல்வி, வீரம், செல்வம் ஆகியவற்றைத் தாய் வழி உரிமையாகக் கருதும் பண்பாடே கலைமகள், துர்க்கை, இலட்சுமி வழிபாட்டுக்குக் காரணமாகின. கல்வி, வீரம், செல்வம் ஆகிய பண்புகளுக்குப் பெண் தெய்வ வழிபாடே உருவகம் அமைத்துக் கொடுத்தது. தமிழர் வழிபாட்டில் அன்னை வழிபாடு பெறுகின்ற முக்கியத்துவத்தை முருக வழிபாடும், கண்ணன் அல்லது நாராயணன் வழிபாடும் பெறுகின்றன. தமிழகத்தில் ஆதிச்ச நல்லூரிலும் இலங்கையிலும் கண்டறியப்பட்ட பெருங்கற்காலத்திற்குரிய வேல், முருக வழிபாட்டுக்கான காவடிக்குரிய வெள்ளிச் சின்னங்கள் முருக வழிபாட்டின் தொன்மையை உணர்த்துவது போன்றே நிலாவெளியில் கண்டறியப்பட்ட சக்தி உருவமும் திருகோணமலை மாவட்டத்தில் சக்தி வழிபாட்டின் தொன்மையை உணர்த்துகின்றது.

## அன்னை வழிபாடு

நிலாவெளியில் கண்டெடுக்கப்பட்ட பெண் தெய்வ உருவமும் திருகோணமலையில் அன்னை வழிபாடு பின்பற்றப்பட்டது என்பதை உறுதி செய்கின்றது.(24) மேற்படி பெண் தெய்வ உருவம் புதுடெல்லி தேசிய அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்படுகிறது. கலாநிதி சேவியர் நிலாவெளியில் கண்டறியப்பட்ட சக்தி வழிபாட்டுக்கான உருவம் இந்துவெளி நாகரீக கால உருவத்தை ஒத்ததாகக் கருதுகின்றார்.

இந்திய வழிபாட்டு முறைகளில் பெரும் தாக்கத்தை உருவாக்கிய ஆரியச் செல்வாக்கு ஈழத்திலும் பாதிப்பை உருவாக்கியது. வேதகாலச் சமூக அமைப்பில் காணப்பட்ட பிராமணர், சூத்திரர், சத்திரியர், வைசியர் என்ற நான்கு குலங்களில் மேலாதிக்கம் பெற்றிருந்த பிராமணர்கள் ஈழத்து இந்துமத மரபிலும் பெரும் தாக்கத்தை இலகுவில் ஏற்படுத்திக் கொண்டனர். தமிழகத்தை ஒத்த பண்பாட்டையும், வழிபாட்டு மரபுகளையும் கொண்டிருந்த ஈழத்து திராவிடச் சமூகத்தில் ஏற்கனவே தமிழகத்தில் அதிக தாக்கத்தை ஏற்படுத்திய ஆரிய மதக் கிரியை மரபுகள் தடையின்றிச் சங்கமித்தன. எனவே ஈழத்து வழக்கில் உள்ள இந்து மத வழிபாட்டு மரபுகள் பல்வேறு அடிப்படைகளில் இருந்து உருவாகியது என்பதற்கான சாத்தியம் உள்ளது. இயற்கை வழிபாட்டில் முக்கியம் பெற்றிருந்த மரம், விலங்குகள், நதிகள், மலைகள் என்பன பிற்காலத்தில் தெய்வங்களுடன் இணைக்கப்பட்டன. இவ்வாறே இயக்கருடைய வழிபாட்டில் முக்கியம் பெற்றிருந்த வேம்பு, வில்வம், கடம்பு, ஆல், அரசு என்பன மத வழிபாட்டில் சேர்ந்து கொண்டன. இலங்கையில் பௌத்தம் அறிமுகப்படுத்துவதற்கு முன்பாக கடம்பு மரம் வளரும் இடங்கள் புனித இடங்களாகக் கருதப்பட்டதாக மகாவம்சம் கூறுகின்றது.(25) இதைப் பரணவிதானையும் ஏற்றுக் கொள்கின்றார்.(26) காலப் போக்கில் முன்கூறப்பட்ட இந்த மரங்கள் ஆரிய மதக் கிரியைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டு பின்னர் தல விருட்சங்களாக்கப்பட்டன.

தமிழர்கள் மத்தியில் காணப்பட்ட வணக்க முறைகளில முருக வழிபாடு மிகத் தொன்மையானது. சங்க இலக்கியத்தில் குறிஞ்சித் தெய்வமாகக் கருதப்படும் முருகனைக் கொற்றவைச் சிறுவன் என விளிக்கப்படுகின்றான். செவ்வேள், சேயோன் என்ற பெயர்களையும் தமிழ் இலக்கியத்தில் காண முடிகிறது. தென்னிந்திய நகரான ஆதிச்ச நல்லூரில் கிடைக்கப்பட்ட தொல் பொருள் எச்சங்களில் வேல், காவடிக்குப் பயன்படும் பொருட்கள் போன்றன கண்டெடுக்கப்பட்டுள்ளன. இலங்கையில் புத்தளம் மாவட்டத்தில் பொம்பரிப்பு (பொன்பரிப்பு) தொல்பொருள் அகழ்வில் வேல் கண்டறியப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட ஆய்வு முடிவுகளின் பிரகாரம் முருக வழிபாடு சற்றேறப்ப மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கருதப்படுகின்றது.(27) திருகோணமலை மாவட்டத்திலும் பெருங்கற்காலப் பண்பாட்டுக் காலத்தில் காவடி ஆட்டம், வேல் வழிபாடு என்பன நடைபெற்றிருக்க வேண்டும்.

முருகன் வேட இனத்தைச் சேர்ந்த வள்ளியைத் திருமணம் செய்ய இலங்கை வந்ததாக சைவ ஐதீகக் கதை கூறுகின்றது. ஈழத்தில் கண்டறியப்பட்ட பிராமிக் கல்வெட்டில் வேல (வேலன்) என்ற சொல் பரவலாகக் காணப்படுகின்றது. இது தவிர முருகனைக் குறிக்கும் வட மொழிப் பெயர்களான குமார, ஸ்கந்த, விசாக, குகன் ஆகியன பிராமிக் கல்வெட்டுகளில் காணப்படுகிறன. அத்துடன் சரவணப் பொய்கையில் முருகனை எடுத்து வளர்த்த கார்த்திகைப் பெண்களைக் குறிக்கும் கார்த்திகா என்ற பெயரும் பிராமிக் கல்வெட்டில் காணப்படுவது மிக முக்கியமானது. மேற்குறிப்பிட்ட தகவல்களின் பிரகாரம் ஈழத்திலும், தமிழகத்திலும் முருக வழிபாடு சற்றேறப்ப மூவாயிரம் ஆண்டுகளாக இடம் பெறுவதை அறிய முடிகிறது. மாவைப்பதியின் ஐதீகக் கதை மூலம் முருக வழிபாடு திருகோணமலை நதிக்கரையோரத்தில் நடந்ததைச் சூளவம்சம் ஏற்றுக் கொள்கிறது. சூளவம்சத்தில் மானவர்ம குமரக் கடவுளைப் பிரார்த்தனை செய்ததாகக் கூறப்படும் இடம் வெருகல் பகுதியாக இருக்கலாம். கிழக்கிலங்கைக் கரையோரங்களில் முருக வழிபாடு சிறப்பு நிலையில் இருந்திருக்கின்றது. வெருகல் சித்திர வேலாயுதர் சுவாமி கோயில், பெரிய போரைதீவு சித்திர வேலாயுதர் சுவாமி கோயில், மண்டூர் கந்தசுவாமி கோயில், உகந்தை முருகன் கோயில், கதிர்காமம் என்பன சில உதாரணங்களாகும். அநுராதபுரம், அம்பாறை, மாத்தளை ஆகிய பகுதிகளில் கண்டறியப்பட்ட பிராமிக் கல்வெட்டுக்களில் வேல் வழிபாடு குறித்துக் கூறப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எலு**

எலு என்பது ஈழ நாட்டில் (எலு நாடு) வாழ்ந்த நாகர்களின் மொழி. நாகர்கள் பேசிய எலு மொழியானது தமிழ் மொழியுடன் மிக நெருங்கிய தொடர்புடைய மொழியாகக் கருதப்படுகின்றது. சுவாமி ஞானப்பிரகாசருடைய கருத்துப்படி எலு மொழி இருக்கு வேதகால மக்கள் பயன்படுத்திய மொழியை ஓரளவு ஒத்தது. இம் மொழியானது வரைபடங்களை ஒத்த வரிவடிவங்களைக் கொண்டது. எனவே எலு மொழியைச் சித்திர எழுத்து மொழி எனக் குறிப்பிடலாம். இந்த இடத்தில் 1917 இல் எழுதப்பட்ட யாழ்ப்பாணச் சரித்திரம் என்ற நூலில் எலு மொழிபற்றிய ஒரு குறிப்பு வாசகர்க்கு அபூர்வம் தரவல்லது.

*"அதன் பின்னர் விஜயன் இலங்கைக்குச் சக்கரவர்த்தியாக முடி புனைந்து ஒரு நகரமும் அமைப்பித்து முப்பது வருடம் செங்கோலோச்சினான். பாண்டியராசாவின் சம்பந்தத்தினால் மாதோட்டமையும், திரிகோணமலையையும் தலை நகரங்களாகவுடைய ஈழநாட்டுத் தமிழ் மக்களும் விஜயன் குடைக்கீழ் அடங்கினர். விஜயனும் அவனது குடிகளும் கைக்கொண்டொழுகிய சமயம் சைவ சமயமே. சிங்கள பாஷை தமிழ்ச் சொல் சிறிதும் சமஸ்கிருத பிராகிருதச் சொற்கள் பெரிதுமாகக் கலந்துண்டாக்கிய ஒரு மிசிரபாஷை. எலுவென்பது சமஸ்கிருத பிராகிருதமும் மிக அருகிக் கலந்த சிங்களம். எலுவென்பது ஈழமென்பதன் மரூஉ. இப்பாஷையே விஜயன் வருமுன்னும் இலங்கையின் தென்பாகத்திலுள்ள யக்ஷ, நாகர்களிலுள்ளும் வழங்கப் பட்டது. மதுரை நாட்டிலிருந்து வந்து அரசு கைக்கொண்ட விஜயனும் அவன் வமிசத்தோரும் அப்பாஷையே வழங்கினர். மதுரையிலிருந்து வந்த நாயக அரசர் வழங்கியதும் அப்பாஷையே."(28)*

எலு மொழி பற்றிய மேற்படிக் குறிப்பில் சில குழப்பங்கள் காணப்படுகின்றன. ஆசிரியர் குறிப்பிடுவது போன்று எலு என்பது சமஸ்கிருதம், பிராகிருதம் அருகிக் கலந்த சிங்களம் அல்ல. சிங்களத்தின் தோற்றத்திற்கு எலு முக்கிய பங்கு வகித்தது என்பதே பொருத்தமானதாகும். திருகோணமலையைத் தலை நகராகக் கொண்ட தமிழ் மக்களும் விஜயனின் ஆட்சிக் குடையின் கீழ் அடங்கியிருந்தார்கள் என்பது ஏற்புடையதல்ல. மகாவம்சத்தின் பிரகாரம் விஜயனின் அரசுரிமையை ஏற்க வாரிசு இல்லாத காரணத்தால் விஜயன் தனது தம்பி சுமித்தனுக்கு தனது அரசுரிமையை ஏற்கப் பொருத்தமான வாரிசை அனுப்பும்படி தகவல் அனுப்பியிருந்தான். விஜயனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சுமித்தனின் மகன் பாண்டு வாசுதேவன் முப்பத்திரண்டு மந்திரி குமாரர்களுடன் துறவி வேடத்தில் திருகோணமலையில் வந்திறங்கினான் என மகாவம்சம் கூறுகின்றது.(29) அவ்வாறே பாண்டு வாசுதேவனையும் அவனது முப்பத்திரண்டு மந்திரி குமாரர்களையும் திருமணம் செய்ய கலிங்கத்திலிருந்து பத்திரகாஞ்சனாவும் அவளது



முப்பத்திரண்டு மந்திரி குமாரிகளும் மாறுவேடத்தில் திருகோணமலைத் துறைமுகத்தை வந்தடைந்தார்கள் என மகாவம்சம் கூறுகின்றது.(30) யாழ்ப்பாணச் சரித்திர ஆசிரியர் முத்துத்தம்பி பிள்ளை குறிப்பிடுவது போல திருகோணமலை அரசு விஜயனின் ஆட்சியின் கீழ் அடங்கியிருந்திருந்தால் விஜயனின் உறவினர்களான வாசுதேவ, பத்திர காஞ்சனா குழுவினர் ஏன் மாறுவேடத்தில் திருகோணமலைக்கு ஊடாக இலங்கை வரவேண்டும்? எனவே விஜயனின் ஆட்சியை ஏற்காத தமிழ் மூதாதையினர் ஆட்சி திருகோணமலையில் இருந்திருக்கிறது என்பது உறுதியாகின்றது.

## இடப்பெயர்களும் மயக்கமும்

மிகப் பழமைவாய்ந்த ஒரு நாட்டின் இடப் பெயர்கள் குறித்த ஆய்விற்கு அந்நாட்டின் வழக்கிலுள்ள மொழிகளின் சொற்பிறப்பியல் குறித்த அறிவு மட்டும் போதாது. அந்த நாட்டின் வழக்கிலுள்ள மொழிகளின் தோற்றத்திற்குக் காரணமான ஆதி மொழிகளின் சொற்பிறப்பியல் குறித்த அறிவும் மிக அவசியமானதாகும். இலங்கையில் வழக்கிலுள்ள சிங்களமும், தமிழும் தோற்றம் பெறக் காரணமாகவிருந்த ஆதி மொழிகள் குறித்த கருத்து முரண்பாடுகள் இணக்கம் காணாது விரிவடைந்து செல்லும் நிலையில் மூல மொழிகளின் சொற்பிறப்பியல் குறித்து ஆராய முற்படுவது புதிய விவாதங்களை உருவாக்குகின்றன. குறிப்பாகச் சிங்கள மொழியின் தோற்றத்திற்கான மூல மொழிகள் குறித்து மொழியியலாளர்களிடையே ஒருமித்த கருத்து இது வரை எட்டப்படவில்லை. எனினும் நாம் சிங்கள மொழியின் தோற்றத்திற்கான மூலங்களை ஆராய்ந்ததிலிருந்து அதில் பிராகிருதம், வடமொழி, ஆதித் திராவிட மொழியான எலு, பாளி, தமிழ் என்பனவற்றின் பங்களிப்பை அறிய முடிகின்றது. அதே போன்று தமிழிலும் ஆதித் திராவிட மொழியான எலுவும், வடமொழியும் பங்கு கொண்டிருக்கின்றன. இதில் முக்கியமாகக் கவனிக்க வேண்டியது என்னவென்றால் ஆதித் திராவிட மொழியான எலுவும், வடமொழியும், தமிழிலும் சிங்களத்திலும் கலந்திருப்பதே. இதைப் புரிந்து கொள்வதற்கு இலங்கையில் வழக்கிலிருந்த ஒவ்வொரு மொழி அறிவு மிக முக்கியமானதாகும். இவை தவிர, இலங்கையின் ஒரு இடத்தின் பெயர் அல்லது பழமைப் பொருட்களின் சொற்கள் குறித்து ஆராய்வதற்கு இலங்கை வரலாற்றில் அதிக தாக்கத்தினை ஏற்படுத்திய திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியனவற்றின் ஆழ்ந்த புலமை அவசியமானதாகும்.

சில இடப் பெயர்களைப் பிரித்து ஆராயும்போது ஏற்படும் சிக்கல்களைத் தீர்த்துக் கொள்வதற்கு ஆழமான வரலாற்று அறிவும், பல மொழிப் புலமையும் தவிர்க்க முடியாத தேவையாகின்றன. உதாரணமாகத் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குச்சவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற சொல்லில் வரும் கும்பூறு என்ற சொல் சங்க இலக்கிய வழக்கில் உள்ள குறும்பொறை என்ற சொல்லின் திரிபே. சங்க இலக்கியத்தில் காட்டு நிலத்தைக் குறிக்கப் பயன்படும் குறும்பொறை என்பது கும்பூறு என மருவிற்று. சிங்கள மொழியில் கும்புறு என்பது வயல் எனப் பொருள்படும். சிங்கள மொழி உருவாக்கத்தில் முக்கிய பங்கெடுத்துக் கொண்ட மொழிகளில் வட மொழியும், பழந்தமிழும் அடங்குகின்றது என்ற கருத்து மேலும் உறுதியாகின்றது. வட இலங்கைத் தீவுக் கூட்டத்தில் உள்ள ஒரு இடத்தையும் தம்பபிட்டி என அழைக்கப்படுகின்றது. திருகோணமலைக்கு வடக்காக உள்ள குச்சவெளிக் கிராமத்தை அடுத்துச் செல்லும் சிறிய ஆற்றை தற்கால வழக்கில் சலப்பை ஆறு என அழைக்கப்படுகின்றது. கருப்பை ஆறு என்ற சொல்லின் மொழித் திரிபே சலப்பை ஆறாகும். திருகோணமலை வரலாற்றைக் கூறும் தொல்லிலக்கியமான தட்சண கைலாச புராண திருநகரச் சருக்கத்தில் கயவாகு மன்னன் கோணேசர் ஆலயத்திற்கு அளித்த மானியத்தைக் கூறும் நிலப் பரப்பில் கருப்பையாற்றின் எல்லையும் வரையறுக்கப்பட்டுள்ளது.

*என்றும் அருச்சனைக்கு மிக்கோரெண்ணா*
*இட்டதியின் முதன்மை இருவோர்க்கும் ஈந்து*
*வென்றிதரும் தமது குலக் குரவோராகி*
*விளங்குமெனக் குருவரிசை மிகவும் நல்கிக்*
*கன்றுமலை வெருகற்றி கருப்பை ஆறும்*
*கரம்பத நீர்க் கடலாலும் கணித்த எல்லை*
*துன்று திசை நான்கும் அவன் தனக்கே என்னச்*
*சொல்லும் அவன் கல் எழுதித் தாபித்தான்.*

(தட்சண கைலாச புராணம், பாகம் 2,
திருநகரச் சருக்கம், செய்யுள் 100)

தொகுப்புரையாகப் பார்க்கின்ற போது நாகர்கள் இந்து சமயத்தின் உட்கூறுகளில் ஒன்றான நாக வணக்கத்தையும் தமிழின் மூல மொழிகளில் ஒன்றான எலு மொழியையும் பேசியிருக்கின்றார்கள் என அறிய முடிகின்ற போது நாகர்களை மூத்த திராவிடராகக் கொள்வது பொருத்தமானதே. விஜயனின் வருகைக்கு முற்பட்ட கால நீர்ப்பாசன, பயிர்ச் செய்கை முறையினை தெரிந்திருந்த மக்கள் என்ற முறையில் நாகர்களே இலங்கையின் ஆரம்பகால நாகரீக கர்த்தாக்களாவர். திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி, கொட்டியாரப் பரப்பு ஆகிய இடங்களில் கிடைத்துள்ள பெருங் கற்காலப் பண்பாட்டு அடையாளங்களுக்குரிய மக்கள் என்ற வகையில் இவர்களே இன்றைய திருகோணமலைத் தமிழ்ச் சமூகத்தின் ஆதிக் குடிகளானோர்கள். தமிழர்களின் மூதாதையர்களான நாகர்கள் இலங்கையின் வட கிழக்கில் செறிந்து வாழ்ந்திருந்தாலும் இலங்கையின் ஏனைய பகுதிகளிலும் பரந்து வாழ்ந்தமைத் தொல்லியல் ஆவணங்கள் உறுதி செய்கின்றன.



ஆதிப் பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் நாகர்களின் பெயர் கொண்ட தகவல்கள் நாகர்களின் நடமாட்டம் பரந்திருந்ததை உறுதி செய்கின்றது. சூளவம்சம் கூறுகின்ற நாக வழிபாடு திருகோணமலையில் பின்பற்றப்பட்டது என்பதை ஏற்பது பொருத்தமானதாகும். இந்த வரலாற்றுத் தளத்திலிருந்து திருகோணமலைத் தமிழ்ச் சமூகத்தின் வேர்களை ஆராய்தல் வேண்டும்.

அடிக்குறிப்புக்களும் விளக்கங்களும்

1 Deraniyagala S. "The Pre- Historic Chronology of Sri lanka", Ancient Ceylon, pp 211 – 226

2. கலாநிதி. சி.க. சிற்றம்பலம். யாழ்ப்பாணம் தொன்மை வரலாறு, பக். 9

3. கலாநிதி க. குணராசா, ஈழத்தவர் வரலாறு, பக். 15

4. [illegible], பக். 39 - 40

5. கலாநிதி சி.க.சிற்றம்பலம், மேற்படி, பக். 37

6. செ.கிருஷ்ணராசா, இலங்கை வரலாறு பாகம் 1 பக். 31

7. Prickett Martha the preliminary investigation pp 40 –65

8. கலாநிதி சி.க. சிற்றம்பலம், மேற்படி பக். [illegible]

9 மகாவம்சம் அத்தியாயம் 1

10 [illegible]

11 மகாவம்சம் அத்தியாயம் 1

12. கலாநிதி குணராசா, மேற்படி, பக். 18-19

13. Dr J.Xavier. M.B B.S., F.R.C.S. The Land of Letters p38, p222

14. மகாவம்சம், 47 -70

15. செல்லையா கிருஷ்ணராசா, [illegible], பக். 70

16. [illegible], பக். 52

17. P.E. Pieris, Nagadipa and Buddhist Remains in Jaffna p 40

18. செ. குணசிங்கம், மேற்படி, பக். 37

19 S.Paranavitana The Arya Kingdom in North Ceylon 1961

20. செ.குணசிங்கம், மேற்படி, பக். 41

21 சிற்றம்பலம், மேற்படி, பக். 16

22 Ragupathy.P. Early Settlement in Jaffna, pp 137 –147

23 Kennedy,K.A.R. The physical Anthropology of the Megalith Builders of South India and Sri Lanka ( Canberra) 1975

24 Dr J.T Xavier. M.B.B.S., F.R.C.S. The Land of Letters, pp 223-224
[illegible]

25. மகாவம்சம், அத். 19, 72-76, அத். 33, 84-86

26. Paranavitana.S, Pre-Buddhist Religious Beliefs in Ceylon. 1929,pp 302-307

27 Nilakanta Sastri, K.A. A History of South India from Pre historic Times to the Fall of Vijayanagara. 1976

28. [illegible], யாழ்ப்பாணச் சரித்திரம் 1912, புதிய [illegible] 1957

29. மகாவம்சம், அத். VII 7-12

30. மேற்படி அத். VII 18-24



4

# திருக்கோணேஸ்வரமும் தோற்றக் காலமும்

திருக்கோணேஸ்வரத்தைப் பற்றி தென் மொழி தொல் இலக்கியங்களும், புராணங்களும் போற்றிப் பாடியுள்ளன. திருக்கோணேஸ்வரம் குறித்துப் பல ஐதீகக் கதைகள் உள்ளன. குறிப்பாக புராணங்கள் கூறும் ஐதீகக் கதைகளின் நம்பகத்தன்மை மிகக் குறைவாக இருப்பதால் வரலாற்றை ஆதாரமாகக் கொள்வதில் பல சிக்கல்கள் உள்ளன. புராணங்களையும், ஐதீகக் கதைகளையும் வைத்து ஒரு வரலாற்றைக் கட்டி எழுப்ப முடியாது. எனினும் அவற்றில் இருந்து சில சான்றுகளைப் பெறக்கூடிய சாத்தியம் உள்ளது.

தட்சண கைலாசம், மச்சகேஸ்வரம் என்பன திருக்கோணேஸ்வரத்திற்கான மறுபெயர்களாகும். இந்த மறுபெயர்கள் ஏற்பட புராணங்கள் கூறும் நிகழ்வுகள் இந்து மதச் சார்பானவை. ஆதிசேடனும், வாயு பகவானும் தங்கள் வலிமையைக் காட்ட முயன்று, ஆதிசேடன் மகா மேருவின் சிகரத்தை மூடிக்கொள்ள, வாயு பகவான் மகா மேருவின் சிகரங்களில் மூன்றை பெயர்த்து காற்றில் வீச, அது இலங்கையின் கிழக்குக் கரையோரமாக விழுந்து திருகோணமலையாக உருவாகியது என்பது புராணத்திலிருந்து கிடைக்கும் செய்தியாகும். இமயமலையின் ஒரு பகுதியே கோணபர்வதம் என்ற நம்பிக்கை காரணமாகக் கோணேஸ்வரத்திற்கு தட்சண கைலாசம் என்ற பெயர் உருவாகியது. திருமால் மச்சாவதாரத்திலே தக்சண கைலாயத்தை அடைந்து தனது மீன் உருவத்தை விட்டு நீங்கி மகேஸ்வரனை வணங்கியதால் மச்சகேஸ்வரம் என்ற பெயரும் உருவாகியதாக தக்சண கைலாச புராணம் கூறுகின்றது. புராண, இதிகாசங்களில் இருந்து பல மறுபெயர்கள் அறிந்து கொண்ட போதிலும் திருக்கோணேஸ்வரம் என்ற பெயரே நீண்டகாலம் வழங்கி வந்துள்ள தலப் பெயராகும். 7ம் நூற்றாண்டுக்குரியவராகக் கருதப்படும் சம்பந்தர் திருக்கோணமலை என்றே பதிகத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் நிலாவெளிப் பிள்ளையார் கோயிலில் கிடைத்த சாசனத்தில் திருக்கோணேஸ்வரத்தை மச்சகேஸ்வரம் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. கோகர்ணத்துச் சிவாலயமானது 10ம், 11ம் நூற்றாண்டுகளில் மச்சகேஸ்வரம் என அழைக்கப்பட்டிருக்கின்றது

திருக்கோணேஸ்வரத்தின் தோற்றக்காலம் குறித்து வரலாற்றுத் தடயங்கள் இல்லாத நிலையில் தோற்றக்காலத்தை உறுதியாக நிர்ணயம் செய்வது மிகக் கடினமானதாகும். காலத்தை மதிப்பிடுவதற்குப் போதிய வரலாற்றுச் சான்றுகள் இல்லாதவிடத்து தொல் இலக்கியங்களிலும், மத வழிபாட்டுத் தடயங்களிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருக்க வேண்டிய தேவை உருவாகின்றது. எனவே உறுதியான ஆதாரங்கள் இல்லாத காரணத்தால் கோணேசர் ஆலயத்தின் தோற்றக் காலத்தை மதிப்பிடுவதற்கு இரு தளங்கள் அவசியமாகின்றன.

1.கோணேஸ்வரம் குறித்து பல தொல் இலக்கியங்கள் தகவல்களை தருவதால் அவற்றின் காலங்களையும், அவை கூறும் தகவல்களையும் மதிப்பிடுவதன் மூலம் கோணேஸ்வரத்தின் தோற்றக்காலத்தினை மதிப்பிடுதல்.

2. திருகோணமலை மாவட்டத்தில் இந்து மத வழிபாட்டு வரலாற்றை அறிதல். திருகோணமலையில் இந்து மத வழிபாடு மிக நீண்ட காலமாகப் பின்பற்றப்பட்டு வருகின்ற போதும் இந்து மத வழிபாட்டின் கால வரலாற்றைக் கண்டறிதல் இலகுவானதல்ல. ஏனெனில் இந்து மத வழிபாட்டின் உட்கூறுகள் பல வெவ்வேறு காலகட்டத்தைச் சேர்ந்தவைகளாகும். குறிப்பாகப் பெருங்கற் காலச் சமூகத்தினரிடையே காணப்பட்ட நாக வழிபாடு, விருட்ச வழிபாடு என்பன இந்துமத வழிபாட்டில் சிறப்பிடம் பெற்றிருக்கின்றது. இதுவரை கிடைக்கப் பெற்றுள்ள வரலாற்றுத் தடயங்களும் இலக்கியங்களும் கோணேசர் ஆலயத்தின் தோற்றம் குறித்து போதியளவு தகவல்களைத் தரவில்லை. திருகோணமலை வரலாற்றுப் போக்கினை இலங்கை நிகழ்வுகளை விடத் தமிழக வரலாற்று நிகழ்வுகளே அதிகளவு பாதித்துள்ளன. தமிழக அரசுகளின் ஆதிக்கம் திருகோணமலையில் ஏற்பட்ட போது பண்பாட்டுத் தொடர்பு வலுப்பெறத் தொடங்கியது. தமிழக இலக்கியங்களில் இருந்தும் திருக்கோணேஸ்வரம் குறித்து அறிந்து கொள்ளக்கூடியதாக இருப்பதனால் தமிழக வரலாற்று அறிவு அவசியமாகின்றது.

திருக்கோணேஸ்வரம் குறித்துப் பேசப்படுகின்ற தொல் இலக்கிய வரிசையில் இராமாயணமே காலத்தால் முந்தியதாகும். திருக்கோணேஸ்வரத்தின் தொன்மைக்குச் சான்றாக இராவணனின் வழிபாட்டிற்குரிய தலமாக கோணேஸ்வரம் குறிப்பிடப்படுவதால் இராவணனின் காலம் எது என்ற கேள்வி இயல்பாகவே எழுகின்றது. ஆயினும் இதுவரை இராமாயண நிகழ்வுகள் நடைபெற்ற காலமோ அல்லது இராமாயண நிகழ்வுகள் இதிகாசமாகத் தொகுக்கப்பட்ட காலமோ உறுதியாக நிர்ணயம் செய்யப்படவில்லை. இந்திய உப கண்டத்தின் எல்லைக்கு அப்பாலும் இராமன் ஒரு வணக்கத்திற்குரிய அவதாரமாகக் கருதப்படுவதால், இராமாயணம் பல ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இவர்களுள் பர்கிரெ, ஜாகோபி, வெபர், ஆர்தர் மக்டோனல், கீத், வின்ரெனிட்ஸ், தாரா ராமசுவாமி சாஸ்திரி, ஆனந்த குருகே என்போர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுடைய கருத்துக்களும் கணிப்புகளும் முரண்பாடாக இருந்த போதிலும் கி.மு. 1600–கி.மு. 300 இடைப்பட்ட காலப்பகுதியை இராமாயண காலமாக கணிப்பிட்டிருக்கின்றார்கள். மரபு வழிப் பாரம்பரியங்களின் பிரகாரம் இராமாயணம் திரேதா யுகத்தில் நிகழ்ந்ததாக கூறப்படுகின்றது. ஆயினும் கூட, இராமாயணக் காலம் குறித்து இதுவரை ஆய்வு நடாத்தியவர்கள் மிக உறுதியான சான்றுகளை அறிவியல் அடிப்படையில் முன்வைக்கத் தவறிவிட்டனர். எனவே இராமாயண காலத்தை அண்ணளவாகவே கணிப்பிட முடிகிறது. இராமாயணம் ஒரு உண்மை நிகழ்வொன்றின் மிகைப்படுத்தல் அல்லது ஒரு அற்புதமான கற்பனைக் காவியம் என்ற இரு முரண்பாடான கருத்துக்கள் விமர்சனமாக முன்வைக்கப்படுகின்றது. இதில் மிக முக்கியமான விடயம் என்னவெனில் கோணேஸ்வரக் கோயிலுக்கும் இராவணனுக்குமிடையில் தொடர்பை ஏற்படுத்தும் எத்தகைய ஒரு தகவலும் இராமாயணத்தில் இல்லை என்பது தான்(1)

இராவணனைக் கோணேசர் ஆலயத்துடன் தொடர்புபடுத்தும் மரபுவழிக் கதைகள் எவ்வாறு தோற்றம் பெற்றன என்பது ஆராயப்பட வேண்டும். இலங்கையில் மாத்திரமல்ல இந்தியாவிலும் இராவணனை கோணேசர் ஆலயத்துடன் தொடர்புபடுத்தும் மரபுக்கதைகள் நீண்ட கால வழக்கில் உண்டு என்பதை மறுக்க முடியாது. இராமாயண நிகழ்வுகள் நடைபெற்று பல நூற்றாண்டுகளுக்குப் பின்னரேயே வால்மீகியால் தொகுக்கப்பட்டது என ஏற்றுக் கொள்கின்றவர்கள் இராமாயணத்தை உண்மையின் மிகைப்படுத்தல் எனக் கருதுகின்றார்கள். பிற் காலத்தில் வால்மீகியால் இராமாயணத்தை தொகுக்கின்ற போது பல மரபுவழிக் கதைகள் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் அல்லது சில நிகழ்வுகள் தவறவிடப்பட்டிருக்கக் கூடும். திருக்கோணேஸ்வரம் தொடர்பான இராவணனின் நிகழ்வுகள் வால்மீகியால் மறக்கப்பட்டோ அல்லது ஒதுக்கப்பட்டோ இருக்கலாம். வால்மீகிக்குப் பின் வந்த கம்பரும் இராமாயணத்தில் பல மாற்றங்கள் செய்திருப்பதை இரு நூல்களையும் ஒப்பிட்டு அவதானிக்கும் ஒருவரால் அவதானிக்க முடிகின்றது.

மரபுக் கதைகளில் இராவணனுடன் தொடர்புபடுத்தப்படும் திருகோணமலையின் மற்றுமொரு புனிதத்தலம் கன்னியா வெந்நீர் ஊற்றுக்களும், கன்னியா சிவன் ஆலயமுமாகும். இவற்றை இராவணன் இறந்த தன் தாயின் ஈமைக்கடனை நிறைவேற்ற உருவாக்கப்பட்டதாக மரபுக் கதைகள் கூறுகின்றன. நாட்டார் வழக்காற்றில் உள்ள மரபுக் கதைகள் முற்றிலும் உண்மைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டதாகக் கருத முடியாது. எனினும், ஏன் மரபுக் கதைகளில் இலங்கையின் ஏனைய தலங்களை விட திருக்கோணேஸ்வரம் இராவணனுடன் அதிகளவு தொடர்புபடுத்தப்படுகின்றது என்ற வினாவும் தவிர்க்க முடியாமல் எழுகின்றது. திருக்கோணேஸ்வரத்துடன் இராவணனைத் தொடர்புபடுத்தும் எழுத்திலமைந்த முதல் தமிழ் இலக்கியமாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலைப் பதிகத்தைக் குறிப்பிட முடியும். 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தரால் இராவணன் குறித்த செய்தி திருகோணமலைப் பதிகத்தின் எட்டாவது பாடலில் (சம்பந்தருடைய தேவாரம்) சொல்லப்பட்டிருக்கின்றது. திருக்கோணேஸ்வரத்துடன் தொடர்படும் இராவணனின் வாழ்க்கை நிகழ்வுகள் இலங்கைக்கு வெளியிலும் பேசப்பட்டிருக்கிறது. 12ம் நூற்றாண்டில் உருவாகிய கம்பராமாயணத்தில் இலங்கை மன்னனாகச் சித்தரிக்கப்படும் இராவணன் ஒரு சிவ பக்தனாகவே சித்தரிக்கப்படுகின்றான். இராவணனை ஆரியருக்கு எதிரான போருக்குத் தலைமை வகித்த இயக்க இன அரசன் எனப் பல வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றார்கள். இந்திய உப கண்டத்தின் தென் பிராந்தியத்தில் ஏற்பட்ட ஆரியமயமாக்கலுக்கு எதிரான போரை வழி நடத்திய ஆதிக் குடிமக்களின் தலைவன் என்றே ஆனந்த குருகே கருதுகின்றார்.(2) இங்கு நாம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஓர் உண்மை என்னவெனில், இராவணன் மக்கள் மனதைக் கவரத்தக்க பாத்திரமாக விளங்கியிருக்கின்றான் என்பதே. அத்தகைய ஒரு பாத்திரமாக இராவணன் எவ்வாறு மாறியிருக்கலாம் என்பது இயல்பான ஒரு வினாவாகும். இராமாயணம் கூறும் யுத்த நிகழ்ச்சிகளைக் கவனிக்கும் போது, அது இந்தியாவில் ஆரிய மயமாக்கம் நடைபெற்ற காலத்தில் நிகழ்ந்த சம்பவங்களை ஆதாரமாகக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இந்தியப் பிரதமர் நேரு தனது நூலில் இராம இராவண யுத்தத்தை ஆரிய-திராவிட யுத்தமாகவே குறிப்பிடுகின்றார்.(3) வால்மீகி இராமாயணத்தில் இராவணனுடன் தொடர்புபடுத்தப்படாத கோணேசர் ஆலயம் மரபுக் கதைகளில் எவ்வாறு இடம் பிடித்துக் கொண்டது என்பது இன்னும் வரலாற்று வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்படவில்லை. திராவிட இனத் தலைவன் ஒருவனின் நம்பிக்கைக்குரிய ஆலயமாகக் கோணேசராலயத்தைக் காட்ட எழுந்த ஐதீகக் கதைகளாக இருக்கலாம். எனினும் எதிர்கால ஆய்வுகள் உறுதியான முடிவுகளை வழங்கலாம்.

## கோகர்ணம்

இராமாயணக் காலத்தை அடுத்து கோணேஸ்வரம் குறித்துத் தகவல் தருகின்ற காலத்தால் முற்பட்ட நூலாக மகாவம்சத்தையே எடுத்துக் கொள்ளலாம். இலங்கை வரலாற்று நூல்களில் மகாவம்சமே திருகோணமலையில் காணப்பட்ட புராதன சிவாலயம் பற்றிச் செய்தியை முதலில் எழுத்தில் தருகின்றது. மகாசேனன் மகாயான பௌத்தத்திற்கு ஆதரவாக மேற்கொண்ட நடவடிக்கைகளில் கோகர்ண பிராமண ஆலயத்தை அழித்தான்.(4) அன்று தொட்டு பௌத்தர்களுக்கும், இந்துக்களுக்கும் சர்ச்சைக்குரிய தலமாக திருக்கோணேஸ்வரம் விளங்குகின்றது. இங்கு மகாவம்சத்தில் கோகர்ண எனக் குறிப்பிடப்படுவது திருகோணமலை என்பதற்கான பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன. திருகோணமலையைப் புராண



காலங்களில் கோகர்ணம் என்றும் அழைக்கப்பட்டிருக்கின்றது. பாளி இலக்கியங்களிலும் திருகோணமலையைக் கோகண்ண என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் காரணமாகவே மகாவம்சத்திலும் திருகோணமலையைக் கோகர்ணம் என்றே அழைக்கப்படுகின்றது. பிரகிருத மொழி வழக்கிலே கோகர்ணம் என்ற சொல் கோகண்ண என்ற உருவில் வரும்.(5) கோகர்ணம் என்ற பெயரைக் கொண்ட மூன்று தலங்கள் இந்தியாவிலும் இருந்தது என்பது வரலாற்றாசிரியர்களின் முடிபாகும். G.P.மலலசேகராவின் பாளி பிரதிப் பெயர்ச் சொற்களுக்கான அகராதி கோகர்ணம் என்பதைத் திருகோணமலை என்றே குறிக்கின்றது

கலிங்க நாட்டில் மகேந்திர மலைத் தொடரிலே கோகர்ணம் என்றொரு சிவாலயம் காணப்பட்டது. இந்த ஆலயம் கலிங்கத்தை ஆண்ட கீழ்த்திசைக் கங்கர்களால் தங்கள் குலதெய்வமான கோகர்ண சுவாமிக்குக் கட்டப்பட்டதாகும். இது குறித்து கீழைத் தேசக்கங்கர்களின் கல்வெட்டுக்களில் விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேபாள நாட்டின் கிராதர் இன மக்கள் வாழுகின்ற பகுதி என்ற பிரதேசத்தில் கோகர்ண சிவாலயம் அமைக்கப்பட்டிருந்தது. வங்காளத்து பால பரம்பரையைச் சேர்ந்த தர்ம பாலனுடைய படைகள் வட இந்தியாவில் திக்கு விஜயத்தை மேற்கொண்ட பொழுது கோகர்ணம் என்ற புண்ணிய சிவ தலத்தில் வழிபட்டதாக கல்வெட்டுக்கள் தெரிவிக்கின்றன. இந்தியாவின் மேற்குப் பிரதேசத்தில் உள்ள துளுவ நாட்டில் கோகர்ண ஆலயம் உள்ளது. துளுவ நாட்டு கோகர்ண சிவனைப் பசிநாதர் எனவும்கோகர்ணத்து நாயகியான பார்வதி எனவும் அழைக்கப்படுகின்றது. துளுவ நாட்டுக் கோகர்ண மூர்த்தியை சம்பந்தரும், நாவுக்கரசரும் பதிகம் பாடித் துதித்துள்ளார்கள். முன் குறிப்பிட்ட மூன்று கோகர்ண ஆலயங்களில் மகேந்திர மலைத் தொடரில் கீழைத் திசைக் கங்கர்களினால் வழிபட்ட கோகர்ண சுவாமியை மட்டுமே கோகர்ண ஈஸ்வரா என அழைப்பதுண்டு. இதன் மூலம் இந்தியாவிற்கும், திருகோணமலைக்கும் வரலாற்றின் ஆரம்பக் காலங்களில் இருந்து தொடர்ச்சியான பண்பாட்டு, வணிகத் தொடர்புகள் இருந்திருக்க வேண்டும் என்பதை இலகுவில் ஏற்க முடிகின்றது. கோணேஸ்வரத்திற்கும், கோகர்ண ஈஸ்வரருக்கும் உள்ள வரலாற்றுத் தொடர்பு விரிவாக ஆராயப்பட வேண்டும். கோணேஸ்வரர் என்ற பெயர் கோகர்ண ஈஸ்வரர் என்ற இரு சொற்களின் இணைப்பால் உருவாகியிருக்கலாம். கி.பி 5ம் நூற்றாண்டில் குப்தராட்சிக் காலத்தில் உருவாகிய வாயு புராணம் மலைய தீவின் கிழக்கு கரையோரத்தில் அமைந்துள்ள கோகர்ண சிவாலயம் பற்றி குறிப்பிடுகின்றது. பொன்னும், மணிகளும் மிகுதியாகக் கிடைக்கின்ற நாடு. அங்கே அகஸ்திய பவனம் காணப்படுகின்றது. அங்கே அரக்கர்களும், மிலேச்சர்களும் அதிகளவில் வாழ்கின்றார்கள் மலைய தீவில் லங்காபுரி என்ற நகர் உள்ளது.(6)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய விபரங்களைக் கவனத்திலெடுக்கும் ஒரு வரலாற்றுத்துறையினர் மலையை தீர்க்க இலங்கையை அடையாளங் காட்டுவது தவறாகாது வாயு புராணத்தில் குறிப்பிடப்படும் கோகர்ண சிவாலயத்தை திருக்கோணேஸ்வரம் என ஏற்பது சரியானதாகும். மகாவம்சத்திற்கான உரை நூலாகக் கருதப்படும் மகாவம்சதீக திருகோணமலையில் மகாசேனனால் இடிக்கப்பட்டது ஒரு சிவலிங்க ஆலயம் எனக் குறிப்பிடுகின்றது. மகாவம்சம் தரும் தகவலுக்கு இணங்க மகாயான பௌத்தத்தை ஆதரித்த மகாசேனன் மகா விகாரைப் பிக்குகளை விரட்டியதோடு இந்து ஆலயத்தையும் அழித்தான் என அறிய முடிகின்றது. மகாயான மத வளர்ச்சிக்குத் தடையெனக் கருதப்பட்ட ஏனைய மதப் பிரிவுகள் தாக்கப்பட்டன. இதிலிருந்து மகாயான பௌத்த மத வளர்ச்சிக்குத் தேரவாதப் பௌத்தமும் இந்து மதமும் தடையாக இருந்திருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது. மகா வம்சத்தின் உரை நூலான வம்சத்தப்பகாசினி இந்த நிகழ்வை பின்வருமாறு வர்ணிக்கின்றது.

*"பிராமணக் கோயில்களை (இந்துக் கோயில்களை) இடித்த பின்னர் தில்லை வனங்களில் மூன்று (புத்த) விகாரைகளைக் கட்டினான் அவை கோகர்ணம், ஏரகாவில்லை, கலந்த ஆகியனவாகும். கோகர்ணம் என்ற ஊரில் கோகர்ண விகாரையும், ஏரகாவில்லை என்ற கிராமத்துக்கு அருகில் ஏரகாவில்லை விகாரையும், பிராமணக் கிராமத்துக்கு அருகே கலந்த விகாரையையும் உருவாக்கினான். இந்த மூன்று இடங்களிலும் முன்பு (இந்துக்) கடவுளுக்கான வழிபாட்டிடங்கள் கட்டப்பட்டிருந்தன. இவை பௌத்த சாசனத்திற்குத் தடையாக இருந்தன. அத்துடன் தவறான மத நம்பிக்கையுடையோரின் வழிபாட்டு இடங்களாகவும் இருந்தன. இதனால் இந்த (இந்து) வழிபாட்டுத் தலங்களை இடித்து புத்த பிக்குகளுக்காக புத்த விகாரைகளைக் கட்டினான். கிழக்குக் கரையில் கோகர்ண விகாரை கட்டப்பட்டது. மற்றைய இரு விகாரைகளும் ரோகணத்தில் கட்டப்பட்டன. இவ்வாறு மத நம்பிக்கையற்றவர்களின் சிவலிங்கம் போன்ற வழிபாட்டுச் சின்னங்களை அழித்து இலங்கைத் தீவின் எல்லாப் பகுதிகளிலும் புத்த மதத்தைப் பரப்பினான்"* (7).

எனவே மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்ட செய்திகளின் பிரகாரம் மகாசேனன் காலத்தில் கி.பி 302 இல் திருகோணமலையில் புகழ்வாய்ந்த சிவாலயம் இருந்திருக்கின்றது. மகாசேனன் ஆட்சிக் காலத்தில் இலங்கையின் கிழக்குப் பகுதியில் திருகோணமலையிலும், யாழ்ப்பாணத்தின் வேறு இடங்களிலும் சைவ ஆலயங்கள் நிலை பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது. மகாசேனன் கோணேசர் ஆலயத்தை அழித்தபோதும் சைவர்கள் மீண்டும் குறுகிய காலத்தில் அவ்விடத்தில் மீண்டும் தங்கள் ஆலயத்தை அமைத்தனர் என்று கணிப்பதற்கு ஆதாரமாக என்ற பாளி நூலிலே கிடைக்கும் சில



தகவல்கள் உதவுகின்றன. அது மட்டுமல்லாது அநுராதபுரத்திலிருந்து ஆட்சி நடத்திய சில பௌத்த மன்னர்களே இந்த ஆலயத்துடன் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்தனர் என்பதையும் அறிய முடிகின்றது.(8) மகாசேனன் இந்து மத ஆலயமான கோணேசர் ஆலயத்தை மட்டுமல்ல. தேரவாத பௌத்தப் ஆலயங்களையும், மடங்களையும் அழித்திருக்கின்றான். திருக்கோணேஸ்வரம் மீதான மகாசேனனின் தாக்குதல் இந்து-பௌத்த தத்துவார்த்த முரண்பாடுகளினால் ஏற்பட்டது. அதே போன்றே மகாயான பௌத்தனான மகாசேனன் தேரவாத பௌத்த பள்ளிகளையும், குருமார்களையும் தாக்கியதற்கு பௌத்த மதத்திற்குள் ஏற்பட்ட தத்துவார்த்த முரண்பாடுகளே காரணமாகும்.

தென் இந்தியாவில் கி.பி 5ம் நூற்றாண்டளவில் எழுதப்பட்ட வாயு புராணத்தில் திருக்கோணேஸ்வரம் குறித்து சொல்லப்படுவதன் மூலம் இலங்கைத் தீவுக்கு வெளியேயும் அதன் புகழ் பரவியிருந்திருக்கின்றது. மகாவம்சத்தில் கூறப்படுவது போன்று மகாசேனன் காலத்தில் கோணேசர் ஆலயம் பெரும் புகழுடன் விளங்கியிருந்ததை ஏற்க முடிகின்றது. தகவற் பரிமாற்றம் மிகக் குறைந்த கி.பி. 5ம் நூற்றாண்டளவில் தென் இந்தியாவில் திருக்கோணேஸ்வரத்தின் புகழ் பரவியிருந்ததை அறியும் ஒருவர், திருக்கோணேஸ்வரத்தின் தோற்றம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலகட்டத்தில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் என்ற முடிவுக்கு வருவது இயல்பானதே. மேலும் மகாவம்சத்திலும், அதன் உரை நூலான மகாவம்ச தீகாவிலும் கோகர்ணச் சிவாலயம் என அழைக்கப்படும் கோணேஸ்வரம் பௌத்த மதப் பரம்பலுக்குத் தடையாக இருந்தது என்பதை தெளிவாக ஏற்க முடிகின்ற போது, கோணேஸ்வரத்தின் தோற்றக் காலத்தை கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து தேடுவதே சிறந்தது. இதற்கு இன்னுமொரு முக்கிய காரணம் உண்டு. விஜயனுக்குப் பின் அரச உரிமையை பெற வாரிசு இல்லாத நிலையில், தனக்குப் பின்னர் அரசுரிமையை ஏற்க ஒருவரை அனுப்பும்படி விஜயன் தனது தம்பி சுமித்திரனுக்கும் கடிதம் அனுப்பினான். விஜயனின் கோரிக்கையை ஏற்றுக் கொண்ட சுமித்திரன் தனது மகனான பாண்டு வாசுதேவனை இலங்கைக்கு அனுப்பிவைத்தான். பாண்டு வாசுதேவன் 32 மந்திரி குமாரருடன் துறவி வேடம் அணிந்து திருகோணமலை வழியாக இலங்கையை வந்தடைந்தான் என மகாவம்சம் கூறுகின்றது. சில காலத்திற்குப் பின்னர் இவர்களைத் தொடர்ந்து பாண்டு வாசுதேவனையும், மந்திரி குமாரர்களையும் திருமணம் செய்து கொள்ள சாக்கிய வம்சத்து பத்தகாஞ்சனா என்ற இளவரசியும், அவளது தோழிகளும் மாறு வேடத்தில் திருகோணமலைத் துறைமுகம் வழியாக வந்தார்கள் என மகாவம்சம் கூறுகின்றது.(9) மகாவம்சம் கூறும் செய்தி உண்மையாயின் பௌத்த மதத்திற்கு எதிரான வழிபாடு மற்றும் பண்புகளைக் கொண்டிருந்த மக்களே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையில் வாழ்ந்திருக்கின்றார்கள் என்பது உறுதியாகின்றது. கி.மு 3 ம் நூற்றாண்டளவில் பௌத்த-இந்து மத மோதல் உச்ச நிலையில் இருந்தது. பாண்டு வாசுதேவனும் தோழர்களும் துறவி வேடமணிந்து திருகோணமலைத் துறைமுகம் வழியாக வந்திருப்பதனால் திருகோணமலைப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள் இந்துக்களாகவே இருந்திருக்கின்றார்கள் என்பதை ஏற்கலாம். கி.மு.3--- கி.மு.4ம் நூற்றாண்டு காலப்பகுதியில் திருகோணமலையில் பகுதியில் இந்துக்கள் வலிமையுடன் வாழ்ந்திருந்தால் ஆலய வழிபாடும் உன்னதம் பெற்றிருக்கவேண்டும். கி.பி 3ம் நூற்றாண்டு காலப் பகுதியில் மகாசேனனால் அழிக்கப்பட்ட திருக்கோணேஸ்வரத்தின் தோற்றம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் உருவாகியிருக்க வேண்டும். எனவே கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால சமுதாயமாகக் கருதப்படும் இயக்கர், நாகர் வழிபாடு குறித்து விபரமாக ஆராயப்பட வேண்டும்.

## இயக்கர்-நாகர் வழிபாடுகள்

கிறிஸ்துவுக்கு முற்பட்ட கால இலங்கை மக்களின் மத வழிபாட்டு வழக்கத்தை ஆராய முற்படுகின்ற வேளை, ஆதிக் குடிகளான இயக்கர், நாகர் என்பவர்களுடைய வாழ்வியலில் இருந்து ஆரம்பிப்பதே பொருத்தமானதாகும். கி.மு 483 இல் விஜயனின் வருகைக்கு முன்னரேயே ஓரளவு நாகரீகமடைந்த மக்கள் இலங்கையில் வாழ்ந்திருக்கின்றார்கள்.(10) இதைப் பௌத்த பாளி நூலான மகாவம்சமும் ஏற்றுக் கொள்ளுகின்றது. இயக்கர்களும் நாகர்களும் இயற்கை வழிபாட்டைப் பின்பற்றியிருந்தார்கள். இயக்கர்கள் மர வழிபாட்டையும், நாகர்கள் நாக வழிபாட்டையும் சிறப்பாகக் கொண்டிருந்தனர். பௌத்த மதம் இலங்கைக்கு அறிமுகம் செய்யப்படுவதற்கு முன்னரேயே மரவழிபாடு, சிவலிங்க வழிபாடு, சைவம் பின்பற்றப்பட்டிருக்கின்றது.(11)

கோணேசர் ஆலயத் தோற்றக் காலம் குறித்த கணிப்பீடுகள் காலத்திற்கு காலம் வரலாற்று ஆய்வாளர்களினாலும், ஆர்வலர்களினாலும் வெளியிடப்படுகின்றன. இக் கணிப்பீடுகள் அனைத்துமே சாசனச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு நிறுவப்பட்டதல்ல. சில கணிப்பீடுகள் பிற்காலத்தில் எழுதப்பட்ட வரலாற்று இலக்கியங்களை ஆதாரமாகக் கொள்வதில் இருக்க வேண்டிய எச்சரிக்கை இல்லாமல் வழங்கப்பட்ட கணிப்பீடுகளாகும். கோகர்ணத்தில் பிராமணக் கோயிலை மகாசேனன் அழித்தான் என்ற மகாவம்சச் செய்தியைப் பரணவிதானை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்தால் கோணேசர் ஆலயம் மகாசேனன் காலத்திற்கு முந்தியது என்ற முடிவுக்கு வரவேண்டியிருந்தது. கோணேசர் ஆலயத்தின் தோற்றக் காலத்தை ஒரு தெளிவான சாசனத்தால், உறுதிப்படுத்த முடியாத நிலை



காணப்படுவதால், மகாசேனன் காலத்திற்கு முந்திய திருகோணமலை ஆதிக் குடிகளின் பண்பாடு, மத நம்பிக்கை குறித்த தேடுதல் அவசியமாகின்றது. குறிப்பாகத் திருகோணமலைச் சமூகத்தின் ஆரம்ப வரலாற்றுப் பின்னணியை ஆராய்வதன் மூலம் சில முடிவுகளுக்கு வர முடியும். இலங்கையின் பல பாகங்களில் நடத்தப்பட்ட அகழ்வாய்வுகள் ஆதிக் குடிகள் பற்றிய தகவல்களைத் தருகின்றது. குறிப்பாகப் புத்தளம் மாவட்டத்திலுள்ள பொம்பரிப்பு (பொன்னரிப்பு) திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி, கொட்டியாரம் பகுதிகளில் கிடைத்த தொல்லியற் தடயங்கள் தமிழகத்தில் திருநெல்வேலி உள்ளிட்ட தென் இந்திய நகர்களில் அடையாளங் காணப்பட்ட பெருங் கற்காலக் கலாச்சாரத்தோடு நேரடித் தொடர்பு கொண்டுள்ளதை அறிய முடிகின்றது.

தென் இந்திய திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றுக்குத் தென்புறமான ஆதிச்ச நல்லூரில் கிடைத்த ஈமைச் சடங்கு முறைகளை திராவிடப் பண்பாடாக அடையாளங் காணப்படுவதால், குச்சவெளி, கொட்டியாரம் என்பனவும் திராவிடர்களின் ஆரம்ப வாழிடம் எனக் கொள்ள முடிகிறது. இலங்கையில் பொம்பரிப்பு (பொன்னரிப்பு) குச்சவெளி, கொட்டியாரம் பண்பாடு கி.மு 1000 வருடங்களுக்கு முற்பட்டதாகக் கருத முடிகின்றது. தென்னிந்திய பெருங்கற்காலப் பண்பாட்டுக்குரிய இந்த திராவிட மொழி பேசுகின்ற மக்கள் தமிழ் எழுத்து வடிவத்தையும், இந்து மத வழிபாட்டையும் இலங்கைத் தீவுக்குள் கொண்டு வந்தார்கள்.(12) மிகப் புகழ்வாய்ந்த கிரேக்க நாடுகாண் பயணி தொலமி (Ptolemy) தனது பயணக் குறிப்பேட்டில் கி.மு 1000 இலங்கையில் வாழ்ந்த இயக்கர்கள், தேவதைகளையும், நாகர்கள் நாகத்தையும் வழிபட்டதாகக் குறிப்பிட்டுள்ளார். கிறிஸ்துவுக்குப் பிற்பட்ட 5ம் நூற்றாண்டைச் சேர்ந்த பாஹியான் என்பவரும்.கி.பி 7ம் நூற்றாண்டைச் சேர்ந்த யுவான் சுவாங் என்பவரும் ஆதிக் குடிகள் குறித்துக் கருத்துக்களைக் கூறியுள்ளார்கள். இயக்க வழிபாடும், நாக வழிபாடும் இயற்கை வழிபாட்டின் இரு வகை அம்சக்கூறுகளே. பௌத்த பாளி நூலான மகாவம்சம் புத்தர் ஈழத்திற்கு இரண்டாவது தடவை வருகை தந்தபோது நாக அரசர்களான மகோதரா, குலோதரா என்பவர்கள் இரத்தினமிழைத்த சிங்காசனத்திற்காகப் போரிட முனைந்த போது ஏற்பட்ட முரண்பாடுகளைத் தீர்த்துச் சமரம் செய்து வைத்ததாக கூறுகின்றது.(13) மேலும் பல நாகர்களை பௌத்தர்களாகவும் மதமாற்றம் செய்தார் எனக் குறிப்பிடப்படுகின்றது. இது குறித்து மணிமேகலையிலும் குறிப்புக்கள் உண்டு. இரு நாக அரசர்களின் முரண்பாடுகள் தீர்க்கப்பட்டதன் பின்னர் மேலும் பல தமிழ் இந்துக்கள் பௌத்தர்களாக மாறினார்கள். இதைக் கந்தரோடை அகழ்வுகள் தெளிவுபடுத்துகின்றன.(14) இந்த மாற்றம் தென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலும் ஏற்பட்டது. நாகர்கள் நாக வழிபாட்டை உடையவர்களாகக் கருதப்படுகின்றார்கள். இந்த நாகவழிபாடு இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே காணப்பட்ட பண்பாட்டுத் தொடர்பின் ஒரு அம்சமாகும். பொதுவாக நாடுகளுக்கிடையே முதலில் ஏற்படும் வணிகத் தொடர்பே பின்பு பண்பாட்டுத் தொடர்பு ஏற்படுவதற்கு காரணமாயிருக்கின்றது. பெருங் கற்காலச் சமூகத்தின் ஈமத் தாழிகளில் கண்டறியப்பட்ட பெரிய சுறாக்களின் எலும்புகள் இந்த மக்கள் ஆழ் கடலோடுவதில் வல்லமை பெற்றிருந்ததைக் காட்டுவதால், பெருங்கற்கால கால கட்டத்தில் இலங்கை - இந்தியக் கடற் தொடர்பு ஏற்பட்டதில் வியப்பில்லை. இந்திய இலங்கை குடி நகர்வுகளும், வணிகமும் இரு நாடுகளுக்கிடையிலான மதப் பண்பாட்டுத் தொடர்புக்கு வழிகோலின எனக் கொள்வதே பொருத்தமானதாகும். இயற்கை வழிபாட்டின் கூறுகளான மர வழிபாடுகள், நாக வழிபாடுகள் போன்றன ஆதிக் குடிகளிடையே உலகின் பல பாகங்களில் காணப்பட்டிருக்கின்றது. வட இந்தியப் பிரதேசத்திற்குரிய நாலாந்து, நாகபுரி, தென் இந்திய நகரான நாகர்கோவில் என்பன நாகர்களின் இருப்பிடங்களைச் சுட்டி நிற்கின்றன. மாமல்லபுரத்தில் அர்ச்சுனன் தவம் என்ற பெரும் கற்பாறை உள்ளது. அதன் நடுவே உள்ள பிளவில் நாகர்களைக் குறிக்கும் சிற்பங்கள் உள்ளது. இதை நாக வழிபாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட சிலைகளாகக் கருதப்படுகின்றது.(15)

திருகோணமலைக் கரையில் நடைபெற்றதாகச் சூளவம்சம் கூறும் ஒரு இதிகாசக் கதை மூலம் இப் பகுதியில் நாக வழிபாடு நிலவியதாகக் கொள்ளலாம். சூளவம்சம் கூறும் இந்த இதிகாசக் கதையின் நம்பகத் தன்மை குறித்த வினா எழுவது இயல்பானதே. ஆனாலும் சூளவம்சம் தொகுக்கப்பட்டதாகக் கருதப்படும் காலகட்டத்திலாவது திருகோணமலையில் நாக வழிபாடு தொடர்பான எண்ணங்களும் செயல்களும் இருந்திருக்கின்றது எனக் கருதுவது ஏற்கத்தக்கதே. வரலாற்று ஆய்வாளர்கள் மற்றும்தர், பாஸ்தர் ஆகிய இருவரும், இயக்கர், நாகர் என இதிகாசங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இலங்கைப் பூர்வீக குடிகள் தற்போது கிழக்கு மாகாணத்திலுள்ள திராவிடருக்கு முற்பட்ட பூர்வீக குடிகளான வேடர்களின் சந்ததியினராக இருக்கலாம் எனக் கூறியுள்ளனர் என்பது கவனிக்கத்தக்கது. இதன் மூலம் திருகோணமலையில் ஆதிக் குடிகளிடத்து நாக வழிபாடு பின்பற்றப்பட்டிருக்கிறது என்ற முடிவுக்கு வருவது சரியானதே. இந்திய தொல் இலக்கியங்களில் மட்டுமன்றி, கிரேக்க, எகிப்திய இலக்கியங்களிலும் பாம்புகள் (நாகம்) அரைப்பங்கு தெய்வத்தன்மை பொருந்தியதாகக் கருதப்பட்டது. அதர்வ வேதங்களிலும் நாகங்கள் தெய்வ நிலையைச் சார்ந்தன என்ற கருத்துக்கள் உள்ளன. சிந்துவெளி அகழ்வு மூலம் கிடைத்த இலச்சினைகளில் யோகி நிலையில் இருக்கும் ஒரு உருவத்திற்கு அருகே பக்தி நிலையில் ஒரு பாம்பு இருப்பதைக் காண முடிகின்றது.



மேற் கூறப்படும் விடயங்களை ஆராய்கின்றபோது சிவ வழிபாட்டிற்கும் நாக வழிபாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருந்தது என்பதை ஏற்கமுடிகின்றது. மேலும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலகட்டத்தில் இலங்கையில் இந்து மதம் பரவலாகப் பின்பற்றப்பட்டது என்பதை உறுதிப்படுத்த இலங்கைத் தொல்பொருள் சாசனங்கள் உதவுகின்றன. இந்தச் சாசனங்கள் பிராமணர்கள் பௌத்த மகாசங்கத்திற்கு அளித்த குகைத் தானங்களைக் குறிப்பிடுவதோடு, பிராமணர்கள் இலங்கையில் பரவலாக வாழ்ந்திருக்கின்றார்கள் என்ற செய்தியையும் உறுதிப்படுத்துகின்றது. இலங்கைத் தொல்பொருள் இலாகாவின் உத்தியோக பூர்வச் சாசனப் பதிவு இலக்கங்களையே பின்வரும் சாசன இலக்கங்கள் குறிக்கின்றன. சாசன இலக்கம் 228 மகா அலகமுவ (அநுராதபுரம்), சாசன இலக்கம் 545 கோங்கல (அம்பாறை), சாசன இலக்கம் 812 மொரகொட (கண்டி), சாசன இலக்கம் 1003 எலெவறுவ (குருநாகல்) சாசன இலக்கம் 1060 பிச்சாண்டியாவ (புத்தளம்). மேற்படி குகைத் தானங்களை ஏன் பிராமணர்கள் செய்தார்கள் என்ற வினாவிற்கு விடையளிக்கப் போதிய வரலாற்று ஆதாரங்கள் கிடைக்கவில்லை. ஆயினும், உதாரணங்களாக எடுத்துக்காட்டப்பட்ட இலங்கைத் தொல்பொருள் இலாகாவின் சாசனங்கள் மூலம் வட கிழக்கிற்கு வெளியேயும் பிராமணர்கள் பரவலாக வாழ்ந்திருக்கின்றார்கள் என்பதோடு, இந்துக்களின் மத வழிபாடும் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் செறிவாகப் பின்பற்றப்பட்டிருக்கின்றது என்பதை அறிய முடிகின்றது.

புத்தர் இலங்கைக்கு வருவதற்கு முன்னர் சிங்களவர் இந்து மதக் கடவுளையே வணங்கியிருந்தார்கள்.(16) பிராமிக் கல்வெட்டுக்களில் காணப்படும் இந்துமதப் பெயர்கள் இந்த நாட்டில் பௌத்தம் பரவ முன்னர் இந்துமதம் வழிபாட்டிற்குரியதாக விளங்கியது.(17) மேலும், பண்டுகாபயன் சிவாலயத்தை அமைத்தான் என அறிய முடிகின்றது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட 3ம் நூற்றாண்டிலிருந்து கிடைக்கப்பெற்ற பல சாசனங்களில் சிவ என்ற பெயர்த் தொடர்புடைய பல பெயர்கள் காணப்படுகின்றன.(18) இத்தகைய குகைச் சாசனங்கள் இலங்கை எங்கும் பரந்து காணப்படுகின்றன என்பதுவே இங்கு முக்கியமான அம்சமாகும். இலங்கை வரலாற்றில் முக்கியம் பெறும் தேவநம்பியதீசனின் தந்தையின் பெயர் முட்ட சிவ, பண்டுகாபயனின் தாய் மாமன் பெயர் கரிகந்த சிவ என்பதாகும். சிவ என்ற பெயர்த் தொடர்புகளும், சிவ என்ற பெயருடன் தொடர்பான பல குகைத் தான சாசனங்கள் மூலம் கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இலங்கையில் சிவவழிபாடு நிலவியது என்பதை ஏற்கலாம் எனப் பரணவிதான கூறுகின்றார். (19)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோணேஸ்வரத்தின் தோற்றக் காலம்

இதுவரை திருக்கோணேஸ்வரத்தின் தோற்றக்காலத்தை நிர்ணயம் செய்ய முனைந்த பல வரலாற்றுத்துறை ஆசிரியர்களின் கருத்துகளும் இங்கு அவசியமாகின்றது. கவிராஜவரோதயரின் பாடலின் பிரகாரம் கி.மு 1589 இல் கோணேசர் ஆலயம் தோற்றம் பெற்றதாக அறிய முடிகின்றது. இலங்கைத் தொல்பொருளியற் துறைத் தலைவராக இருந்த பேராசிரியர் செனரத் பரணவிதான திருக்கோணேஸ்வரம் அநேகமாக மகாசேனன் (கி.பி 302) காலத்திற்கு முந்திய காலகட்டத்தில் கட்டப்பட்டதாகக் கூறுகின்றார் (20) பி.ஈ.பீரிஸ் அவர்கள் விஜயனின் வருகைக்கு (கி.மு 483) அதிக காலத்திற்கு முன்னரே உருவாக்கப்பட்டது எனக் கருத்து தெரிவித்துள்ளார் (21) சிங்கள வரலாற்றாசிரியரான பவுல் பீரிசின் கருத்துப்படி நாகரின் வழிவந்தோர் இலங்கையின் வடக்கு, வட மேற்கு, வட கிழக்குப் பகுதிகளில் ஈஸ்வரனுக்குரிய ஐந்து ஆலயங்களைக் கட்டினார்கள், இதில் திருகோணமலையில் அமைக்கப்பட்ட கோணேஸ்வரமும் உள்ளடங்குகின்றது.(22) சிவர் அவர்களின் கருத்துப்படி கி.மு 1589 கோணேஸ்வரம் தோற்றம் பெற்றதாகக் கருதுகின்றார்.(23) கலாநிதி செ.குணசிங்கம் அவர்கள் திருக்கோணேஸ்வரம் ஆகக்குறைந்தது கிறிஸ்துவிற்கு முற்பட்ட ஆறாம் நூற்றாண்டுக்கும், முதலாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் தோற்றம் பெற்றிருக்க வேண்டும் எனக் கருதுகின்றார். (24) வெட்ரிங்டன் 1927 இல் வெளியிட்ட தனது ஆய்வில் கோணேசர் ஆலயம் கி.மு 2590 இல் உருவாக்கப்பட்டதாக குறிப்பிடுகின்றார்.(25) கி.மு 6ம் நூற்றாண்டிற்கு முன்னரே வழக்கத்திலிருந்த நாகவழிபாடும் இந்து மத வழிபாடும் இலங்கையில் பின்பற்றப்பட்டது என்ற கருத்தை நிறுவ முடிகின்ற காரணத்தால் இந்து மதக் கடவுளுக்கான ஆலயமும் கி.மு. காலத்திற்கு முன்பாகவே அமைக்கப்பட்டிருக்க வேண்டும்.

வரலாற்று ஆய்வாளர் பீரிஸின் கருத்துப்படி நகுலேஸ்வரம், முனீஸ்வரம், கேதீஸ்வரம், தொண்டேஸ்வரம், திருக்கோணேஸ்வரம் என்பன அனைத்தும் சிவ வழிபாட்டுத் தலங்களாக இருப்பதோடு இலங்கையின் வட, வட மேற்கு, வட கிழக்குப் பிராந்திய முறையாக நகரங்களில் காணப்படுவதால், தென் இந்திய பண்பாட்டுத் தொடர்பை வெளிப்படுத்தி இந்த ஆலயங்கள் அனைத்தும் விஜயனின் வருகைக்கு நீண்ட காலத்திற்கு முன்பு தோற்றம் பெற்றவை.(26) மேற்கூறப்பட்ட முடிவுகளையும், காரணங்களையும் தொகுத்து நோக்குமிடத்து, கிழக்கிலங்கையில் குறிப்பாகத் திருகோணமலையில் இந்து மதத்துடன் தொடர்புடைய நாக வழிபாடும் சிவ வழிபாடும் விஜயனின் வருகைக்கு முன்பாக (கி.மு 5) பின்பற்றப்பட்டிருக்கின்றது. எனவே திருக்கோணேஸ்வரத்தின் தோற்றக்காலம் கி.மு 5ம்



நூற்றாண்டுக் காலத்திற்கு உரியது என ஏற்பது பொருத்தமானதாகும். ஒரு முழுமையான ஆய்வு திருக்கோணேஸ்வரப் பகுதியில் நடத்தப்பட்டு, அகழ்வுப் பொருட்களைக் கரிம ஆய்வுக்கு உட்படுத்தினால் கோணேசர் ஆலயத் தோற்றக் காலத்தை அறிவியல் அடிப்படையில் உறுதி செய்யமுடியும். இந்த ஆய்வுக்கு வரலாற்று அறிவுடன் [illegible] காலநிலை குறித்த சிறப்பான அறிவு மிக அவசியமானதாகும்.

### அடிக்குறிப்புகளும் விளக்கங்களும்


1. செ. குணசிங்கம், கோணேஸ்வரம் பக் 3

2. Ananda Guruge, The Society of the Ramayana pp 69

3. Jawahrlal Nehru , Glimpses of World History

4. [illegible] பக் 40

5. [illegible], 1981.

6. [illegible] பக் 15-16

[illegible]

7. Vasantjappakasani, 2 xxxvii 15-25.

8. [illegible] 1981 பக் 38.

9. [illegible], 7-12, 18-24

10. Parker H Ancient Ceylon, London 1909 )

11. Paranavitana.S, Pre –Buddhist Religious Beliefs in Ceylon pp 302 –325.

12. Chelvadurai Manogaran, The Untold Story of Ancient Tamils in Sri Lanka, 2000, Professor of Geography and International Studies at the University of Wisconsin Parkside, USA, Consultant of the U S Department of State.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. மகாவம்சம் அதிகாரம் 1.

14. Chelvadurai Manogaran, மேலது.

15. [illegible] தமிழ்நாட்டுக் கலைக் கோவில்கள் பக் 104-105.

16 Cave,H, Golden Tips.. Ceylon pp 407 –412 ( 1900 )

17. [illegible] பக் 18-20.

18. கலாநிதி குணசிங்கம். செ. மேலது பக் 27 – 31.

19. Paranavitana. S, Pre- Budhist Religious Beliefs in Ceylon PP 326-327.

20. Paranavitan .S. Fragmentary Sanskrit Inscription from Trincomalee.

21. Pieris,Paul.E., 1913, Ceylon- Portuguese era vol 1 pp 205-206.

22. Pieris.E.Paul, Nagadipa and Buddhist Remain in Jaffna, Journal of Royal Asiatic Society(Ceylon Branch).Vol 28,pp 17-18

23. Sir,H.C Ceylon and cingalese pp 78-80 ( 1850 )

24. குணசிங்கம் .செ, மேலது பக் 36.

25. Codrington, H.W., Jour .Ras ( Ceylon ) Vol xxx pp 448 – 451 No. 80 of 1927.

26. Paul E.Pieris, மேலது



**5**

# தென்னிந்திய அரசுகளின் எழுச்சிக் காலம்

16ம் நூற்றாண்டுக்கு முந்திய இலங்கை வரலாற்றின் போக்குகளைத் தென்னிந்திய அரசுகளே பெருமளவுக்குத் தீர்மானித்திருக்கின்றன. தென்னிந்திய நிலப்பரப்பில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களின் நேரடிப் பாதிப்புக்களை இலங்கை வரலாற்றில் தெளிவாகக் காணலாம்.

வரலாற்றில் பல தடவைகள் திருகோணமலை உட்பட இலங்கையின் ஏனைய பகுதிகள் தமிழக அரசுகளின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்பட்டது. குறிப்பாகத் திருகோணமலை மீது தமிழக அரசுகள் அரசியல் ஆதிக்கம் செலுத்துவதற்கு புவிசார் கேந்திர அமைப்பே அடிப்படைக் காரணமாகக் கருதுகின்ற போதும் ஒரே பண்பாடுடைய மக்கள் பாக்குத் தொடுகடலுக்கு இரு மருங்கிலும் வாழ்ந்திருப்பதே மிக முக்கியமான காரணமாகும். இதுவே தமிழக அரசுகளின் எழுச்சி இலங்கை மீது அரசியல் ஆதிக்கத்தை உருவாக்கியது. பல்லவர், பாண்டியர் போலல்லாது சோழர்களது எழுச்சி மிகப் பலமாக உருவாகியது. சோழர்களின் எழுச்சிக்குத் திருகோணமலைத் துறைமுகம் தவிர்க்க முடியாத ஒரு தேவையாக இருந்தது. குறிப்பாகத் தமிழகத்தில் பல்லவர் ஆட்சியும், சோழ அரசின் எழுச்சியும், வீழ்ச்சியும் திருகோணமலையின் வரலாற்றை நேரடியாகப் பாதித்திருக்கின்றது. பூகோளரீதியாக தென் இந்தியப் பிராந்தியத்தை நெருங்கி இலங்கை காணப்படுவதும், தமிழக வணிகர்களுக்குத் தென் இந்திய கடல் எல்லைக்கு அப்பால் பயனுள்ள துறைமுகமாக திருகோணமலை விளங்குவதும் அடிப்படைக் காரணமாகியது.

கோணேஸ்வரமும், திருகோணமலைத் துறைமுகமும் தமிழக அரசர்களின் அதிக கவனத்தை ஈர்த்திருந்தது. திருகோணமலை மாவட்டத்தில் கிடைத்த பல கல்வெட்டுக்கள் உறுதி செய்கின்றன. இலங்கையின் ஏனைய மாவட்டங்களில் கிடைத்த பல்லவ, சோழக் கல்வெட்டுக்களைவிடத் திருகோணமலையில் கிடைத்த கல்வெட்டுக்களின் எண்ணிக்கையில் மிக அதிகமாகும். எனவே திருகோணமலையின் ஆரம்ப கால வரலாற்றினைத் தமிழக வரலாற்றிலிருந்து பிரித்துப் பார்க்க முடியாது. குறிப்பாகச் சோழர்கள் இலங்கையைப் போரில் தோற்கடித்து பொலநறுவையைத் தலைநகராகக் கொண்டிருந்தபோதும் திருகோணமலையைத் தமது வணிகத் துறைமுக நகராக வைத்திருக்க விரும்பியதில் ஆச்சரியம் எதுவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை. இதற்கான தேவை என்ன என்பதை அறிய தமிழக வரலாற்றுப் பின்னணியின் அறிவு மிக அவசியமானதாகும். அத்துடன் தமிழகத்தில் நிலவிய சமூகப் பின்னணிகளையும், அதற்கான வரலாற்றுக் காரணங்களையும் நன்கு புரிந்து கொண்டால்தான் இலங்கையில் தமிழக ஆட்சியாளர்களினால் திருகோணமலையில் உருவாக்கப்பட்ட சமூக அமைப்பை அறிந்துகொள்ள முடியும். குறிப்பாகக் கோணேசர் கல்வெட்டில் கூறப்பட்ட கோட்டைகள் கூறப்பட்ட செய்திகளையும் நன்கு விளங்கிக் கொள்ள முடியும்.

## தமிழக அரசுகளின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழக நிலப்பகுதியில் மனித இனம் சுமார் இரண்டு இலட்சம் ஆண்டு காலத்திற்கு முன்னர் வாழ்ந்ததாக தொல்பொருள் தடய ஆவணங்கள் உறுதி செய்தபோதிலும் அரசுகளின் தோற்றம் சங்ககாலச் சமுதாயத்தையொட்டி கி.மு 400 ஆண்டுகாலப் பகுதிகளில் தான் உருவாகியதாகக் கருதப்படுகின்றது. சங்க காலச் சமூகத்திற்கு முந்திய தமிழ் சமூக அமைப்பில் இனக் குழுக்களே ஆட்சி செய்தன. குழுக்களாக வாழ்ந்த மக்கள் மலைகளையும், காடுகளையும் சார்ந்து வாழ்ந்ததால், பொதுவாகக் குறிஞ்சி, முல்லைப் பண்புகளே அதிகம் காணப்பட்டதாக வரலாற்று ஆசிரியர்கள் கருதுகின்றனர். இரும்புப் பயன்பாடே மருதநில நாகரீகத்திற்கு வழிகோலியது. இரும்பின் பயன்பாட்டால் புதிய உற்பத்திக் கருவிகள் உருவாகின. இது விவசாயத்தில் உபரி உற்பத்தியைத் தோற்றுவித்தது. உபரி உற்பத்தி என்பது தேவைக்கு அதிகமான விளைச்சல் எனப் பொருள் படும். வேளாண்மைக்குத் தேவையான உழைப்புக் கருவிகள் வளர்ச்சியடையத் தானிய விளைச்சலும் அதிகரித்தது. வேளாண்மை உற்பத்தியில் கிடைத்த உபரி உற்பத்தி சொத்தாக மாறத் தொடங்கியபோது உடமை வர்க்கம், உடமையற்ற வர்க்கம் என வர்க்க வேறுபாடுகள் உருவாகின. நிலம் அடிப்படையாக இருந்த போதிலும் சொத்துடமையே இங்கு உடமை வர்க்கம் தோன்றக் காரணமாகியது.

உபரி உற்பத்தி விவசாயத்துடன் தொடர்புடைய சிறு கைத் தொழில்களும், வணிகமும் வளரத் தூண்டியது. இதுவரை அடையாளம் காணப்பட்ட இனக் குழு அல்லது குலச் சமுதாயம் மாறுபட்டு உபரி உற்பத்தி காரணமாக தனியுடைமைகளும் உடமை வர்க்கங்களும் தோன்றின. தனியுடைமையானது குலங்களுக்குள் இருந்த வலிமை வாய்ந்தவனைக் குலத் தலைவனாக்கியது.



கி. மு 400 ஆண்டுகளில் சங்க காலச் சமுதாயத்தில் குல மோதல்கள் இறுதிக் கட்டத்தை அடைந்தன. அடிக்கடி நிகழ்ந்த போர் காரணமாக வீரம் இலக்கியங்களின் கருப் பொருளாகியது. இதனால் தான் பேராசிரியர் கைலாசபதி சங்ககாலத்தை வீரயுகம் என அழைத்தார். இதுவரை காணப்பட்ட இரத்த உறவுடன் கூடிய குழு முறை ஆட்சி நீங்கி நிலப் பரப்பை அடிப்படையாகக் கொண்ட சிறு சிறு ஆட்சிகள் தோன்றின. இதற்குச் சொத்துடைமையே அடிப்படையாக இருந்தது

சங்க இலக்கியத்தில் பேசப்பட்ட பாரி, ஓரி, பேகன், ஆய், காரி, அதியமான் உள்ளிட்ட 112 ஆட்சியாளர்களும் குறுநில மன்னர்களே. சில சிற்றரசுகளுக்குத் தலைமை வகித்த ஒருவன் தன்னைப் பேரரசனாக கூறிக்கொண்ட போதும் தோற்கடிக்கப்பட்ட சிற்றரசுகளைத் தனது அரசுடன் இணைத்து ஒரு பலம் வாய்ந்த பேரரசை உருவாக்க முயலவில்லை. ஐரோப்பிய வரலாறுகளில் அறியப்படும் பேரரசைப் போன்ற பலம் வாய்ந்த ஒரு மைய அரசை உருவாக்கத் தமிழ் மன்னர்கள் விரும்பவில்லை. மாறாகக், கப்பம் அல்லது திறை பெறுவதன் மூலம் தமது மேலாண்மையை உறுதிப் படுத்த விரும்பினார்கள். தமிழ் மன்னர்களின் இந்தப் பலவீனமான போக்குத்தான் 12ம் நூற்றாண்டில் சோழமரபும், அதன் பின்னர் வந்த ஐரோப்பிய காலனித்துவ சக்திகளும் தமிழகத்தில் ஆட்சியைக் கைப்பற்ற இடமளித்தது. பின்னர் இலங்கைத் தமிழ் இராச்சியங்களின் வீழ்ச்சிக்கும் அடிப்படைக் காரணமாகியது. இலங்கையிலும் ஒரு பலமான பரந்துபட்ட தமிழ் இராச்சியம் உருவாகத் தடையாக இருந்தது.

## பல்லவர் ஆட்சியின் தோற்றம்

சங்க கால குறுநில மன்னர்களுடைய ஆட்சி தளர்ச்சியடைய கி.பி 3ம் நூற்றாண்டில் சேர, சோழ, பாண்டிய அரசுகள் தோற்றம் பெற்றன. கி.பி 5ம் நூற்றாண்டு வரை தமிழகத்தில் சேர, சோழ, பாண்டியர்களும், களப்பிரர்களும் ஆட்சி செய்தனர். கி.பி 4ம் 5ம் நூற்றாண்டுகளில் தான் தமிழகத்தில் மருத நில நாகரீகம் செழித் தோங்கத் தொடங்கியது. விவசாயமும், கைத்தொழிலும் வளர்ச்சியடையத் தொடங்கின. உள்நாட்டு உற்பத்தியும், வெளிநாட்டு வணிகமும் பெருகத் தொடங்கின. பெருகி வந்த உற்பத்தியின் விளைவாக உற்பத்தியிலே பங்கெடுத்துக் கொள்ளாத ஒரு வர்க்கம் தோன்றியது. பேராசிரியர் க.கைலாசபதி இவர்களை வியாபாரிகள் வர்க்கம் என அழைத்தார். சங்கம் மருவிய காலத்தில் பெரு வளர்ச்சியுற்ற வணிக வர்க்கமே பல்லவர் காலத்தில் நிலமானிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை தோற்றம் பெறக் காரணமாகியது. நிலமானிய முறையின் அரசியல் சாரம் நிலத்தை மையப்படுத்திய நிர்வாக அமைப்பை உருவாக்குதல். அதன் பொருளாதாரத் தாற்பரியமானது உழைப்போரை நிலத்தோடு இணைத்து பெறப்படும் உற்பத்தியின் உபரியை நிலவுடமையாளர்கள் கைப்பற்றிக் கொண்டு உற்பத்தியின் ஒரு பகுதியை அரசுக்கு அளித்தலாகும். இதனால் சமுதாயத்திற்குள்ளேயே வர்க்கப் பிரிவுகள் உருதிப்படத் தொடங்கின. தமிழ்நாட்டில் வணிக வர்க்கம் தலை தூக்க முயன்றபோது கலை இலக்கியத்திலும் மாற்றம் உருவாகத் தொடங்கின. கோவலன் என்ற வணிகன் சிலப்பதிகார நாயகனாகினான். பல்லவ அரசர்கள் பிராமணர்களுக்கு நிலங்களைத் தானமாக வழங்கியதோடு, பிரமதேயங்களையும் (பிராமணக் குடியிருப்புக்கள்) உருவாக்கினார்கள்.

இதுவரை நிலத்தில் ஆதிக்கம் செலுத்தாது நிலத்தைப் பயன்படுத்திய பிராமணச் சமூகம் அதிகாரம் உள்ள நிலவுடமைச் சமூகமாகத் தன்னை மாற்ற முடிந்தது. வணிகர்களின் பெரும் வர்த்தகமான காஞ்சிபுரம், மகாபலிபுரம் என்பன பெருநகராக உருவாகத் தொடங்கியது. சமணர்களின் ஆதரவு பெற்ற வணிக வர்க்கத்திற்கும், நிலவுடமைப் பிராமணர்களுக்கும் அதிகாரப் போட்டி உச்ச நிலையை எட்டியது. வணிகர்களை எதிர்க்கின்ற போது வணிகர்களை ஆதரிக்கின்ற சமணர்கள் தாக்கப்பட்டனர். சமணர்களையும், பௌத்தர்களையும் எதிர்ப்பது ஒன்றும் இலகுவான செயலல்ல என்று உணர்ந்த பிராமண நிலக்கிழார்கள் இந்தப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு பக்தி இயக்கத்தை உருவாக்க வேண்டியிருந்தது. சமணப் பள்ளியில் (ஆலயம்) கல்வியும், மருத்துவமும் வழங்கப்பட்டதால், சமணம் தமிழக சமூகத்தில் ஆழ வேரூன்றி இருந்தது. இந்துக்களுக்கு சமணத்தையோ அல்லது பௌத்தத்தையோ எதிர்ப்பது ஒரு சவாலாகவே இருந்தது.

சைவ அடியார்களான காரைக்கால் அம்மையார், திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், மற்றும் பேய் ஆழ்வார், பொய்கை ஆழ்வார், பூதத்தாழ்வார் போன்ற வைணவ மத அடியார்களும் சமணத்திற்கும் பௌத்தத்திற்கும் எதிராக ஒரு பக்தி இயக்கத்தைக் கட்டி எழுப்பினார்கள். இந்தப் பக்தி இயக்கம் பரந்து பட்ட மக்களை ஒன்று திரட்ட வேண்டியிருந்தது. பழைய வேத வேள்வி வழக்கிலிருந்து கோவில் வழிபாட்டு முறை மாற்றியமைக்கப்பட்டு, ஆகமத்தைக் அடிப்படையாகக் கொண்ட தனி மனிதப் பிரார்த்தனை பெரு வழக்காயிற்று. சமண, பௌத்த மடங்கள் போன்று சைவ மத மடங்களும் உருவாக்கப்பட்டன. இந்து மத ஆலயங்கள் மட்டுமல்ல, பிரமதேயங்களும், சைவ மடங்களும் சைவ மத வளர்ச்சியை வளர்த்தன. சைவ மத வரலாற்றில் பல்லவர் காலம் பொற்காலமாகியது.



இன்று திராவிடக் கலையெனப் போற்றப்படும் தென் இந்தியக் கட்டடக் கலைக்குப் பல்லவர்களே வித்திட்டார்கள். அழிவு நிலையிலிருந்த பல ஆலயங்களுக்குத் தலபுராணங்களும், பதிகங்களும் பாடப்பட்டன. வடமொழிக்கும் பிராகிருதத்திற்கும் எதிராகத் தமிழும் தமிழிசையும், பக்தி இயக்கத்தில் முன்னுரிமை பெற்றன. "தமிழோடிசை பாட மறந்தறியேன்", என்றார் அப்பர். "மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்" என்ற கோசம் தமிழகம் எங்கும் கேட்டது. இந்தக் கால கட்டத்தில் தான் தென் இந்தியாவில் மட்டுமன்றி, வட இந்தியாவிலும் நன்கு அறியப்பட்ட திருக்கோணேசர் ஆலயத்திற்கு திருஞானசம்பந்தர் பதிகம் பாடினார். இங்கு குறிப்பாக பல்லவர் பற்றி மிக விரிவாகக் குறிப்பிடுவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன.

1. பல்லவர் காலத்தில் (கி.பி.7ம் நூற்றாண்டு) வாழ்ந்த திருஞான சம்பந்தர் திருகோணமலைப் பதிகம் பாடியதன் மூலம் கோணேசர் ஆலயம் குறித்த கவனத்தை ஈர்த்திருந்தார்.

2. பல்லவராட்சியில் தான் முதற்தடவையாக இலங்கைக்கும் இந்தியாவுக்கும் அரசுரீதியான தொடர்பு உருவாகியது. இதற்கு முன்னர் தனிப்பட்ட தொடர்பே காணப்பட்டது.

3. பின்வந்த சோழரின் வெளிநாட்டு தொடர்பு மற்றும் இந்து மதப் பணிகளுக்கு ஆரம்பத் தளங்களை உருவாக்கியவர்கள் பல்லவர்களே.

இதனால் தான் ஆய்வாளர்கள் பல்லவர் காலம் தமிழக வரலாற்றின் திருப்புமுனை எனக் கருதுகின்றார்கள். எனவே பல்லவர் கால வரலாற்றுப் பின்னணியை விபரமாக தெரிந்து கொள்வதன் மூலமே திருகோணமலையில் பல்லவராட்சியின் தாக்கங்களையும், அதன் தொடர் விளைவுகளையும் புரிந்து கொள்ள முடியும்.

## பல்லவன் கோவில்

திருகோணேஸ்வரம் குறித்த உறுதியான வரலாற்று ஆதாரங்களைப் பெறும் மற்றுமொரு காலமாக பல்லவர் காலத்தையே குறிப்பிட முடியும். கி.பி 7ம் நூற்றாண்டில் வாழ்ந்த சைவ அடியாரான திருஞானசம்பந்தர் பாடிய திருகோணமலைப் பதிகம் திருக்கோணேஸ்வரம் திருகோணமலையில் அமைந்துள்ள செய்தியைத் தருகின்றது பல்லவர் காலத்தில் இலங்கையின் வேறெந்தப் பகுதியையும் விட திருகோணமலைப் பகுதியிலே பல்லவச் செல்வாக்கு கூடுதலாகக் காணப்பட்டுள்ளது.(1) திருகோணமலை மாவட்டத்திலுள்ள குச்சவெளி, திரியாயக் கல்வெட்டுக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருகோணமலையில் பல்லவர்களின் செல்வாக்கை உறுதிப்படுத்துகின்றன. குச்சவெளிக் கல்வெட்டு வடமொழியிலும், திரியாய் உற்சாசனம் பல்லவ கிரந்தத்திலும் காணப்படுகின்றன. இக் கல்வெட்டுக்களை ஆராய்ந்த பரணவிதான மானவர்மன் காலத்து பல்லவர் தொடர்புகளை உறுதிப்படுத்துவது போன்று திரியாய் கல்வெட்டு அமைந்துள்ளது எனக் கூறியுள்ளார்.

தமிழகத்தில் பல்லவராட்சியில் பெருவளர்ச்சி கண்டிருந்த சிற்பக்கலை வளர்ச்சியானது இலங்கைக் கட்டடக்கலை வளர்ச்சியிலும் ஆழமான தாக்கத்தினை உண்டாக்கியது. நான்காவது அக்கபோதி முதல் மானவர்ம காலம் வரை (கி.பி. 667-718) இலங்கையில் பல்லவச் செல்வாக்கு உச்ச நிலையில் இருந்தது. அக்கிரபோதி மன்னரின் முதலமைச்சர்களாக இருந்த பொத்தகுட்டன், பொத்த சாத்தன் ஆகியோர் பல்லவ வம்சத்தைச் சேர்ந்த தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கி.பி 436இல் சிம்மவர்மன் என்ற பல்லவன் காஞ்சியில் களப்பிரர் காலத்தில் நிலையான ஆட்சியை ஏற்படுத்த முயற்சி செய்தான். பல்லவர்களுள் சிம்மவர்மனும், இவன் மகன் சிம்மவிஷ்ணுவுமே காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட ஆட்சியை ஏற்படுத்தியவர்கள். இவர்கள் உறுதிப்படுத்திய பல்லவராட்சி கி.பி 9ம் நூற்றாண்டு வரை வலிமையுடன் தொடர்ந்தது. தமிழக வரலாற்றில் வலிமையான பேரரசு முதலில் தோற்றம் பெற்றது. வலிமையான அரசை உருவாக்கிய பல்லவர்கள் வெளிநாடுகளுடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவை இருந்ததால், அயலுறவுக் கொள்கைகளையும் வகுத்துக் கொண்டார்கள். பல்லவர்களின் எழுச்சிக்குத் துணை நின்ற வணிகர்களுக்கு வெளிநாட்டு வர்த்தகம் தவிர்க்க முடியாத தேவையாக இருந்தது. இதுவரை தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே இருந்த தனியார் வணிகம் போலல்லாது அரச ஆதரவுடன் வணிகம் உருவாகியது. ஏனெனில், வணிகர்கள் பல்லவ அரசுக்கு ஆதரவளித்தனர். வணிகத் தொடர்பே பின்பு பண்பாட்டுத் தொடர்புக்கு காரணமாகிறது என்பதை உலக வரலாறு பல இடங்களில் பதிவு செய்திருக்கின்றது.

இலங்கை இளவரசன் மானவன்மா தனக்கு கிடைக்க வேண்டிய ஆட்சி உரிமையைப் பெறுவதற்காக, பாண்டிய மன்னனான நரசிங்க வர்மனிடம் (கி.பி 630 - கி.பி 668) உதவி கோரினான். நரசிங்க பல்லவன் அளித்த உதவியினால் பதவிபெற்ற மானவன்மா பல்லவருடன் நெருங்கிய தொடர்பை வைத்துக் கொண்டான் எனினும் மீண்டும் பதவி இழந்த மானவன்மா தமிழகம் சென்று பாண்டிய அரசில் 20 வருடங்கள் வாழ்ந்த பின்னர் இரண்டாம் நரசிங்க வர்மனின் ஆதரவோடு இலங்கையில் முடி சூடிக்கொண்டான். இதனால் பல்லவ-சிங்களத் தொடர்பு நீடித்துக் கொண்டது. பல்லவக் கலைஞர்கள் மற்றும் போர் வீரர்கள் இலங்கையில் குடியேறிக்



கொண்டார்கள். வணிக நோக்கம் கொண்ட பல்லவர்களுக்கு மாந்தோட்டை, சலாபம் (சிலாபம்), திருகோணமலை போன்ற துறைமுக நகரங்கள் வணிகத்தைப் பெருக்க உதவியாக இருந்தன

கி.பி 7ம் நூற்றாண்டில் திருகோணமலை மாவட்டம் வணிகத்தில் வளர்ச்சி பெற்றிருந்ததைத் திரியாய் பாறைக் கல்வெட்டு மூலம் அறிய முடிகின்றது. இவ்விடத்தில் கிரிகண்ட சேத்திப் பர்வதத்தை ரசபுத்த, வல்லிக என்ற இரு வணிகர்களின் அமைப்பு உருவாக்கியது பற்றி இக் கல்வெட்டுக் கூறுவதோடு இத்தகைய வணிக கூட்டத்தினர் சமுத்திரத்தினைக் கடந்து அங்கு வந்தவர்கள் என்றும், கடலிற் பிரயாணஞ் செய்வதில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்ததோடு பொருட்களை வாங்கி விற்பனை செய்வதிலும் ஈடுபட்டிருந்தனர் என்றும் இவர்களின் சேர்த்தகப் பொருட்கள் பல்வேறு கப்பல்களில் கொண்டு செல்லப்பட்டன எனவும் குறிப்பிடுகின்றது.(7)

அநுராதபுர தொல் பொருட் தடயங்களிலிருந்து பல்லவர்களின் தொடர்பு அநுராதபுரத்திலும் இருந்திருக்க வேண்டும் எனக் கூறக் முடிகின்றது. துறைமுக நகரங்களில் மாத்திரமல்லாமல் இலங்கைத் தீவின் ஏனைய பகுதிகளிலும் பல்லவச் செல்வாக்கு காணப்படுகின்றது. ஆயினும், தென் இந்திய வணிகர்களுக்கு வசதியாக இருந்த திருகோணமலையே பல்லவர்களை அதிகம் கவர்ந்தது. திருஞானசம்பந்தர் பாடியது போன்று குடிதனை நெருங்கிப் பெருக்கமாய் திருகோணமலை தோன்றியதற்கு, வணிகத்திற்கு ஏற்ற துறைமுக வசதி இருந்தது மாத்திரமல்ல. ஏற்கனவே புகழ் பெற்றிருந்த சிவாலயமும் காரணமாக இருந்திருக்கின்றது.

இன்று இலங்கையில் பௌத்த பண்பாடாகச் சித்தரிக்கப்படும் நாலந்த பௌத்த விகாரை, இசுறு முனியா, தம்புள்ள குகை விகாரை, போதிசத்துவ சிலை என்பன பல்லவ கலை வடிவங்களுக்கான சில உதாரணங்களாகும். இசுறு முனியா என்பது ஈஸ்வர முனி என்பதன் திரிபாகும். திருகோணமலையில் திரியாயில் காணப்படும் பௌத்த தேவாலயச் சிதைவுகள் பல்லவக் கலைப்பாணியை நினைவுபடுத்துகின்றது. திரியாய் பௌத்த தேவாலயமான கிரிகண்ட விகாரையின் கலைப் படைப்புகள் பல்லவக் கலைஞர்களினால் உருவாக்கப்பட்டிருக்கிறது. பல்லவக் கலைஞர்கள் இத்தகைய பாரிய பணியில் ஈடுபட்டிருப்பதால், அவர்கள் மிக நீண்ட காலம் இலங்கையில் தங்கியிருந்திருக்க வேண்டும். இதற்கு பல்லவ-இலங்கை நட்பு சீராக இருந்திருக்கின்றது. இதே போன்று தாய்லாந்து, இந்தோனேசியா போன்ற நாடுகளிலும் பல்லவக் கலை வடிவங்கள் இன்றும் அடையாளங் காணக்கூடியதாக உள்ளது. இலங்கையில் காணப்படும் இந்து ஆலயங்கள் அனைத்துமே பல்லவக் கலை வடிவத்திலிருந்து பிறந்தவையே. இரண்டாம் நரசிம்மன் மாமல்லபுரத்தில் கடற்கரைக் கோயில்களை சிறப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைத்தான். ஆரம்ப காலத்தில் திருக்கோணேஸ்வரம் ஒரு குகைக் கோயிலாக இருந்து பின்னர், பல்லவர் காலத்தில் கோபுரங்களுடன் கூடிய கருங்கற் கோயில் வடிவத்தைப் பெற்றிருக்க வேண்டும். ஏனெனில் பல்லவர் காலத்திற்கு முன் பொதுவாகக் குகைக் கோயில்களே காணப்பட்டன. ஆலயத்தில் கோபுரங்களை வடிவமைக்கும் கட்டடக் கலை மரபு பல்லவர்களினால் தான் முதலில் உருவாக்கப்பட்டது. போர்த்துக்கேயத் தளபதி கொன்ஸ்ரன்ரைன் தசா டி ஸொரொஸ்ஸா 1624இல் கோணேசர் ஆலயத்தை இடிப்பதற்கு முன்னர் வரையப்பட்ட கோணேசர் ஆலயத்தின் வரைபடமானது பல்லவர்கால சிற்பக் கலையை வெளிப்படுத்துகின்றது. பல்லவ அரசர்கள் திருக்கோணேஸ்வரத்தில் கருங்கல்லினால் ஒரு காவியத்தைப் படைத்திருந்தார்கள். குறிப்பாகத் திரியாயிலும், திருகோணமலையிலும் கிடைத்த விஷ்ணு சிற்பங்கள் பல்லவக் கலையில் உருவாக்கப்பட்டவையே.

## சோழரின் தோற்றமும் எழுச்சியும்

இலங்கை வரலாற்றில் சோழர் ஆட்சி தனிச்சிறப்பு பெறுவ தற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. தமிழக வரலாற்றில் சோழர்களே இலங்கையின் பெரும் பகுதியை முதன் முதலாக தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்த பெருமையைப் பெறுகின்றார்கள். அத்துடன் சோழர்கள் இலங்கையில் சுமார் 77 ஆண்டுகள் தொடர்ச்சியான நிலையான ஆட்சியையும் ஏற்படுத்தியிருந்தார்கள். இலங்கையில் சோழரினால் கைப்பற்றப்பட்ட பகுதிக்கு மும்முடிச் சோழ மண்டலம் எனப் பெயரிட்டு, இலங்கையை சோழராட்சியத்தின் ஒரு மாகாணமாகச் சேர்க்கப்பட்டது. சோழர்களினால் சிங்கள மன்னர்களின் இராசதானியாகப் பல நூறு வருடங்களாகத் தலைநகராக விளங்கிய அநுராதபுரம் அழிக்கப்பட்டது. இராசராசனின் வெற்றியைக் குறிக்கும் பொருட்டு சோழப் பேரரசனான இராசராசனின் விருதுப் பெயரான ஜனநாதமங்கலம் என்ற பெயருடன் பொலநறுவை சோழர்களின் புதிய தலைநகராகப் பிரகடனம் செய்யப்பட்டது. சோழரின் ஆட்சியில்தான் திருகோணமலை முதல்முறையாக தமிழக ஆட்சியின் கீழ்கொண்டு வரப்பட்டதாக அறியப்படுகின்றது. சோழர்கள் இலங்கையின் பெரும்பாலான பாகங்களை நீண்ட காலமாக ஆட்சி செய்த போதிலும், திருகோணமலையில் அவர்களது ஆதிக்கம் அதிகளவு காணப்பட்டிருக்கின்றது. அது மட்டுமின்றி சோழர்களின் செய்திகளைக் கூறும் கல்வெட்டுக்கள் வேறு மாவட்டங்களை விட அதிகளவு திருகோணமலை மாவட்டத்திலேயே கிடைத்துள்ளன. திருகோணமலையில் சோழர் கால நடவடிக்கைகளை நன்கு புரிந்து கொள்வதற்கு தமிழகத்தில் சோழர் ஆட்சியின் வரலாற்றுப் பின்னணி குறித்து சற்று விரிவாகத் தெரிந்து கொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது.



தமிழக வரலாற்றில் சோழருடைய எழுச்சி தவிர்க்க முடியாத ஒரு தேவை எனப் பல வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். சோழ இராச்சியத்திற்கான தேவை ஏற்கனவே உருவாகிய நிலையில் பல்லவ இராச்சியம் வலிமை இழக்கத் தொடங்கியது. இதற்குப் பல காரணங்கள் முன் வைக்கப்படுகின்றன. உபரி உற்பத்தி காரணமாக வலிமை பெற்றிருந்த உடமை வர்க்கம் பல்லவர் ஆட்சிக்கு அளித்த ஆதரவை விலக்க முற்பட்டதே உடனடிக் காரணமாகக் கருதப்படுகின்றது. குறிப்பாகத் தஞ்சை நிலக்கிழார்கள் அல்லது வேளாளர் பல்லவர்களுக்கு அளித்த ஆதரவை விலக்கியதை முக்கிய காரணமாக வரலாற்று ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். நிலக்கிழார்களின் அரசியல் முனைப்புக்கான காரணங்களை விரிவாக ஆராய்வதன் மூலம், சோழர்கள் இலங்கை மீது தொடுத்த போர்களுக்கும், திருகோணமலையை வணிக நகராக வைத்திருக்க வேண்டிய தேவைக்குமான காரணங்களை அறிந்து கொள்ள முடியும்.

பல்லவர் ஆட்சிக் காலத்தில் பெருகி வந்த உபரி உற்பத்தி காரணமாக வணிக வர்க்கம் உருவாகியது. உற்பத்தியாளர்களுக்கும் நுகர்வோர்களுக்கும் இடையில் தரகர்களாக உருவாகிய குழுவினரே பின்பு வணிக வர்க்கமாகத் மாற்றமடைந்தார்கள் என பேராசிரியர் க. கைலாசபதி கருதுகின்றார். இவர்கள் நேரடியாக உற்பத்தியில் பங்கெடுத்துக் கொள்ளாத போதும் பெரும் சொத்துக்களைச் சேர்த்ததன் மூலம் சமூகத்தில் ஒரு சக்திமிக்க வர்க்கமாக உருவாகினார்கள். இந்த வணிகர்களின் தோற்றமும் வளர்ச்சியுமே பிற்காலத் தமிழக அரசியல் மாற்றங்களுக்குக் காரணமாகின்றன.

உற்பத்திப் பொருட்களை உள்நாட்டில் விற்றுக் கொள்வதற் காகவும், அயல்நாடுகளுடன் வணிகத்தை மேற்கொள்வதற்காகவும் நகரத்தார் என அழைக்கப்பட்ட வணிகர்களுக்கான நகரம் என்ற அமைப்புத் தோன்றியது. காஞ்சிபுரம், மகாபலிபுரம், காவிரிப் பூம் பட்டினம் ஆகியவை நகரங்களாக வளர்ச்சியடைந்தன.(4) நகரங்கள் வணிகர்களின் வணிகச் செயல்களின் மையமாக உருவாகியது. பல்லவர் ஆட்சியில் வணிக வர்க்கத்தைச் சமணப் பள்ளிகள் ஆதரித்தன. சைவ, வைணவ ஆலய நிலங்கள் சமணர்களினால் பறிமுதல் செய்யப்பட்டன. சமணர்களின் ஆதரவைப் பெற்ற வணிக வர்க்கத்திற்கும், நிலக்கிழார்களுக்கும் நேரடி முரண்பாடு உருவாகின. சமணர்களிடம் இருந்த நிலங்களை மீட்பதன் மூலம் உற்பத்தியை மேலும் பெருக்கலாம் என்ற எண்ணம் சைவ நிலக்கிழார் அல்லது வேளாளருக்கு ஏற்பட்டது. எனவே நிலக்கிழார்களின் கீழ் பணி புரிந்த விவசாயக் கூலிகளை ஒன்று திரட்டி வணிகர்களுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த வர்க்கப் போராட்டம் சமயத்திற்கு எதிரான போராட்ட மாகவும் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த வரலாற்றுப் பின்னணியில் இரு முக்கிய விடயங்களை அவதானிக்கலாம்.

1. சோழப் பேரரசின் எழுச்சி
2. சைவ மதத்தின் எழுச்சி.

இந்த இரு எழுச்சி நிகழ்வுகளும் வேறுபட்டவையாகத் தோற்றமளிப் பினும் ஒன்றில் ஒன்று தங்கியே உருவாகின.

பல்லவர் ஆட்சியின் போது முத்தரையர் என்ற சிற்றரசர்கள் நியமம் என்ற ஊரை தலைநகராகக் கொண்டு காவேரிப் படுக்கை களை ஆட்சி செய்திருக்கின்றார்கள். வரலாற்றின் ஆரம்ப காலம் தொட்டு இலங்கையும், தமிழகமும் புவியியல் அடிப்படையில் கொண்டிருக்கும் நெருக்கம் பண்பாட்டு, அரசியல் தொடர்புக்குக் காரணமாக அமைந்தன. தமிழக ஆட்சியாளர்கள் இலங்கை மீது ஏற் படுத்திய சிறு படையெடுப்புக்களும், மேலாண்மையும் ஒரு தற்காலிக தாக்கத்தையே ஏற்படுத்தியிருந்தது. இலங்கை ஆட்சியாளர்களும் ஆட்சி உரிமை தொடர்பான நெருக்கடிகள் ஏற்படுகின்ற சந்தர்ப்பங் களில் தமிழகம் சென்று உதவி கோருவது இலங்கை வரலாற்றில் பல காலகட்டங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கின்றது. இத்தகைய வரலாற்றுப் போக்கானது குறிப்பாக கி.பி.9ம் நூற்றாண்டுக்குப் பின்னர் பாண்டிய, பல்லவ, சோழப் படையெடுப்புடன் மாறத் தொடங்கின. இந்த மாற்றமானது இலங்கை-தமிழக வரலாற்றின் முக்கிய திருப்பமாக அமைந்ததோடு, இலங்கை மீது ஏற்படுத்தப்பட்ட பண்பாட்டுத் தாக்கமானது ஒருபோதும் பின்னோக்கி மாற்ற முடியாதவாறு உருவாகியது.

சோழர்கள் கி.பி 9ம் நூற்றாண்டில் நடத்திய திருப்புறம்பியப் போரில் பல்லவரையும், பாண்டியரையும் தோற்கடிக்க முன்னர் தமிழக ஆதிக்கப் போட்டியில் பல்லவரும், பாண்டியருமே முன்னணி யில் இருந்தனர். தமிழகத்தில் ஏற்படும் ஆதிக்க மாற்றம் இலங்கை ஆட்சியின் வெளியுறவுக் கொள்கையை நேரடியாகப் பாதித்திருக் கின்றது. பாண்டியரின் எழுச்சியினால் தனது ஆட்சிக்கு ஆபத்து உருவாகலாம் என உணர்ந்த அநுராதபுர மன்னன் மானவர்மன் பல்லவருடன் நட்பை வளர்த்துக் கொண்டான். ஆனால் சோழர்கள் திருப்புறம்பியப் போரில் பல்லவரை மிகக் கடுமையாக அடக்கியதை அறிந்த மானவர்மன் பாண்டியரோடு உறவை வளர்க்க விரும்பினான். இதன் மூலம் சோழரினால் ஏற்படக்கூடிய இலங்கை ஆக்கிரமிப்பை முழுப் பலத்துடன் எதிர்க்க விரும்பியதையே காரணமாகக் கூறப்படு கின்றது. சோழரின் எழுச்சியே பாண்டிய-சிங்கள உறவுக்கு அடிப்படை நோக்காக அமைந்தது. சோழருக்கு பாண்டிய நாட்டைக் கைப்பற்ற அரசியல் காரணம் மட்டுமல்ல, பொருளாதாரக் காரணமும் இருந்ததில் வியப்பில்லை. பாண்டிய நாட்டின் தென் கோடிக்



கடலில் விளைந்த முத்துக்கள் சோழரின் கவனத்தை ஏற்கனவே ஈர்த்திருந்தன. பாண்டிய நாட்டைக் கைப்பற்றுவதனால் கிடைக்கும் முத்துக்கள் மூலம் வருவாயைப் பெருக்கலாம் என சோழர்கள் எண்ணினார்கள். எனினும் சோழர்களினால் பல்லவர்களை அடக்கியது போன்று பாண்டியர்களை முற்றாக அடக்க முடியாமற் போனதற்கு பாண்டிய நாட்டின் இயற்கைக் காடுகள் காரணமாக அமைந்தன. பாண்டிய நாட்டின் இயற்கைக் காடுகள் சோழர்களின் எதிரிகளுக்கு பாசறைகளாகவும், மறைவிடங்களாகவும் மாறின. எனவே சோழர்களினால் முற்று முழுதாக பாண்டியர்களை அடக்க முடியாமல் போய்விட்டது. அரசியலைப் பொறுத்த மட்டில், சிங்கள-பாண்டிய உறவு காரணமாக பாண்டியர்கள் இலங்கையைப் பாண்டிய அரசின் ஒரு தளமாகப் பயன்படுத்துவது சாத்தியமாக இருந்தது. இது அகன்ற சோழப் பேரரசுக் கொள்கைக்கு ஒரு நிரந்தரத் தடையாக அமைந்துவிடக் கூடாது என்பதில் சோழர்கள் உறுதியாக இருந்தார்கள். எனவே சோழர்களது இலங்கைப் படையெடுப்பு சோழர்களது வெளியுறவுக் கொள்கையில் மிக முக்கிய இடத்தைப் பெற்றது.

விஜயாலய சோழன் தஞ்சையில் வலிமை குன்றிக் கொண் டிருந்த கோ இளங்கோ என்ற புகழ் பெற்ற முத்தரையரை தோற் கடித்து கி.பி 850இல் தஞ்சாவூரில் தலைநகரை நிறுவினான்.(5) பலமான சோழ இராச்சியம் உருவாகியதற்கு இந்த வெற்றி அடிப் படையாக அமைந்தது. பல்லவ மன்னனான அபராஜித வர்மனுக்கும், பாண்டிய மன்னனான இரண்டாம் வரகுணனுக்குமிடையே நடந்த கடும் போரில் தனக்கு ஆதரவாகப் போரில் பங்கேற்ற விஜயாலய சோழனுக்கு நன்றிப் பரிசாக அபராஜித வர்மன் மேலும் சில நிலப்பகுதிகளைப் பரிசாகக் கொடுத்தான். இது தஞ்சையில் உருவா கிய சோழ அரசை மேலும் விரிவுபடுத்த உதவியது. விஜயாலய சோழனின் வழியில் வந்த நான்காவது தலைமுறையைச் சேர்ந்த சுந்தர சோழ பராந்தகனுக்கு மூன்று புதல்வர்கள். இவர்களில் மூத்த மகன் ஆதித்த கரிகாலன் சூழ்ச்சியில் கொல்லப்பட்டான். அடுத்தவர் குந்தவை என்ற இளவரசி. இவர்களில் இளையவரே இராஜராஜன் என்ற விருதுப் பெயருடன் தமிழக வரலாற்றில் விறுக்கொண்டெழுந்தவர். இவரின் இயற்பெயர் அருண்மொழி வர்மன்.

கி.பி 985இல் ஆட்சிக்கு வந்த இராசராச சோழனும், அவரைத் தொடர்ந்து கி.பி 1012இல் ஆட்சிக்கு வந்த மகன் இராசேந்திர சோழனும் பல படையெடுப்புக்களை நடத்தி சோழ இராச்சியத்தை விரிவுபடுத்தினார்கள். சோழப் பேரரசின் பெயரையும், பெருமையையும் நிலை நிறுத்தியவர் முதலாம் இராசராசன் சிறந்த வீரன்.(6) "தமிழக வரலாற்றில் சோழப் பேரரசு பலம் பெற்ற அரசாக நான்கு நூற்றாண்டுகள் வரை நீடித்தது. இந்திய நாட்டின் பெரும் பகுதியை மட்டுமல்ல, கடல் கடந்த நாடுகளையும் கைப்பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏகாதிபத்திய நாடாகவும் இராசராசன் பரம்பரையினர் சில காலம் ஆட்சி செய்தனர். இந்திய வரலாற்றில் இத்தகைய பெருமை பெற்றவர் சோழர் மட்டுமேயாவர்."(7) சோழ மன்னர்களில் முதன் முதலில் இராசராசன், இராசேந்திரன் ஆகியோர் கடல் கடந்த நாடுகளைக் கைப்பற்றி, ஆட்சிப் பரப்பை விரிவுபடுத்தும் கொள்கை உடையோராக இருந்தனர். இந்தியாவின் கிழக்குக் கடல் பகுதிகளையும் வெற்றி பெற்று இந்தியாவின் மிகப் புகழ் பெற்ற பேரரசுகளுள் சோழப் பேரரசும் ஒன்று என்று கருதப்படும்படி செய்தனர்.(8) இராசராசனின் புகழுக்கு அவனுடைய வீரச்செயல்கள் மட்டும் காரணமல்ல. அவர் வளர்த்த கலைகளும், நிர்வாகத்திறனும் காரணங்களாகும்.(9) இராஜராஜன் தனது [illegible] ஆட்சிக் காலத்தில் தனது ஆட்சிக்கு உட்பட்ட பேரரசு முழுவதையும் அளந்து கணிப்பிட்டார். நிலங்களை அளப்பதற்கு நிலஅளவை நாயகமாக மாராயன் என்பவனை நியமித்தார். இலங்கையில் தனது இராச்சியத்தை அளக்க நில அளவையாளர்களை அனுப்பி வைத்தார். உலக வரலாற்றில் இத்தகைய பெரும்பணியை நிறைவேற்றிய மன்னர்கள் எவரும் இல்லை. இந்த அரும் பணியை துல்லியமாகச் செய்து முடித்தமையோடு, ஏடுகளில் பதிவு செய்தும் வைத்தார். இலங்கையில் சோழராட்சிப் பகுதிகள் அளந்து கணிப்பிடப்பட்டது. இதனால் இராஜராஜ சோழனுக்கு குரவன் உலகளந்தான் என்ற விருதுப் பெயர் ஏற்பட்டது.(10) கடல் கடந்து அகன்ற சோழராச்சியத்தை உருவாக்க காரணமாக இருந்த சோழப் படைவீரர்கள் பதினொரு இலட்சமாகும். இராஜராஜனின் சோழப்படையானது 31 படைப் பிரிவுகளைக் கொண்டிருந்தது. இலங்கையில் மட்டும் 90 ஆயிரம் வேளைக்காறப் படையினர் நிரந்தரமாக நிறுத்தப்பட்டனர். முதலாம் விஜயபாகுவினால் சோழ அரசு இலங்கையில் இருந்து விலக்கப்பட்ட பின்னரும் கூட திருகோணமலையிலும், கொட்டியாரத்திலும் வேளைக்காறப் படைப் பிரிவு தொடர்ந்து நிலை கொண்டு இருந்தன.

இராஜராஜனால் உருவாக்கப்பட்ட படைப் பலத்தை அவர் மகன் இராஜேந்திரன் மேலும் விரிவுபடுத்தினான். இராஜராஜன் ஆட்சியேற்றுக் கொண்டதோடு சோழ வம்சத்தின் சிறப்பும் புகழும் மிக்க ஒரு நூற்றாண்டுக்குள் நாம் பிரவேசிக்கின்றோம் என்ற சோழரின் எழுச்சி பற்றி நீலகண்டசாஸ்திரியின் வர்ணனை பொருத்தமானதே. சோழரின் உள்நாட்டு, வெளிநாட்டுப் படையெடுப்புக்கள் பல காரணங்களுக்காக நிகழ்ந்ததாக ஆய்வாளர்கள் கருதுகின்றார்கள். ஆனால் அமெரிக்க வரலாற்றுத்துறை ஆய்வாளர் ஸ்பென்சர் தமிழக படையெடுப்புக்களை இரு வகைகளாகக் காண்கின்றார்.

1. ஆட்சியை விரிவாக்கம் செய்வதற்காக நடத்திய போர்
2. தமிழகத்தில் தமது ஆட்சியை பலப்படுத்துவதற்காக செல்வங்களைக் குவிக்கும் நோக்கில் ஏற்படுத்தப்பட்ட போர்.



சோழர்கள் ஆட்சியை விரிவாக்கம் செய்வதற்காக படையெடுத்தார்கள் என்பதை விடத் தமிழக ஆட்சியைப் பலப்படுத்தவே படையெடுப்பு நடத்தினார்கள். அரபு வணிகர்களின் வணிகப் படகுகள் இந்து சமுத்திரத்தில் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது. மேலும் அரேபியர்களின் தென், தென்கிழக்காசிய வணிக ஆதிக்கத்தை முறியடிக்க வேண்டிய பொருளாதாரத் தேவை சோழருக்கு ஏற்பட்டது. இந்தியாவின் தென்கோடி நாடுகளில் அரேபியர்கள் நடத்திய வணிகத்தை முறியடிப்பதன் மூலம் தமிழகத்திற்கு செல்வங்களைக் கொண்டு வருவது எளிதாகக் கருதப்பட்டிருக்கலாம்.

"அரேபியர்களின் இந்திய நாட்டின் தென்புறக் கரையோரப் பகுதிகள், மற்றும் தென் கிழக்காசிய நாடுகளின் வணிகத்தை முறியடிக்கவே இப்பகுதி நாடுகளை இராசராசன், இராசேந்திரன் கைப்பற்றினார் என வரலாற்றாசிரியர் ரோமிலா தாப்பர் கூறுவர்."(11) எனவே சோழர்களுக்குத் தென் இந்திய எல்லைக்கு அப்பால் திருகோணமலை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வணிகத் துறைமுக நகராக பயன்பட்டதில் வியப்பில்லை. அத்துடன் திருகோணமலையின் இயற்கைத் துறைமுகமும், வளமிக்கப் பின்னணி நிலமும் சோழ வணிகர்களுக்குப் பெரும் உதவியாக இருந்தது. சோழருடைய காலாதிக்கக் கொள்கையில் திருகோணமலையின் கேந்திர முக்கியத்துவம் சிறப்புக் கவனத்தை ஈர்த்திருந்தது.(12)

சோழர் காலத்திற்கு முன்பாகவே திருகோணமலைத் துறைமுகம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதன் காரணமாகவே திருகோணமலைத் துறைமுகத்திற்கு ஊடாகவே விஜயனைத் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த பாண்டு வாசுதேவ மன்னனின் மனைவியாகிய பட்டகச்சனா இலங்கை வந்ததாக மகாவம்சம் கூறுகின்றது.(13) எனினும், சோழர்களே தென், தென்கிழக்காசியப் பிராந்தியத்தில் திருகோணமலைத் துறைமுகத்தின் கேந்திர முக்கியத்துவத்தை நன்கு அறிந்தவர்கள் எனக் கூறலாம். சோழரின் கடாரம், ஸ்ரீ விஜயம் நோக்கிய படையெடுப்புகளுக்குத் திருகோணமலை முதற்கட்டத் தளமாக விளங்கியது. எனவே தான், இந்திய உப கண்டத்திற்கு வெளியே தமது ஆட்சி விரிவாக்கத்தின் முதற் கட்டமாகத் திருகோணமலையைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர விரும்பினார்கள்.

## சோழரின் இலங்கைப் படையெடுப்பு

சோழப் பேரரசன் இராஜராஜனால் (கி.பி.985 –கி.பி.1016) அவனது ஆட்சி ஆரம்பித்து எட்டாம் ஆண்டில் தொடக்கி வைக்கப்பட்ட இலங்கைப் படையெடுப்பு அவனது மகன் முதலாம் இராஜேந்திரனால் கி.பி 1017 இல் நிறைவு செய்து வைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாம் இராஜேந்திரனின் முப்பத்திரண்டு கால ஆட்சியில் (கி.பி.1012 - கி.பி.1044) ஆரம்பமாகிய ஐந்து நூற்றாண்டு காலப் பகுதியில் இலங்கைப் படையெடுப்பு நிறைவுக்கு வந்தது. சோழர்கள் இலங்கை மீது மேற்கொண்ட போருக்கான நோக்கங்களை அறிய சோழர்களின் அயல்நாட்டுப் படையெடுப்பைத் தூண்டிய காரணங்களை விரிவாக அறிய வேண்டும். இராஜராஜனும், அவனது மகன் இராஜேந்திரனும் மேற்கொண்ட இலங்கைச் சோழப் படையெடுப்பு முதலில் திருகோணமலையை இலக்கு வைத்தே நடத்தப்பட்டிருக்கிறது. சோழர் காலத்திற்குச் சற்று முன்பாகத் தென், தென் கிழக்காசிய நாடுகளின் அரசியலிலும், வணிகத்திலும் நிகழ்ந்த மாற்றங்களே சோழர்களின் அயலுறவுக் கொள்கையின் பல திருப்பங்களை உருவாக்கியது. "ஈழத்தினைத் தமது ஆணைக்குக் கீழ் கொண்டு வருதல் உபகண்டத்தில் தான் கொண்டிருந்த மேலாதிக்கத்தினை முன்னெடுத்துச் செல்லும் நடவடிக்கையாக மட்டும் அமையாது; கடலாதிக்கமும் கொண்ட அரசாகச் சோழ அரசை மாற்றும் அவரது திட்டத்தின் ஒரு அங்கமே எனலாம்." என இலங்கைப் படையெடுப்புக் குறித்து நீலகண்ட சாஸ்திரியின் குறிப்பு அவதானிக்கத்தக்கது. சோழரின் கடலாதிக்கத் தேவைக்கு தென் இந்திய கடல் எல்லையில் இருந்த திருகோணமலைத் துறைமுகம் ஒரு தவிர்க்க முடியாத தேவையாக இருந்திருக்கின்றது.

சோழருடைய படையெடுப்பு நிகழ்ந்த கால இலங்கையின் அரசியற் சூழ்நிலை பலமற்று இருந்தது என சூளவம்சம் கூறுகின்றது. சோழருடைய படையெடுப்பு நிகழ்ந்த கால கட்ட இலங்கை அரசியற் பின்னணி மிகவும் குழப்பம் நிகழ்ந்ததாக காணப்பட்டிருக்கின்றது. வலிமையற்ற மன்னன் மகிந்தன் நிர்வாகக் கட்டுப்பாட்டை இழந்த தோடு, மக்களின் ஆதரவையும் இழந்திருந்தான். பெரும்பாலான மக்கள் வரி செலுத்த மறுத்ததோடு குழப்பத்தை உருவாக்கினார்கள். அரண்மனை ஊழியர்கள் ஊதியம் கிடைக்காமல் அரசனுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தனர். தங்கள் கையில் இருந்த அம்பு வில்லுடன் அரசனுக்கு எதிராக வன்முறையில் இறங்கினார்கள் என சூளவம்சம் கூறுகின்றது.

5ம் நூற்றாண்டில் நிகழ்ந்த துருக்கி எழுச்சி காரணமாக மேற்கு ஆசியாவிற்கும் இந்தியா உள்ளிட்ட தென் ஆசிய நாடுகளுக் கிடையிலான தரை வழித் தொடர்பு துண்டிக்கப்பட வேண்டியேற் பட்டது. இதனால் வணிகம் பாதிக்கப்படவே தரைவழிப் பாதைக்கு மாற்றாக கடல்வழிப் பாதையின் பயன்பாடு மேலும் அதிகளவு அதிகரிக்க வேண்டிய தேவையை உருவாகியது. இலங்கைக்கு கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலங்களில் இருந்தே கடல் வழி வணிகத் தொடர்பு இருந்த போதிலும், மேற்காசிய தரைவழித் தொடர்புத் துண்டிப்பினால் தென்னாசிய வணிகர்கள் கடல் வழிப் போக்குவரத்தில் மட்டும் அதிகளவு தங்கியிருக்க வேண்டியிருந்தது.



இதனால், திருகோணமலைத் துறைமுகம் மேற்கு ஆசிய, தென் கிழக்காசிய வணிகக் கப்பல்கள் தரித்து நின்று வணிகப் பரிமாற்றங் களைச் செய்யக் களமாக மாறியது. சுமார் ஏழாம், எட்டாம் நூற்றாண்டில் வலிமை பெற்று வந்த சிறி விஜயப் பேரரசின் வணிக வளர்ச்சி சோழரின் வணிக ஆதிக்கத்திற்கு தடையாக இருந்தது. குறிப்பாக இந்தியாவிற்கும், சீனாவிற்கும் கடல் வழி மத்தியில் வணிக ஆதிக்கம் செலுத்திவந்த சிறி விஜயம் (மலேசியா) சோழரின் பொருளாதார வளர்ச்சிக்குத் தடையாக இருந்தது. சோழர்கள் சிறி விஜயப் பேரரசின் மீது படையெடுத்து தமது ஆதிக்கத்தினை உருவாக்குவதற்குப் பதிலாக கரையோர நகரங்களைத் தாக்கித் திறை பெற்றதோடு நிறுத்திக் கொண்டார்கள் என இந்திய வரலாற்று ஆய்வாளர் நீலகண்டசாஸ்திரி கூறுகின்றார். அரேபியர்களின் இந்திய நாட்டின் தென்புறக் கரையோரப் பகுதிகள், மற்றும் தென் கிழக் காசிய நாடுகளில் வணிக ஆதிக்கத்தை முறியடிக்கவே இப்பகுதி நாடுகளை இராஜராஜன், இராஜேந்திரன் கைப்பற்றினர் என வரலாற்றாசிரியர் ரோமிலா தாப்பர் கூறுவர். (14) மேற்காசிய, தென் கிழக்காசிய வணிகர்கள் இடையில் சந்திக்கும் கொள்ளும் இடமாக இலங்கை விளங்கியதால் இலங்கை மீதான படையெடுப்பு சோழரின் அரசியற் திட்டத்தில் தவிர்க்க முடியாமல் முதலிடம் பெற்றது. இலங்கையைக் குறிப்பாகத் திருகோணமலைத் துறைமுகத்தை தமது ஆட்சியின் கீழ் சோழர் கொண்டு வரவேண்டிய தேவையை சோழரின் அயலுறவுக் கொள்கையே தீர்மானித்தது. இராஜராஜ சோழன் வங்காள விரிகுடாவைச் சோழப் பேரரசின் ஒரு வாவியாக மாற்றினான் என வரலாற்று விமர்சகர்கள் கூறுமளவிற்கு சோழரின் கடல் ஆதிக்கம் வலிமை பெற்றிருந்தது. இராஜராஜனின் மெய்க்கீர்த்தியில் அவரது படையெடுப்புகளின் சாதனை விபரிக்கப்பட்டுள்ளது.

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலைக் கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியுந்
தடிகை பாடியும் நுளம்ப பாடியுங்
குடமலை நாடுங் கொல்லமுங் கலிங்கமும்
முரட்டொழிற் சிங்களர் ஈழமண் டலமும்
இரட்ட பாடி ஏழரை யிலக்கமும்
முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரமுந்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்
எழில்வளர் ஊழியு ளெல்லா யாண்டே செழியரைத்
தேசுகொள் கோராச கேசரி வன்மரான
உடையார்ஸ்ரீ ராசராச தேவர்க்கு யாண்டு"

(சதாசிவ பண்டாரத்தார்,T.V., பிற்காலச் சோழர் சரித்திரம், 1954, சென்னை, பக். 296 )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org